# இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில்

# கலாநிதி கே.எம்.எச். காலிதீன்



இக்பால் அலி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் கலாநிதி கே.எம்.எச். காலிதீன்



இக்பால் அலி

*வெளியீடு*
இலங்கை தென்கிழக்கு ஆய்வமையம்,
பல்கலைக்கழகம் பள்ளிவாசல்,
பேராதனை.
T.Phone. 077- 801512 Email: Jamahir: @arts.pdn.ac.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## BIBLIOGRAPHICAL DATA

| | |
|---|---|
| TITILE OF THE BOOK | : ILANNKAI MUSLIMKALIN WARALATRIL KALANITHI KHALIDEEN. |
| EDITOR | : IQBAL ALI. |
| FRIST EDITION | : DECEMBER 1998. |
| COPY RIGHT | : AUTHOR |
| PUBLISHERS | : SOUTH EASTERN RESEARCH FORUM |
| COVER DESIGN BY | : A.M.NIYAS. |
| PRINTERS | : DHANIZ PRINTERS,<br>108/2, MELWATTE,<br>PARAGAHADENIYA, WEUDA,<br>TEL. 037-99103, 23887. |
| ISBN NO. | : 955-8194-01-8 |
| PRICE | :RS.100/- |

| | |
|---|---|
| நூலின் பெயர் | இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில கலாநிதி கே.எம்.எச் காலிதீன் |
| ஆசிரியர் | இக்பால் அலி |
| முதலாம் பதிப்பு | 1998 டிசம்பர் |
| பதிப்புரிமை | ஆசிரியருக்கே |
| வெளியீடு | இலங்கை தென்கிழக்கு ஆய்வமையம் |
| அட்டைப் படம் | ஏ.எம் நியாஸ் |
| அச்சகம் | தானிஸ் பிரின்டர்ஸ்<br>108/2, மெல்வத்த<br>பறகஹதெனிய, வேவுட.<br>☎ 037-99103,பெ:037.23887. |
| விலை | 100/= ரூபாய் |
| ISBN | 955 - 8194 -10 -8 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

எமது மண்ணில் ஓயாத சண்டைகளும், சச்சரவுகளும் நடக்கின்றன. அந்த துயரங்களும், சம்பவங்களும், நிறைந்த வாழ்வில் எமது அமையம் கலை இலக்கியத்துறையில் பிரக்ஞைபூர்வமான தொழிற்பாட்டின் மூலம் ஈழத்து இலக்கிய வரலாற்றில் பெரும் எடுகோளாகப் பேசப்பட்டு வருகின்றன.

அது இன்னுமொரு (Aesthetic Production) அழகுணர்வுமிக்க உற்பத்திக் கருவூலமொன்றை கலாநிதி காலிதீன் என்னும்பொது பிதுரார்ஜீதத்திலிருந்து கலைவடிவத்தினூடே எமது அமையத்தின் தலைவரும் கவிஞருமான தோழர் இக்பால் அலி அள்ளி வழங்குகின்றார். ஜனநாயகம்தான் தன் கடமையெனக்கொண்டு இயங்கும் காலிதீனின் சமூக வாழ்வியல் கூறுகளை ஆய்வியல் ரீதியாக இக்பால் அலி நிச்சயப்படுத்துகின்றார். எனவே காலிதீன் பேரறிவாளர்கள், எதிர்கால சந்ததியினர்கள் ஆகிய அனைவருக்கும் ஓர் இனிய சங்கமம்.

நல்லோர் என்றும் உயர்ந்து நிலைப்பர் என்பது நிச்சயம். அவர்களை நவ தொல்லுகம் எப்போதும் போற்றும், புகழும், தூய்மைபாராட்டும். எனவே, கலாநிதி காலிதீன் கூட அந்த எழுச்சிப்பாரினில் ஓர் ஒளிவிளக்காய் சிறந்து விளங்குகின்றார் என்பதற்கு இந்நூல் ஒரு எடுத்துக்காட்டாகும்.

இக்பால் அலி "முற்றத்திற்கு வாருங்கள்" என்னும் முதல் கவிதைத் தொகுதியிலே அரச விருதைப் பெற்ற ஓர் இளம் கவிஞர்; இலக்கிய குலப்பண்பாட்டிலே போற்றிப் பேணப்படும் ஒரு தமிழின்பம். மக்களுக்கு தேவையான நல்லதொரு கதிரொளியொன்றை வழங்கும் போது நாம் பெருமிதம் அடைவோம்.

இக்பால் அலி இந்தக் காலத்தின் கட்டாய தேவை. ஓர் உண்மையான சமூக சேவையாளனுக்கு செழுமையூட்டிய நிறைமதியாய் இக்பால் அலி திகழ்கின்றார் அவர் பணி தொடர என் வாழ்த்துக்கள்.

| | |
|---|---|
| விரிவுரையாளர், | பி.எம்.ஜமாஹிர் |
| மெய்யியல் துறை | தவிசாளர், |
| பேராதனை பல்கலைக்கழகம் | இலங்கை |
| பேராதனை. | தென்கிழக்கு ஆய்வமையம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் வி. பத்மநாதன். **B.A, P.hd London.**
வரலாற்றுத்துறை.
துணைத்தலைவர்,
பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு
கொழும்பு.
உறுப்பினர்,
தேசிய கல்வி ஆணைக்குழு.
தலைவர்,
அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மன்றம்
இலங்கைக் கிளை.



# ஆசியுரை

இந்நூலின் கதாபாத்திரமாக விளங்கும் காலிதீன் அவர்கள் நெடுங்காலமாக என்னோடு நெருங்கிப் பழகும் நண்பர். முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இவரை முதன் முதலாகச் சந்தித்தேன். இவரும் இவரது நண்பனாக இருந்த மன்னாரைச் சேர்ந்த ஜருக் என்பவரும் மாலை நேரங்களில் நான் தங்கியிருக்கும் விடுதியிலே வந்து சந்திப்பது வழக்கம்.

காலிதீன் அமைதியானவர்; அடக்கமானவர். அவர்களுடைய அன்பும் அடக்கமான போக்கும் என்னைப் பெரிதும் கவர்ந்தது. இவர்கள் இருவரும் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் கல்வி பயின்ற மாணவர்கள்.

காலிதீன் தனது அடக்கமான பண்பினாலும், விடா முயற்சியினாலும் பலதடைகளைத் தாண்டி பட்டம் பெற்று பின்னர் பல்கலைக்கழக விரிவுரையாளராகக் கடமையாற்றியவர். இப்பொழுது தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலாசாரப் பீடத்தின் பீடாதிபதியாக விளங்கும் தகைமை வாய்ப்பினைப் பெற்றுள்ளார்.

கல்வியிலே பின்தங்கிய கிராமமாக அந்நாட்களிலே கருதப்பட்ட கிண்ணியாவில் இருந்து கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் கல்வி பயின்று பின்னர் பல்கலைக்கழகம் புகுந்து பட்டதாரியான இவர் இப்பொழுது பல்கலைக்கழகம் ஒன்றுக்குப் பீடாதிபதியாக விளங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பிறந்து வாழ்ந்த ஊருக்கும், அவருடைய ஆசிரியர், நண்பர்கள் ஆகிய எல்லோருக்கும் பெருமை தரும் விடயமொன்றாகும்.

இவர் வாழ்க்கையிலே புரிந்த சாதனைகளோ பல. கல்லூரியில் மாணவத் தலைவராகவும், பல்கலைக்கழகத்தில் "முஸ்லிம் மஜ்லிஸ்" தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். விவாதரங்குகளிலும் போட்டிகளிலும் பல தடவை பங்கு பற்றி பரிசில்கள் பெற்றுள்ளார்.

அகில இலங்கை இளம் பட்டதாரி சங்கத்தினை ஆரம்பித்து சாதனைகளைப் புரிந்துள்ளார். அந்தச் சங்கத்தினுடைய முதலாவது தலைவராகவும் பணியாற்றியுள்ளார் என்பதை இதில் குறிப்பிட வேண்டும். அகில இலங்கை கதீப்மார் சம்மேளத்தை ஸ்தாபித்து அதன் மூலம் ஆற்றிவரும் பணிகள் எண்ணற்றவை. அதனுடைய சிறப்பும் இவருக்கு உண்டு.

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் அறபு மொழியை செம்மையாக கற்பிப்பதற்கு பாடநெறியினை இவர் உருவாக்கி கொடுத்தார். அதேவேளை இஸ்லாமியப் பாட நெறி சம்பந்தமாகவும் இன்னும் இதனைப்போன்ற ஆக்கபூர்வமான ஆக்கங்களைச் செய்துள்ளார். இவருடைய கல்வி வாழ்க்கையில் ஈட்டிய சாதனைகளையும், ஆற்றிய பணிகளையுமிட்டு நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவர் தன்னுடைய இனிய பண்பினால் எல்லோரையும் கவரும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றார். இவருக்குப் பகைவர்கள் எவருமே இல்லை. அது ஆண்டவனுடைய கொடையாகும்.

இவர் மேலும் பல சாதனைகளைப் படைத்ததோடு நில்லாது தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம் உன்னதமான வளர்ச்சியை அடைவதற்கான வேண்டிய பணிகளைப் புரிவதற்கும், வாழ்க்கையிலே இவர் மேன்மைபெறுவதற்கும், அத்துடன் நூலாசிரியர் இது போன்ற பல நல்ல நூல்களைத் தரவேண்டும் எனவும் எல்லா வல்ல இறைவனிடம் இவர்களுக்கு ஆசி வழங்க வேண்டும் என்று மிகப் பிரியமுடன் பிரார்த்திக்கின்றேன்.

07.12.1998 பேராசிரியர் வி. பத்மநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை முழு மனிதனாக்கிவிட்டு

மறைந்து சென்ற

என் அருமைத் தந்தை

# மர்ஹூம் அசனார் அலியார்

அவர்களுக்கும்

தமிழ் முஸ்லிம் இலக்கியத்திற்கு

ஒரு

பாலமாய் அமைந்த

மலையகக் கவிஞர்

மகாகவி குறிஞ்சித் தென்னவன்

அவர்களுக்கும்

இந்நூல் சமர்ப்பணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் க. அருணாசலம்
தலைவர்,
தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

# முன்னுரை

தேடிசோறு நிதந்தின்று பல சின்னஞ் சிறுகதைகள் பேசி மனம்வாடித் துன்பம் மிக உழன்று பிறர்வாடப் பல செயல்கள் செய்து நரை கூடிக் கிழப்பருவமெய்திக் கொடுங் கூற்றுக் கிரையென்ப பின்மாயும் பல வேடிக்கை மாக்களைப் போலன்றி மாநிலம் பயனுறும் வகையிற் பல்வேறுதுறைகளிலும் பணியாற்றியவர்களை வாழும் போதே வாழ்த்துவோம், அவர்களது சீரிய வாழ்க்கை வரலாற்றினை எழுதுவோம் என்னும் கருத்துகள் இற்றை நாளில் முனைப்புப் பெற்றுவருகின்றமையை அவதானிக்கலாம். இச் செயற்பாடுகள் சமூகத்திற்கு பல்வேறு வழிகளிலும் தூண்டுதலை அளிப்பனவாகவும், அவர்களைத் தகுந்த முறையிற் கௌரவிப்பனவாகவும், அவர்களின் செயற்பாடுகள் பற்றி ஏனையோரை உணரவைப்பனவாகவும், எதிர்காலச் சந்ததியினரை நல்வழியிற் செலுத்தவும் பணிகள் பல ஆற்றவும் தூண்டுவனவாகவும் விளங்குதல் குறிப்பிடத்தக்கது.

எளிமையும் அமைதியும் நிறைந்த கோலம்; சிந்தனை தேங்கிய சாந்த முகம்; மென்மையும் இனிமையும் நிறைந்த பேச்சு; மிக மெதுவான நடை. இவற்றின் மொத்த உருவமே மௌலவி, அல்ஹாஜ் கலாநிதி.கே.எம்.எச்.காலிதீன் அவர்கள். தமது தனித்துவம் மிக்க ஆளுமையாலும் இதய சுத்தியுடன் கூடிய மானிடநேயத்தினாலும் தாம் பிறந்து வளர்ந்த இஸ்லாமிய சமுகத்துக்கும், பின்பற்றி வாழ்ந்து கொண்டிருக்கும் இஸ்லாம் சமயத்துக்கும், அவற்றையும் கடந்து இன, மத,மொழி, பிரதேச வேறுபாடுகளின்றி அனைவருக்கும் ஆற்றிவரும் நற்பணிகளாலும் பல்கலைக்கழக வட்டாரத்திலும் அதற்கு வெளியிலும் பலரதும் அன்புக்கும் நட்புறவுக்கும் பாராட்டுதலுக்கும் விளங்கிவருபவர்.

1960 களின் பிற்பகுதியில் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே கலாநிதி காலிதீன் அவர்களும் நானும் ஒரு சாலை மாணவராகப் பயின்று கொண்டிருந்தோம்; மிக நெருங்கிய நண்பர்களானோம். விடுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபத்திலிருந்து விரிவுரைமண்டபம் வரை, என இருவரும் ஒன்றாகச் செல்வோம்; பல விடயங்கள் பற்றியும் உரையாடுவோம். "விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்பர். பல்கலைக்கழக மாணவனாகப் பயின்று கொண்டிருந்த காலப் பகுதியிலேயே கலாநிதி காலிதீன் அவர்களின் நற்குண நற் செய்கைகளையும், அரும்பணிகளையும் ஆற்ற வேண்டும் என்னும் ஆர்வம் நாட்டம் அதிகம் குடிகொண்டிருந்தமையையும் அவதானிக்க முடிந்தது.

பல்கலைக்கழக படிப்பை முடித்துக் கொண்டு தாம் பயின்ற ஸாஹிறாக் கல்லூரியிலும் பின்னர் கம்பளை ஸாஹிறாக் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்த போதும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே விரிவுரையாளராகப் பணிபுரிந்து கொண்டிருந்த போதும், கலாநிதிப்பட்ட ஆய்வின் பொருட்டு துருக்கி நாட்டின் அங்காரப் பல்கலைக்கழகத்துக்கும் சென்றபோதும், வருகை தருவிரிவுரையாளராக உலகின் பல்கலைக்கழகங்கள் பலவற்றுக்குச் சென்ற போதும், சூழ்நிலைகளால் ஒரே நாளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தையும் வடபுலத்தையும் விட்டு மாணவர்களுடன் அகதியாக வெளியேறிய போதும் இடம்பெயர்ந்த மாணவர்களின் நலனுக்காகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணைப்பதிகாரியாகக் கடமையாற்றிய போதும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலே பீடாதிபதியாகக் கடமையாற்றிக் கொண்டிருந்த போதும் "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்பதனை அருள்வாக்காக ஏற்று இடையிறாது பணிகள் பல ஆற்றிவருபவர்.

இத்தகையதொரு பெரியாரின் வாழ்வையும், அவர் ஆற்றியுள்ள, ஆற்றிக் கொண்டிருக்கும் அரும் பணிகளையும், இயன்றவரை சிந்தாமல் சிதறாமல் கவிஞரும் எழுத்தாளருமான இக்பால் அலி இந்நூலிலே வடித்துத்தர முயன்றுள்ளார். கலாநிதி காலிதீனின் வாழ்வும் பணிகளும் பற்றிய இந்நூல் விரிவானதோ முழுமையானதோ அன்று. ஐம்பத்து நான்கு வயதுடைய காலிதீனின் பணிகள் இத்துடன் முடிந்து விடவில்லை. அவரது எதிர்காலம் அவரின் முன்னால் நீண்டு கிடக்கின்றது. இது காலவரை அவர் ஆற்றியுள்ள பணிகளிலும் பார்க்க ஆற்றவேண்டிய பணிகள் அதிகம் எனலாம். அதற்கு எல்லாம் வல்ல இறைவன் அருள் கிடைப்பதாக. இந்நிலையில் இக்பால் அலி மட்டுமல்ல எவருமே அவரது வாழ்வையும் பணிகளையும் தற்போதைக்கு முழுமையாகவோ விரிவாகவோ எழுத முடியாது என்பதை, நாம் மனதில் கொள்ள வெண்டும். எனினும் எதிர்காலத்தில் அத்தகைய ஆய்வுகளை மேற் கொள்வோர்க்கு இந்நூல் பல வகையிலும் முன்னோடியாக அமைந்துள்ளது என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் பிறந்து வளர்ந்த சமூகத்துக்கு அரும்பணிகள் ஆற்றி மறைந்து போன பெரியார்களின் வாழ்வையும் பணிகளையும் எழுதப்புகுமிடத்து ஏற்படும் இடர்பாடுகள் பலவாகும். அத்தகைய பெரியார்கள் பிறந்த திகதி என்ன? அமரத்துவம் அடைந்த திகதி என்ன? என்பன முதற் கொண்டு அவர் திருமணம் செய்தவரா? செய்யவில்லையா? எப்போது திருமணம் செய்தார்? முதலியனவரை உண்மைச் செய்திகளை அறிவதற்கு "மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டிராமல்" வாழ்ந்து கொண்டிருக்கும்போதே உண்மைச் செய்திகளை எழுதிவெளியிடுதல் எத்தனை உயரிய பணியாகும். கவிஞரும் எழுத்தாளருமான இக்பால் அலியின் பணியும் இத்தகையதே.

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியாவைச் சேர்ந்த ஈச்சந்தீவு என்னும் குக்கிராமத்திற் பிறந்து வளர்ந்து கிண்ணியா மகாவித்தியாலயத்திலும் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியிலும் பயின்று கொண்டிருந்த காலத்திலேயே காலிதீன் ஆற்றிய சாதனைகளை ஆதாரங்களுடன் விளக்குவதாக நூலின் முதற்பகுதி அமைந்துள்ளது.

போராதனையில் பல்கலைக்கழக மாணவனாகப் பயின்று கொண்டிருந்து போதும் பின்னர் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி, கம்பளை ஸாஹிறாக் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்த போதும், அவர் ஆற்றியுள்ள பணிகளை விவரிப்பதாக நூலின் இரண்டாம் பகுதி விளங்குகின்றது.

அகில இலங்கை மௌலவி ஆசிரியர்கள் பேரவையின் மத்திய கவுண்சில் தலைவராகவும், அகில இலங்கை இளம் பட்டதாரிகள் சங்கத்தின் தாபகராகவும், தலைவராகவும், பேராதனைப் பல்கலைக்கழகப் பள்ளிவாசல் கட்டிடவேலைகளைப் பூர்த்திசெய்ய முயன்றவர்களுள் ஒருவராகவும், முஸ்லிம் மஜ்லிஸின் தலைவராகவும் கொழும்பு பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் தாபகராவும் அதன் செயலாளராகவும் கடமையாற்றிய காலிதீன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1976 ஆம் ஆண்டு விரிவுரையாளராக நியமனம் பெற்றது முதல் அகதியாக வெளியேறிய வரையிலான காலப்பகுதியில் அவர் மேற்கொண்ட பணிகளை விளக்குவதாக நூலின் மூன்றாம் கட்டம் அமைந்துள்ளது.

கலாநிதி காலிதீன் மேற் கொண்ட அரும் பணிகளுள் விதந்து கூறக் கூடிய ஒன்று; யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து ஏறத்தாழ அறுநூறு முஸ்லிம், தமிழ் மாணவர்கள் இடம் பெயர்ந்து கல்வியைத் தொடரமுடியாது தவித்துக் கொண்டிருந்த வேளையில் காலிதீன் அவர்கள் இன வேறுபாடு காட்டாது அம்மாணவர்களுக்குக் கைகொடுத்து உதவியமையே எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது இப்பணிகளையும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இன்று பீடாதிபதியாக அமர்ந்து ஆற்றிக் கொண்டிருக்கும் பணிகளையும் விளக்குவதாக நூலின் இறுதிப் பகுதி அமைந்துள்ளது.

இந்நூல் பதினாறு உபதலைப்புக்களைக் கொண்டுள்ளது. உபதலைப்புக்கள் ஒவ்வொன்றும் மிகப் பொருத்தமான முறையிலும் விடயத்தெளிவை ஏற்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மார்க்க அறிஞராகவும் பன்மொழிப் புலவராகவும் பன்னூலாசிரியராகவும் சமூகத்தொண்டனாகவும், சமயப் பெரியவராகவும், இலக்கிய ஆர்வலராகவும், கல்விமானாகவும் விளங்கும் கலாநிதி காலிதீன் அவர்கள், மென்மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து அரும்பணிகள் பல ஆற்ற எல்லாம்வல்ல இறைவன் அருள் புரிவாராக. இளங்கவிஞனாகவும், எழுத்தாளராகவும், இலக்கிய ஆர்வலராகவும், சுறுசுறுப்பு மிக்கவராகவும் விளங்கும் இக்பால் அலி அவர்களின் பணிகள் தொடர்வதாக.

1998-10-30 பேராசிரியர் க. அருணாசலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.எஸ்.எம். அனஸ்
முது நிலை விரிவுரையாளர்
மெய்யியல்துறை, பேராதனை பல்கலைக்கழகம்

## அணிந்துரை

கிழக்கு மாகாணம் தந்த நல் அறிவாளிகளில் கலாநிதி மௌலவி கே.எம்.எச்.காலிதீனும் ஒருவர். கல்வி வளர்ச்சியோடும், சமூக உயர்வுக்கான பணிகளோடும், பல்கலைக்கழக சமூகத்தோடும் பிரிக்கமுடியாத நிலையில் தமது வாழ்வை மௌலவி காலிதீன் பிணைத்துள்ளார்.

சமூக முன்னேற்றத்துக்கும், சன்மார்க்க நடவடிக்கைகளுக்கும் தம்மை அர்ப்பணித்துச் செயல்படும் அவரது போக்கு அவரது இரத்தத்தில் ஊறியதாகும். முஸ்லிம்களின் கல்வி முன்னேற்றம் பற்றி நிதமும் சிந்தித்து வருபவர்களில் அவரும் ஒருவர். உயர் கல்வியிலும் குறிப்பாகப் பல்கலைக்கழகக் கல்வியிலும் முஸ்லிம்கள் தமக்குரித்தான வெற்றிகளைக் காண்பதற்கும் போராட்டங்களில் பங்கு கொள்ளும் அளவுக்கு அவரது எண்ணங்களில் ஆழமான அக்கறை இருந்தது.

கலாசாரப் பல்கலைக்கழகங்கள் சிறுபான்மைச் சமூகங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்திருந்த கடந்த காலங்களில் முஸ்லிம்களுக்கான கலாசாரப் பல்கலைக்கழகம் பற்றிய கருத்தைப் பலப்படுத்தி வந்தவர்களில் காலிதீன் அவர்களுக்கு முக்கியமான பங்குமுண்டு.

முஸ்லிம்களின் கல்வி முன்னேற்ற யுகத்தின் முன்னோடிகளில் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களை தற்கால முஸ்லிம் கல்வி எழுச்சியின் தந்தையாக அவர் மதித்தார். கல்வித்துறையில் பதியுத்தீன்மஹ்மூத் ஏற்படுத்திய சாதனைகளை கட்டுரை வடிவிலும் பிரசார வடிவிலும் மக்களிடம் எடுத்துச் சொல்வதில் காலிதீனின் பங்கு முக்கியமானது. அதனை முஸ்லிம்களின் கல்வி முன்னேற்றத்தில் காலித்தீனுக்கிருந்த ஆழமான பற்றுதலின் விளைவு எனக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அவர் அறபு இஸ்லாமிய நாகரிகத் துறைத் தலைவராகப் பணிசெய்தபோது அத்துறையின் வளர்ச்சிக்கு அயராதுழைத்தார். முஸ்லிம்களின் கல்வி முன்னேற்றம் பற்றியும் சமூக முன்னேற்றம்பற்றியும் அவர் தீவிரமாகச் சிந்தித்தாராயினும் சக தமிழ்ச் சகோதரர்களோடு அவர் கொண்டிருந்த உறவும், நல்லொழுக்கமும் தனது சமூகம் என்ற உணர்வுக்கு சற்றும் குறைந்ததல்ல.

யாழ்ப் பல்கலைக்கழகம் கட்டியெழுப்பப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் இந்திரபால, பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் சிவத்தம்பி போன்றவர்களின் நல்லன்பையும் நம்பிக்கையையும் பெற்றவராக விளங்கினார். பல்கலைக்கழகத்தின் சாதாரண ஊழியர்களிருந்து பட்டப்படிப்பு மாணவர்கள் வரை அவர் காட்டிய நல்லெண்ணமும் நம்பிக்கையும் அன்று நல்லுறவின் இலக்கணமாகப் பிரகாசித்தது.

மௌலவி காலிதீன் அடிப்படையில் ஒரு வரலாற்று மாணவர். உயர்தர வகுப்பிலும் பல்கலைக்கழகத்திலும் வரலாறு அவரது விருப்பப்பாடம். முதுமானித்தேர்வுக்கும் அவர் வரலாற்றையே தெரிவு செய்தார். அவர் துருக்கியில் பட்டமேற்படிப்புக்காக தெரிவு செய்திருந்த தலைப்பும் இந்திய முஸ்லிம் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். இலங்கையில் அவரது வரலாற்றுக் கல்விப்பயிற்சியில் பேராசிரியர் இந்திரபாலவின் நெறிப்படுத்தல் சிறப்புடன் குறிப்பிடப்பட வேண்டியதாகும். இலங்கை முஸ்லிம்களின் ஆதிகுடியேற்றம் பற்றி அவர் முதுமானிப்பட்டத்திற்காக எழுதிய கட்டுரை பின்னர் நூலாகவும் வெளியிடப்பட்டது.

இஸ்லாமிய சமய வரலாற்று அறிவில் தேர்ச்சியும், அறபு மொழிப் பயிற்சியும் பாரசீக துருக்கி மொழிகளின் தொடர்பும் உள்ள ஒருவருக்கு இலங்கையில் ஆதி அறபு பாரசீக இஸ்லாமியத்தொடர்புகளை மூல வடிவங்களிருந்து அறிந்து எழுதும் வாய்ப்பு அதிகமானதும், புத்தளம் கடலேரிக்கு அப்பால் உள்ள அறபு முஸ்லிம், ஆதிகுடியேற்றத் தளங்களில் ஒன்றாகப் புகழ்துந்றைக்கப்படும் “குதிரை மலை” அறபுப் பெயரை(ஜபளுல் பர்ஸ்) அவரது கட்டுரையிலிருந்து படித்த மகிழ்ச்சி இன்னும் என் மனதில் அழியாதுள்ளது.

இஸ்லாமியக்கருத்துகளிலும் கொள்கைகளிலும் காலிதீன் உறுதியான விட்டுக் கொடுக்காத மாற்றத்தை அனுமதிக்காத போக்குள்ளவர். இந்த விடயத்தில் எனது போக்கு வேறுவிதமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மற்றவர்களின் கருத்துக்களை தான் உடன்படாவிட்டாலும் மதிக்கின்ற அல்லது அனுசரிக்கின்ற போக்கு காலிதீனின் சிறப்பான குணாம்சங்களில் ஒன்றாகும். இஸ்லாமிய கருத்துக்களில் சீர்த்திருத்தம், முற்போக்கு காலத்தை வெல்லக் கூடிய புதிய எண்ணங்கள் பற்றிய எனது கருத்துக்களோடு அவர் இலகுவில் முரண்படுவார். ஆனால் அதில் சாந்தமும் மற்றவர்களின் கருத்துக்களுக்கு செவிசாய்க்கும் போக்கும் அதில் கலந்திருக்கும்

"உலகளாவிய இஸ்லாமிய ராஜ்யம்" என்ற பாரிய கொள்கையில் நம்பிக்கை உள்ளவர் அவர் என்பது எனது எண்ணம். ஈரானியப் புரட்சியில் அவர் அந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கிறார். இஸ்லாமியப் புரட்சியும் இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு மாற்றமின்றி விஸ்வாசமாக இருப்பதும் என்ற இரு அம்சங்கள் அவரின் உணர்வுகளிருந்து பிரிக்க முடியாதது. முதலாவது கருத்தில் அவர் ஒரு முற்போக்காளரா? இரண்டாவது கருத்தில் அவர் ஒரு பழமை வாதியா? என்று விவாதிக்க இது இடமல்ல. ஆனால் இஸ்லாத்தின் இலட்சியங்களில் அசைக்க முடியாத பற்றுள்ளவர் என்பது மட்டும் உறுதி. சமூக முன்னேற்றமும் உலகளாவிய இஸ்லாம் என்ற (VISION) தூர அகப்பார்வையிலும் அவரது இலட்சியங்கள் என்றும் சிந்தனைக் கல்வியிலுள்ள கோட்பாடுகள் என்றும் துணிந்து கூறலாம்.

ஈரானிய சிந்தனைகளிலும் அவர் கொண்டுள்ள ஈடுபாட்டை நான் இவ்வாறுதான் புரிந்து கொள்கிறேன். ஒருவிதத்தில் நவயுகச்சிந்தனைகளுக்கு அவர் தனது மாறாத சமயத்திட்டத்தின் முன் அவரையும் அறியாது இடமளிக்க ஈரானிய இஸ்லாமியப் புரட்சி இடமளித்துள்ளது என்று கருதலாம்.

அவ்வாறே நவீன இஸ்லாமிய சீர்திருத்தவாதிகளான செய்யத் அகமத்கான், ஆப்கானி என்போரின் முன்னேற்றமான கருத்துக்களிலும் அல்லாமா இக்பாலின் சிந்தனைகளிலும் ஆழமான ஈடுபாட்டைக் காட்டி வருபவர் என்ற பின்னணியிலிருந்து நோக்கும் போது நவயுகத்திற்கான இஸ்லாமியச் சிந்தனையின் தேவைகளை உணர்த்துபவர் என்றும் அதை சமூக மட்டத்திலும் கல்விமட்டத்திலும் முன்னெடுப்பதற்கு தயாராக இருப்பவர் என்றும் காலிதீனை தயக்கமின்றி வர்ணிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை வாழ்விலிருந்து பல்கலைக்கழக மாணவ வாழ்க்கை ஆசானாகக் கடமையாற்றும் காலம் அனைத்திலும் கல்வி நடவடிக்கைகளுக்கு அப்பால் சமய அறிவு நடவடிக்கைகளையும் அதற்கான இயக்கங்களையும் உருவாக்குவதிலும் நடத்துவதிலும் தனது முழு முயற்சியியை செலவிட்டுள்ளார் என்பதைத் துணிந்து கூறமுடியும்.

அவர் உருவாக்கிய இயக்கங்களுள் "கத்தீப்மார் சம்மேளனம" எமது கருத்தைக் கவரக் கூடியது. மிகவும் பிற்போக்கான சூழ்நிலையிலும் கவனிப்பாரற்று காணப்பட்ட முஸ்லிம் பள்ளிவாசல் சமய நடவடிக்கைகளின் முதுகெலும்பான கத்தீப்களையும், முஅஸ்ஸின்களையும் பற்றி முதன் முதல் கவனத்திற் கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க நடவடிக்கை இதுவாகும்.

வறுமை உட்படப் பல்வேறு சமூகப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வாழ்வைப் போராட்டமாக நடத்திக் கொண்டிருந்த ஒரு பிரிவினரைப் பற்றி எடுக்கப்பட்ட நல்ல முயற்சி என இதனை வர்ணிக்கலாம். அவர்களின் உழைப்பு சுரண்டப்படுவதையும் அவர்களின் சேமநலங்கள் புறக்கணிக்கப்படுவதையும் அவர்களில் பலர் போதிய பயிற்சிகளற்றவர்களாகயிருப்பதையும் சுட்டிக்காட்டி இப்பிரச்சினையிலிருந்து அவர்களை விடுவிக்க கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக இச்சம்மேளனம் ஆற்றிவரும் பணிகள் சமூக முக்கியத்துவமிக்கதாகும்.

கத்தீப்மார் சம்மேளனம் கத்தீப்மார்களின் நலன்களை மட்டுமன்றி முஸ்லிம் சமுதாய நலன்களுக்காகவும் சில முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. முஸ்லிம்களுக்கென தனிப்பட்ட கலாசார அமைச்சு வேண்டும் என்ற கோரிக்கையை பலவருடங்களுக்கு முன்னர் மகஜராக அரசாங்கத்திற்கு சமர்ப்பித்தது, இத்தகைய நடவடிக்கைகளில் ஒன்றாகக் கூறலாம். கத்தீப்மார்கள் சங்க மாநாட்டில் இது ஒரு பிரேரணையாக முன்வைக்கப்பட்டபோது மர்ஹூம் Dr. கலீல் (முஸ்லிம் லீக் தலைவர்) அவர்கள் இதனை வழிமொழிந்துள்ளார்.

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாரதூரமானமுறையில் சீர் குலைந்தன. பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் ஏற்பாட்டின் பேரில் காலிதீன் அவர்கள் இணைப்பாளராக இயங்கி இடம் பெயர்ந்த முஸ்லிம் பட்டதாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் பிரச்சினைகளையும் குறைபாடுகளையும் களைவதற்குப் பெரிதும் உழைத்துள்ளார்.பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இயங்கிய யாழ்ப்பாணப்பல்கலைக்கழக (இடம் பெயர்ந்த மாணவர்களுக்கான) அலகு காலிதீன் அவர்களின் மேற்பார்வையிலும் வழிகாட்டுதலிலுமே சுமார் ஐந்து வருடங்கள் வரை நடைபெற்றது. யாழ்பல்கலைக்கழக நிர்வாகத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய பேராதனை பல்கலைக்கழகத்தின் கல்வி வளங்களை தடையின்றியும் பொருத்தமான முறையிலும் இடம் பெயர்ந்த மாணவர்களுக்கும் பெற்றுத்தர வேண்டிய பொறுப்பை இணைப்பாளர் என்ற முறையில் காலிதீன் நிறைவேற்ற வேண்டியிருந்தது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான அலகை நெறிப்படுத்தி மாணவர்களின் நலன்களுக்கான ஏற்பாடுகளைச் செய்யும் மிகவும் சிக்கலான களைப்பூட்டும் பணியில் தொடர்ச்சியாக ஈடுபட்டிருந்ததை எங்களால் அவதானிக்க முடிந்தது.

கலாநிதி காலிதீனின் வாழ்வில் பதிவு செய்துள்ள பல நிகழ்வுகள் இந்த நாட்டின் கல்வி சமூக சமய செயற்பாடுகளோடு நெருங்கிய தொடர்புடையவை. பல்கலைக்கழக வாழ்வில் மட்டுமன்றி பொதுவாழ்விலும் சமூகம் சமயம் அறிவு சார்ந்த பல நடவடிக்கைகளிலும் முஸ்லிம் சமூகத்தின் அல்லது கிழக்கு மாகாண முஸ்லிம் சமுதாயத்தின் பிரச்சினைகளும், அபிலாஷைகளும் எவ்வாறு பின்னிப்பிணைந்து செல்கிறது, என்று அறிய காலிதீன் வாழ்க்கை வரலாற்றின் சில பக்கங்களையேனும் நாம் கணக்கில் கொள்ளாதிருக்க முடியாது. .

சமூக உணர்வு, மனித நேசம், சகோதர இனத்தவர்களுடான நல்லுறவு என்ற கோணங்களில் நோக்கினாலும் அவரது வாழ்க்கையில் எமக்குக் கூறக் கூடிய நல்ல செய்திகள் உள்ளன.

இக்பால் அலி சமூக உணர்வு மிக்க ஒரு கல்விமானின் வாழ்க்கையை எங்களுக்கு வழங்கியுள்ளார். இன்னும் விரிவாக எழுதப்பட வேண்டிய பகுதிகள் அவரது வாழ்வில் படிந்துள்ளன. எதிர் காலத்தில் தமது சுயசரிதையாகவே இவற்றை எழுத முன்வரக் கூடும். சமூக ஆய்வறிவுக்கு இத்தகைய வாழ்க்கை வரலாற்றுச் செய்திகள் மிகவும் பயனுள்ளது. அதனால், கவிஞர், இளம் எழுத்தாளர் இக்பால் அலி காலிதீன் அவர்களைப் பற்றி எழுத எடுத்த முயற்சி வரவேற்கப்பட வேண்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களும், முதியவர்களும் இத்தகைய அறிவு நடவடிக்கைகளில் ஈடுபட முன்வருவதற்கு ஆதரவளிப்பது அவசியமாகும். கைதேர்ந்த ஆய்வாளர்கள் இத்தகைய விடயங்களில் ஈடுபடுவது நல்லதாயினும் புதியவர்களின் வருகை இத்துறையினை வளமுள்ளதாக்குகிறது. மறைந்து அழிந்து செல்லும் தகவல்களையும் குறிப்புகளையும் சான்றுகளையும் அழியாது எழுத்து வடிவாக்குவது சமூகப் பயனுள்ள பணியாகும். முஸ்லிம்களின் தற்கால சமூக வரலாற்றை எழுதப்படுகின்றவர்களுக்கு இத்தகைய அறிவுகள் ஆவணங்களாகப் பயன்படும் சாத்தியம் உண்டு.

நீண்ட கால நட்புக்கு பாத்திரமானவர் காலிதீன். கொழும்பில் இஸ்லாமிய இளைஞர் ஓர் இயக்கத்தினை நடத்துவதில் ஈடுபட்டிருந்த காலத்தில் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் நூல் நிலையத்தில் பல தடவைகள் அவரைக் கண்டிருக்கிறேன். அவர் சமூக சேவையில் கால்பதிக்கத் தொடங்கிய காலம் அது. இன்று அவரது சமூக சேவை முயற்சிகளும், கல்விச் சேவைகளும் முழு சமூகத்திற்குமான வளர்ச்சி நிலையை அடைந்துள்ளதைக் காண்பதில் மனதில் ஏற்படுவது நிறைவான மகிழ்ச்சியாகும். அவர்களின் பணி மேலும் பல்லாண்டுகள் தொடர எனது வாழ்த்துக்கள்.

எம்.எஸ்.எம். அனஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி துரை மனோகரன்
தமிழ்த் துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

# மதிப்புரை

கலாநிதி கே. எம். எச். காலிதீன் அவர்கள் எனது நீண்ட நாள் நண்பர். நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றிய காலத்திலேயே (1975 - 1978) அவரை முதன் முதலிற் சந்தித்தேன். அன்று முதல் இன்றுவரை எனது நல்ல நண்பர்களுள் ஒருவராக அவர் விளங்குகின்றார். நல்ல பல பண்புகளைத் தம்மகத்தே கொண்ட மனிதராகக் காலிதீன் காணப்படுகின்றார்.

முஸ்லிம் இனத்தின் நலன்களுக்காகக் காலிதீன் அவர்கள் ஆற்றிவரும் பணிகள் சொற்களில் அடங்கா. தமது இனத்தின் உயர்வில் அவர் கொண்டிருக்கும் ஆர்வம் போற்றுதற்குரியது. தத்தம் இனத்தின் மீது எவ்விதப் பற்றுமில்லாது, தமது இனத்தையே காட்டிக் கொடுக்கும் கயவர்கள் சிலர், கனவான்களாகத் தம்மைக் காட்டிக்கொண்டு உலக வலம் வருவதுண்டு. தமது மொழியை மறந்து , இனத்தை மறந்து, யாரையோ திருப்திப்படுத்துவதற்காகக் கனவான் வேஷம் போடும் சில பிரஜைகளுக்கு மத்தியில், தமது இனத்தை நேசித்து ,மொழியை நேசித்து தம்மால் இயன்ற பங்களிப்பினைத் தமது இனத்துக்கும் மொழிக்கும் ஆற்றுபவர்களை நான் மிக மதிப்பதுண்டு. அவ்வகையில் நண்பர் காலிதீன் அவர்களும் எனது மதிப்பிற்கு உரியவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து புலம்பெயர்ந்து வந்த மாணவர்களுக்குத் தமது நல் முயற்சியினால் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனியாக ஒரு பிரிவை ஏற்படுத்த முயற்சி மேற்கொண்டு, அந்த மாணவர்களின் கல்வியில் ஒளி வீசச் செய்த பெருமை காலிதீன், அவர்களுக்கு உண்டு அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர் பட்ட சிரமங்கள் சொல்லில் அடங்கா.

நண்பர் காலிதீன் பழகுவதற்கு மிகவும் இனியவர். முஸ்லிம் மக்கள் மத்தியில் மட்டுமன்றி, அவரையறிந்த தமிழ் நெஞ்சங்களிலும் அவர் செல்வாக்குச் செலுத்துகின்றார். தாமும் உயர்ந்து , பிறர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வதிலும் உண்மையான ஈடுபாடு கொண்டவர், அவர் அத்தகைய ஒரு பண்பாளரைப் பற்றிய ஒரு நூல் வெளிவருதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நூலை எழுதிய இக்பால் அலி மனித நேயமும், எழுத்தார்வமும் ஒருங்கே கொண்ட இளைஞர். ஏலவே "முற்றத்திற்கு வாருங்கள்" என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டார். இவரது இரண்டாவது நூலாக இது வெளிவருகின்றது. காலிதீனின் அறிவும் ,ஆளுமையும் வாசகருக்குப் புலப்படும் முறையில் இக்பால் அலி இந்நூலை ஆக்கியுள்ளார். அவரது நோக்கமும், செயலும் பாராட்டுக்குரியவை.

தமிழ்த் துறை கலாநிதி துரை மனோகரன்
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை
இலங்கை
24-11-1998.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

"நன்றி" என்னும் சொல் இன்று காணாமற் போய்விட்டது. அதனால்தான் உலகம் தழுவி நிற்கும் சமூகவியலில் நன்றி எனும் சொல் இன்று மானிட அகராதியில் பார்க்கவோ, வாழ்த்தவோ மனிதனின் ஆக்க முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கவோ மனிதன் இல்லையென மனிதனே நிரூபித்துக்கொண்டிருக்கின்றான்.

உண்மையிலே மனிதன் நன்றி கெட்டவன்தான். மனிதனே மனிதனை வைத்து வாஞ்சையோடு வேலைவாங்கிவிட்டு, அவனுக்கு கூலிகள் வழங்க மறுக்கின்றான். அவனிடம் வாங்கப்படும் உழைப்பிலிருந்து பெறுமதி நோக்கப்படுவதில்லை. மாறாக, அவன் பெறும் கூலியிலிருந்துதான் பெறுமதியின் நோக்கம் எழுகிறது. ஆனாலும் அந்தக் கூலியின் மூலம் அவனது இலட்சியங்கள் நிறைவேறுவதில்லை இப்பொழுது கூலி வழங்கும் போதே பிரச்சினைகள் எழுகிறது. இந்த வாழ்வியலின் கட்டமைப்பிலேதான் இன்று இலக்கியவாதிகளோ அல்லது சமூக சேவையாளர்களோ மதிக்கப்படுகிறார்கள்.

இவர்கள் வெறுமனே மனிதர்களின் நல் வாழ்வுக்கும் நல்லின்ப நுகர்வுக்கும் கூலிகளற்ற நெறிமுறையில் உழைப்பவர்கள். இவர்களை நாங்கள் ஆத்மார்த்தமாக மதிப்பதில்லை; நேசிப்பதில்லை. அதனாலேயே நன்றி எனும் சொல் எம் இதயத்தை விட்டும் வெகுதூரம் சென்றுவிட்டது.

யதார்த்தத்திற்கு அப்பாற்பட்ட படாடோபமான, போலியான உழைப்புகளுக்குத்தான் இன்று பொன்னாடைகளும், கதிராடைகளும் பூமாலைகளும், பணவிரயங்களும் நடக்கின்றன. இதற்கே நட்புக்கொண்டு கருத்துக்களை பல்வேறுகட்டங்களில் அதற்கு மெருகூட்டி ஒரு போலியான வரலாறை உருவாக்க எடுக்கும் முயற்சிகள் காத்திரமானவை. எது எவ்வாறாயினும், "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிது" என்ற அமுதமொழியை உணர்ந்தறியும் மாட்சிமையுள்ளவர்கள் "நன்றி" என்னும் சொல்லுக்கு மொழிவடிவம் கொடுத்துவருவதை நேரில் கண்ட அனுபவங்கள், அவற்றின் மேலீடான தனிச்சிறப்புக்கள், நன்மதிப்புக்கள் ஆகியன தற்போது துளிர்விடுகின்றன.

1998ல் கண்டி சித்திலெப்பை மஹா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற எம்.ஐ.எம்.அமீன் எழுதிய "சித்திலெப்பை வாழ்க்கை வரலாறு" நூல் வெளியீட்டு விழாவில் நூல் பற்றிய ஆய்வுரை நிகழ்த்திய பேராதனைப் பல்கலைக்கழக மெய்யியல் துறை முது நிலை விரிவுரையாளர் எம்.எஸ்.எம்.அனஸ் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார். "முஸ்லிம்களாகிய நாம் அனைவரும் நன்றிகெட்டவர்கள்" என்ற ஒரு ஞானதீபமான வார்த்தைப் பிரயோகத்தை முன்வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை உண்மையில் ஆதர்ஷனமாக முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பாக முஸ்லிம்கள் வாழ்க்கை வரலாற்று வழிமுறைகளைக் கொண்டு அப்பெரியார்களது பெருவாழ்பு முறைகளை ஆய்வு செய்ய முற்படுவதில்லை. அவ்வாறு இல்லாததின் காரணமாகவே பரந்தளவில் சமூகசேவைகளால் பண்பட்ட மனிதர்களின் அடையாளத்தை தேசியமயமாக்க முடியாதிருக்கின்றது.

எனினும் அந்த நிலை எமது முஸ்லிம் சமூகத்திற்கு மாத்திரமல்ல தமிழ் சமூகத்தவர்களும் ஓரளவு எதிர் நோக்கியிருந்தனர். அது தற்பொழுது படிப்படியாக மாறிவருகின்றன என்பதை அண்மைக் காலங்களில் அவதானிக்கலாம். பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த் துறை பேராசிரியர் கலாகீர்த்தி சி.தில்லைநாதன் அவர்களுக்கு பெரும் "மணி விழா" கண்டி இந்து கலாசார நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. ஜாமிய்யா நளீமியா இஸ்தாபகர் நளீம் ஹாஜியார் அவர்களுக்கு பெரும் "பாராட்டு விழா" சென்ற நளீமியா பழைய மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். பிரபல எழுத்தாளர் டொமினிக் ஜீவாவுக்கு இலங்கையில் பல இடங்களில் பாராட்டு விழா இடம்பெற்றுள்ளது. புலவர் பணி ஆ.மு.ஷரிப்புத்தீன் அவர்களுக்கு பெரும் பாராட்டு விழா அவர் பிறந்த ஊரான மருதமுனை வாழ் மக்களால் ஏற்பாடு செய்திருந்தனர். இது போன்று தனித்தனியான முறையில் கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத் தலைவர் இரா.அ.இராமன், கவிஞர் மலைத்தம்பி, எழுத்தாளர் சோம காந்தன் பிரேமஜி ஞானசுந்தரம, பத்திரிகையாளர் எஸ். பி. குட்டி, டாக்டர். முருகேசுப்பிள்ளை இது போன்ற பலர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டு வந்துள்ளனர்.

இவ்வாறான ஒழுங்குகளை அரசு, அரச சார்பற்ற நிறுவனங்கள் திட்டமிட்டு செயல்படுகின்றன. சமய கலாசார அமைச்சு, மாகாண சபைகளுக்கான கலாசார அமைச்சு ஆகிய அரச நிறுவனங்களுடன் இலங்கை கம்பன் கழகம், இலங்கை தென் கிழக்கு ஆய்வமையம், ஸ்ரீ லங்கா முஸ்லிம் வெகுசனத் தொடர்பு அமையம், கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியம், விவவி, மலையக கலாசார பேரவை, யாழ் இலக்கிய வட்டம், மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கம், கிழக்கிலங்கை பத்திரிகையாளர் சங்கம், கரையோர பத்திரிகையாளர், சங்கம் ஆகியன இப்பணிகளை முன்னெடுத்துச் செல்கிறது.

இவைகளுக்கெல்லாம் ஒரு முக்கிய உதாரண பூருஷராய் முன்னாள் முஸ்லிம் சமய கலாசார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் அதன் செயலாளர் எஸ்.எச்.எம் ஜெமீல், முஸ்லிம் கலாசார திணைக்களத்தின் மேலதிகாரிகள் சிறந்து விளங்குகின்றனர்.

உண்மையான சமூக தேவையை அறிந்து அது தமது கடமையென உணர்ந்து காரியமாற்றும் நல்ல கலைஞர்களோ அல்லது சமுக சேவையாளர்களோ வாழும் போதே வாழ்த்தப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது நன்றி பாராட்டப்பட வேண்டும் என்பது மாத்திரமல்ல, அதற்கப்பால் சென்று அவர்கள் மேற்கொண்ட பணிகளை மற்றவர்கள் எதிர்காலச் சந்ததியினர் அறிந்து கொள்வதற்கான வழிவகைகள் செய்ய வேண்டும். அதற்கேற்ற கொள்கையும் கோட்பாடும் புதிய யுக்திகளுடன் தோன்றி செம்மையான இலக்கியம் படைக்க வேண்டும் என்பதே இன்றய கலையுணர்வில் கலந்த கருத்தாக உள்ளது.

இந்தக் கூற்றுக்கு அழுத்தம் கொடுக்கக் கூடியவர்களாக பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை முது நிலை விரிவுரையாளர் கலாநிதி துரை மனோகரன் அவர்கள் கண்டியில் மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் எற்பாட்டில் நடைபெறும் அனேகமான கலை இலக்கிய கூட்டங்களில் "கலைஞர் சமூக சேவையாளர்கள் வாழும் போதே வாழ்த்தப்பட வேண்டும்" என்று குறிப்பிட்டு வருகின்றனர். இவ்வாறு பேராதனைப் பல்கலைக்கழக அரச அறிவியல் விஞ்ஞானத்துறை பேராசிரியர் அம்பலவாணர் சிவராசா அவர்கள் கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத் தலைவர் இரா.அ. இராமனின் பாராட்டு விழாவில் பேசும்போது "ஒரு கலைஞன் அல்லது சமூக சேவையாளன் வாழ்த்தப்பட வேண்டும் என்பதுடன், இந்த முயிற்சியில் பாடுபடுபவர்களுக்காக வேண்டி 25 வருடங்களுக்குப் பின் நான் கண்டி நகரின் தெருக்களில் இறங்கினேன்" என்று தெரிவித்தார். எனவே இதிலிருந்து இவரது பேச்சின் பெருந்தன்மை நன்றி பாராட்டப்பட வேண்டும் என்ற கூற்றுக்கு மேலும் மெருகூட்டுகின்றன.

நல்ல உள்ளம் உடையோர் நன்றி என்னும் சொல்லுக்கு என்றென்றும் முக்கியத்துவம் கொடுத்தே வருகின்றனர். இந்த நல்ல கருத்துக்கள் மேலோங்கி நிற்கும் போது அவர்களிடமிருந்து மிகவும் கவர்ச்சிகரமான உயிர்த்துடிப்புள்ள அறுவடைகளை நாம் இன்னுமின்னும் எதிர்பார்க்கலாம். இந்த அடிப்படையில் முஸ்லிம்களின் சமூக, கல்வி, கலாசார, பொருளாதார, அரசியல் ஆகிய உயர்வுக்குப் பங்களிப்பு நல்கி வரும் வரலாற்றுப் பெரியார்கள் எம்மோடு பலர் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைப்பற்றி ஆழமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவும் அவர்களுடைய சமூக பொது நலப்பங்களிப்பை மேலும் தூண்டவும் இந்நூல் ஓரளவாவது பயனளிக்கலாம் என்பதில் ஐயமில்லை.

கலாநிதி காலிதீன் அவர்களை நான் நேரடியாக அணுகுவதன் முக்கியகாரணம் மக்களை அவர் அதற்குரிய தத்துவ நெறியில் நேசித்தார் அது அவரை அறியாமலே வெகுசனப் பார்வையாளர்களின் மத்தியில் அவரது ஆளுமையின் தனிச்சிறப்புக்கள் துலங்கிக்கொண்டிருந்தது. எனவே நாம் இதனை ஆவணப்படுத்தாமல் விட்டால் நன்றி கெட்டவர்களாகிவிடுவோம் என்பது எனது தனிப்பெரும் கவலையாகும். இதற்காகவே இக் கலாநிதி காலிதீனைப்பற்றி எழுத முனைந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலிதீனின் அனுபவ உண்மைகளை உள்வாங்கிய சமயம் ஓர் அரசியல் பார்வையாளனாகவும்,மற்றவர்களின் பிணி தீர்க்கும சேவகனாகவும்,உயர்ந்த கல்விமானாகவும்,மனித நேயத்தவராகவும் அடையாளம் காணுகின்றேன். அதுவே கலாநிதி காலிதீனின் சிறப்பு. ஏனென்றால், காலிதீன் பெரும் குடும்பச் சுமைகளைக் கொண்டவர். அவருக்குப் பிள்ளைகள் பதினொரு பேர் உள்ளனர். இருந்தும் இன்றைய கால கட்டத்தில் இவ்வாறான நிலையில் தலையில் குடும்பப்பாரத்தை வைத்துக் கொண்டு சமூகப்பணியாற்ற இயலாது. ஆனால் அவர் தனது நேரத்தை விரையமாக்கி சிறந்த சமூக அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டார். அவரது கடின உழைப்பிலிருந்து தனிக் கவர்ச்சியும் மதிப்பும் தென்படுகின்றன. எனவே, அதை நாம் எவராலும் பாராட்டாமல் இருக்க முடியாது. அந்தப் பணிகளைப் பற்றிய நுட்பங்களை ஆராயாமலும் இருக்க இயலாது.

எமது மண்ணின் மக்களுக்கு பெருமை தேடித் தந்தவர்கள். அழகிய புஷ்ப்பங்களை உருவாக்கியவர்கள். வாழும் போதே போற்றிப் பாராட்டப்பட வேண்டும் என்ற கோட்பாட்டுக்குரிய ஒரு நூலாகவே இதை நான் செப்பனிட்டேன்.

இதற்கு ஆசியுரை வழங்கிய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியர் பத்மநாதன் அவர்களுக்கும், அடுத்து முன்னுரை வழங்கிய பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் க. அருணாசலம், அணிந்துரை வழங்கிய பேராதனைப் பல்கலைக்கழக மெய்யியல் துறை முதுநிலை விரிவுரையாளர் எம்.எஸ்.எம். அனஸ் அவர்களுக்கும் "பூமாலைகள்" பகுதியில் கருத்துக்களை எழுதியுள்ள பேராதனைப் பல்கலைக்கழக அரச அறிவியல் விஞ்ஞானத்துறைப் பேராசிரியர் அம்பலவாணர் சிவராசா உட்பட ஏனைய அன்புக்குரியவர்களுக்கும் குறித்த காலத்தில் சிறப்பாக அச்சிட்டுதவிய நிறுவனத்தினர் ஆகிய அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

இக்பால் அலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமாலைகள்

## பேராசிரியர் அம்பலவாணர் சிவராசா அவர்களின் பூமாலைக்கொரு முன்னுரை

இலங்கை தென்கிழக்கு ஆய்வமையத்தின் தலைவர் ஜனாப் இக்பால் அலி அவர்கள் "இலங்கை முஸ்லிம் வரலாற்றில் கலாநிதி கே.எம்.எச் காலிதீன்" என்னும் நூலை எழுதியுள்ளார். இந்நூலின் ஆசிரியர் இக்பால் அலி அவர்களையும், அல்ஹாஜ் கே.எம்.எச். காலிதீன் அவர்களையும் நான் நன்கு அறிவேன்.

1964ம் ஆண்டு கே.எம்.எச். காலிதீன் அவர்கள் பல்கலைக்கழக அனுமதி கிடைத்து, கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு வந்தடைந்தார். அதே ஆண்டு (1964) எனக்கும் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. நாம் இருவரும் அன்று தொடக்கம் ஒருவரோடு ஒருவர் பரஸ்பரமாய் இருப்பதோடு சுமார் 34 வருடங்களாக மிகவும் நட்புடன் பழகியும் வந்துள்ளோம். நாம் இருவரும் பொது கலைத் தகுதித் தேர்வுக்கு "மேற்கு நாடுகளின் வரலாறு" என்பதை ஒரு பாடமாக பயின்றோம். அதனால் இருவரும் சேர்ந்து விரிவுரை வகுப்புகளுக்கு அப்பால் அப் பாடத்தினைப் பயிலும் வாய்ப்புக் கிடைத்தது. அருமையாகக் கிடைக்கும் நூல்களை நானும் காலிதீனும் தனித்தனியே படிக்காது இணைந்து படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அதிலிருந்துதான் ஜனாப் காலிதீனின் பரந்த மனப்பாங்கினை தெரிந்து கொள்ள முடிந்தது. நாம் இரவு நேரங்களில் நீண்ட நேரம் கண்விழித்து அப்பாடத்தினைப் பயின்றோம்.

பொதுக் கலைத் தேர்விக்குப் பின் பேராதனைப் பல்கலைக்கழகம் வந்து நான் பொருளியலையும், கே.எம்.எச். காலிதீன் அவர்கள் அறபு மொழியையும் சிறப்புப் பாடமாகப் பயிலத் தொடங்கினோம். இருந்த போதும் எம்மிடையே உள்ள தொடர்பு தொடர்ந்தது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கழித்த சுமார் நான்கு ஆண்டுகளின் போதுதான் காலிதீன் அவர்களின் ஆளுமை வெளிப்படலாயிற்று அவருக்கு இஸ்லாத்தில் மீதுள்ள ஆர்வமும், மற்றைய இஸ்லாமிய மாணவர்களுக்குத் தமது சமயக் கல்வியில் வாழ்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டுமென விரும்பி ஜனாப் காலிதீன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிவாசலைக் கட்ட ஆரம்பித்த காலத்தில் இருந்து அதற்காக முன்னின்று உழைத்தார். அதன் பின்னர் யாழ் பல்கலைக்கழகத்துள் அறபுத் துறையின் விரிவுரையாளராகக் கடமையாற்றி அங்கிருந்து துருக்கி போன்ற நாடுகளுக்குச் சென்று இஸ்லாம், அறபு போன்ற கற்கையில் மேற்படிப்பை மேற்கொண்டார். அங்கிருந்து திரும்பி வந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றிய போது அங்கிருந்த சூழ் நிலை காரணமாக அங்கிருந்து புலம்பெயர்ந்து பேராதனைக்கு வந்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புலம்பெயர்ந்த மாணவர்களின் இணைப்பதிகாரியாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவில் கடமையாற்றிய போது புலம்பெயர்ந்த இஸ்லாமிய, தமிழ் மாணவர்களின் நலன்களை காலிதீன் மிகவும் பொறுப்புடன் கவனித்து வந்தார். அத்தோடு கத்தீப்மார்களின் அமைப்பினை ஏற்படுத்தி இஸ்லாமிய மதவளர்ச்சிக்கு தன்னாலான பங்களிப்பை ஆற்றி வந்தார், அத்தோடு நின்று விடாது இலங்கை முஸ்லிம்கள், உலக முஸ்லிம்கள், இஸ்லாமிய மதம் பற்றி ஆழமான ஆய்வுகளை மேற்கொண்டு அதனை ஒரு நூலாக வெளியிட்டார்.

ஜனாப் காலிதீனுக்கு எதையும் சிறப்பாக ஒழுங்கமைக்கும் ஆற்றல் உண்டு என்பதை பல முறை நிருபித்துள்ளார். தோல்விகளைக் கண்டு தளராதவரும், தான் எடுத்துக் கொண்ட பணிகளை துணிவுடன் மேற்கொள்ளும் குணாதிசயங்களும் அவருக்கு உண்டு. அதனால் இவர் மற்றோருக்கு ஓர் முன்மாதிரியாக விளங்கிவருகிறார். அதனால் இளம் கவிஞரான இக்பால் அலி அவர்கள் அவரது வாழ்க்கை வரலாறு பற்றி இந்நூலில் எழுதியிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

ஆகவே காலிதீன் அவர்கள் நீண்ட காலம் வாழ்ந்து தனது பணிகளைத் தொடர்ந்து மேற் கொள்ளவேண்டும் எனவும் ஜனாப் இக்பால் அலி அவர்கள் இது போன்ற சிறந்த நூல்களை வெளியிட வேண்டுமென வாழ்த்தி எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருள் கிடைப்பதாக!

பேராசிரியர் அம்பலவாணர் சிவராசா
அரசியல் விஞ்ஞானத்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் சிந்தனையாளர்

இந்நாட்டின் முஸ்லிம்களுக்கு அரசியல் தனித்துவத்தை பெற்றுக்கொடுப்பதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சிந்தனையாளர்கள் முன்வந்தவேளை, துணிச்சலுடன் தம்மையும் அவர்களோடு வரித்துக்கொண்டு செயல்பட முன்னின்ற பல்கலைக்கழக மட்டத்திலான சமயத்துறைக் கல்விச்சார்ந்த மூத்த புத்திஜீவிகள் வரிசையில் விரிவுரையாளர் மௌலவி கே. எம். எச். காலிதீன் அவர்களுக்கு நமது சமூகத்தில் தக்கமதிப்பும் கண்ணியமும் இருக்கின்றது.

இலங்கை பல்கலைக்கழக அரபு-இஸ்லாமிய கற்கைத் துறைகளில் சமகாலத்தின்போது தலையெடுத்த அறிவு ஜீவிகளில் முதல்தர வரிசையில் வைத்து நோக்கத்தக்கதான இரக்க சிந்தையும், வாழ்வில் எளிமையும், தாமாகவே முன்வந்து பிறருக்கு ஒத்துழைப்பு வழங்கும் சமூகசேவை மனப்பாங்கும், தன்னடக்கம், விருந்தோம்பும் பாங்கும் கொண்ட நற்பண்புகள் மௌலவி கே.எச்.எம்.காலிதீனிடம் இயல்பாகவே மேலோங்கி காணப்படுகின்றன. இவரது அறிவுசார் பங்களிப்புகளை பெறுமானப்படுத்தி நிறைகோல்கொண்டு சீர்தூக்கிக் காட்டும் சமூகப்பணி தோய்ந்த வரலாற்று ஆவணமாகவே இந்நூலின் உள்ளடக்கத்தைக் காண்கின்றேன்.

நான் பிரித்தானிய கடல் கடந்த அபிவிருத்திப்பரிபாலன சேவையின் கீழ் வனவியல் திணைக்களத்தின் தகவல் ஆய்வு பகுதியில் பதிப்பாசிரியராகப் பணியாற்றிய காலகட்டத்தில் தென்கிழக்கு பல்கலைக்கழகம் ஸ்தாபித்ததும் ஏதோ ஒருவகையில் அக்கறைகாட்டவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகினேன். தென்கிழக்குப்பல்கலைக்கழக ஆரம்ப வளர்ச்சி கருதி இப்பல்கலைக்கழக முதலாவது உபவேந்தருடன் சுமார் ஏழு மாதங்கள் இணைந்து நின்று இரவு பகலாகச் செயற்பட்டேன், அச்சந்தர்ப்பங்களின் போது மௌலவி காலிதீன் பீடாதிபதி என்ற வகையில் ஆற்றிய பணிகளை என்னாலும் கண்டு கொள்ளக் கூடியதாக இருந்தது.

ஏனைய பல்கலைக்கழகங்களில் பணியாற்றிய மூத்த விரிவுரையாளர்களும் அனுபவப்பின்புலம் வாய்ந்த நிர்வாக பணியாட்களும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முன்வந்து பணியாற்றுவதற்குப் பின்வாங்கிய சந்தர்ப்பத்தில் மௌலவி காலிதீன் முன்வந்து செயற்பட்டார். போர்ச் சூழ்நிலை நிலவிய சமூகக்கட்டமைப்பில் நிர்மாணிக்கப்பட்ட சர்வகலாசாலைகளில் மௌலவி காலிதீன் சாந்தம் மிகுந்த விழுமியத்தை இனங்காண்பித்து மாணவர்களை நெறிப்படுத்தியிருக்கின்றார் எனின் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடிப்புமிக்க இளைஞரான கவிஞர் இக்பால் அலி தமது பார்வையில் மௌலவி காலிதீன் அவர்களது அரசியல், கல்வி, மத, கலாசாரப் பங்களிப்புகளை அவர் வாழும்பொழுதே பெறுமானப்படுத்தி முத்திரை பொறிக்க முன்வந்துள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

கவிஞர் இக்பால் அலியின் இப்பிரசவம் மீண்டும் புத்திஜீவிகளின் தோற்றத்துக்கும் சமூகப்பங்களிப்புகளை விரிவாக்கல் செய்வதற்குமான அவர்களின் முன்னெடுப்புக்களுக்கும் தக்கதொரு தூண்டுகோலாக அமைந்து ஆற்றப்படுத்தல் வேண்டும்.

நூலின் நாயகனினதும் நூலாசிரியானினதும் சமூகப்பங்களிப்புக்கள் எமது சமுதாயத்தோப்பில் நிலையான நீர்ச்சுனைகளைத் தோற்றுவிக்க வாழ்த்துகின்றேன்.

எம்.ஐ.எம். முசாதிக்
சமூகசேவை கல்லூரி

சமூக அபிவிருத்தி தேசிய நிறுவாகம்
191,தர்மபால மாவத்தை,
கொழும்பு-7.
1998-08-15.

## தலைசிறந்த கல்விமான்

கிழக்கிலங்கையின் வரலாற்றுப் புகழ் மிக்க திருகோணமலையில் உள்ள கிண்ணியாவை பிறப்பிடமாகக் கொண்ட தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும், கலை கலாசார பீடாதிபதியுமான கலாநிதி கே.எம்.எச்.காலிதீன் ஈழமாதா ஈண்றெடுத்த தவப்புதல்வர்களுள் ஒருவராவர்.

இவர் எளிமையான தோற்றமும், மென்மையான பேச்சும், கருணையுள்ளமும் கொண்டவர். குறிப்பாக முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை நன்கறிந்து, அவற்றை தீர்த்து வெற்றி காண்பதில் அயராது ஊக்கமுடையவராகக் காணப்பட்டார். இதன் காரணமாக இன்று எமது சமூகம் பல்வேறு துறைகளில் மங்காப்புகழோடு திகழ்வதற்கு காரணமாக அமைந்துள்ளார் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

குறிப்பாக முஸ்லிம் மாணவ சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் எழிற்சிக்கும் அரும்பணியாற்றியுள்ளார். இதனை நாம் இவருடைய இறந்த கால, நிகழ்கால பணிகளின் மூலம் நன்கு அறியலாம். குறிப்பாக இஸ்லாமிய நாகரிகப் பாடத்தை பல்கலைக்கழக பாடவிதானத்தில் சேர்ப்பதற்கு இவர் ஆற்றிய பங்களிப்பும், அறபு மொழியை பாடசாலை, மாணவர்களின் பாடவிதானத்தில் சேர்ப்பதற்கும்,மௌலவி ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறியை ஏற்பாடு செய்வதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கறையோடு செயற்பட்டு, முஸ்லிம் மாணவ சமுதாயத்தின் நலனுக்காக அவர் ஆற்றிய பணிகள் என்றென்றும் மறக்கமுடியாத ஒன்றாகும்.

இவர் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளராக பதவியேற்று அங்கு கடமை ஆற்றும் காலத்தில் இன, மத வேறுபாடின்றி சகல மாணவர்களுடனும், விரிவுரையாளர்களுடனும், யாழ் மக்களுடனும் நெருங்கிப்பழகி அம்மக்களின் அன்பையும் அபிமானத்தையும் பெற்றிருந்தார். இவ்வாறு மனித நேயமிக்க ஒருவராக இவர் காணப்படுகின்றார்.

"மக்களின் துயரே தன்துயராகக்", கொண்டுசெயற்படும் இவரின் நற்பணிகளுக்கு இன்னுமொரு எடுத்துக்காட்டாக பிரச்சினையின் காரணமாக யாழ் மண்ணை விட்டு வெளியேறிய சந்தர்ப்பத்தில் அம்மாணவர்களின் கல்வி பாதிப்படையக் கூடாது என்ற எண்ணத்தோடு இவர் இம்மாணவர்களை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களை ஏற்பாடு செய்து பகுதி நேர விரிவுரைகளை நிகழ்த்த ஏற்பாடு செய்தார். முஸ்லிம் மாணவர்கள் மாத்திரமன்றி தமிழ் மாணவர்களும் இதில் கல்வி கற்றமை குறிப்பிடத்தக்கதாகும். இம்மாணவர்களின் நலனில் கூடிய அக்கறை செலுத்தியதோடு இக்குழுவின் இணைப்பதிகாரியாகவும் இருந்து கடமை தவறாது செயற்பட்டு வந்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உருவாக்கத்தின் முக்கிய சூத்திரதாரிகளில் ஒருவரான இவர் பல்கலைக்கழக மாணவர்களின் பல்துறைசார்ந்த பிரச்சினைகளின் போதெல்லாம் தமது அநுபவத்தினாலும், ஆற்றலினாலும், அறிவினாலும் அவற்றை சிறந்த முறையில் தீர்த்து வைப்பதில் வல்லவராக திகழ்கின்றார். மேலும் விரிவுரையாளர்கள் மாணவர்கள் மத்தியில் நல்லெண்ணத்தையும், நன்மதிப்பையும் பெற்ற ஒருவராகவும் காணப்படுகின்றார். இவர் இஸ்லாத்தின் முக்கிய கடமைகளில் ஒன்றான புனித ரமழான் மாதத்தில் நோற்கும் நோன்பை விடுதியில் தங்கியிருக்கும் மாணவர்கள் சிரமமின்றி சிறப்பான முறையில் நோன்புக்குரிய சகல வசதிகளையும் வருடாவருடம் ஏற்படுத்திக் கொடுத்து மாணவர்களின் அபிமானத்தையும் பெற்ற ஒருவராக திகழ்கின்றார்.

"தான் கற்ற கல்வியை முறையாகக் கற்பிப்பது அறமாகும்" அவ்வழியில் சென்று கலாநிதி காலதீன் அவர்கள் தான் கற்ற கல்வியை மாணவ சமூகத்திற்கு சிறந்த முறையில் புகட்டி எமது நாட்டில் சகல பாகங்களிலும் பட்டதாரிகளை உருவாக்கி கல்வித்துறைக்கும் எம் தாய்நாட்டிற்கும் அளப்பரிய பணியாற்றியுள்ளார்.

கலாநிதி காலிதீன் பிறந்த இடம் கிண்ணியா என்றாலும், தாம் தமது கடமையின் நிமித்தம் எந்தப்பிரதேசங்களுக்கும் சென்று வாழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரிட்டாலும், அம்மக்களுடன் சமூகத்தோடும் தோழமையாகப் பழகி அவர்களின் குறை நிறைகளை அறிந்து அவர்களுக்கு சேவையாற்றுவதில் பெரும் விருப்புடையவராகக் காணப்படுவது இவரது சிறந்த குணப்பண்புகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

பெரும் சமூக சேவையாளரான இவர் தன்சேவைகளை முன்னெடுத்துச் செல்லும் போது பல்வேறு பிரச்சினைகளுக்கும், சிக்கல்களுக்கும், எதிர்ப்புக்களுக்கும் உட்பட்ட போதும் அஞ்சா நெஞ்சத்தோடு அவற்றை யெல்லாம் அச்சமின்றி எதிர் கொண்டு வெற்றி கண்டு தனது பணியை புன்னகை பூத்த முகத்தோடு செய்து முடிப்பதில் வல்லவராகக் காணப்படுகின்றார்.

கத்திப்மார்களின் சம்மேளனத்தின் ஆயுட்கால தலைவரும், அகில இலங்கை சமாதான நீதிவானுமான கலாநிதி கே.எம்.எச். காலிதீன் அவர்கள் பணி எதிர்காலத்தில் சிறந்தோங்கி முஸ்லிம் சமூகத்திற்கும், எம் தாய் நாட்டிற்கும் என்றென்றும் கிடைக்க வல்ல இறைவன் அருள் புரிவானாக.

புவியல் துறை
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

எம்.ஐ.எம்.கலீல்
விரிவுரையாளர்

## பூரண வெற்றி

கலாநிதி காலிதீன் என்ற திருநாமம் நான் பிரபலமாய்க் கேள்விப்பட்ட பெயர் ஆகும். தோழர் இக்பால் அலி காலிதீன் அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றி எழுதுவதாக என்னிடம் குறிப்பிட்டார்.

எனது நண்பர் நூல் எழுதுகின்றார் எனும் போது அது அச்சு வாகனம் ஏறுமுன்னே அதை நுகர்ந்து பார்த்தேன்.தத்தமது சமூகத்தில் கல்வி கற்ற பெரியார்கள் பல பேர் இருக்கின்றனர். ஆனால் அவர்களில் பெரும்பாலானோர் சோம்பற் போக்குடையவர்களாகவே காணப்படுகின்றார்கள்.கலாநிதி காலிதீன் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை நோக்கினால் தனது சொந்த தேவைகளை விட மற்றவர்களுடைய பொதுத் தேவைகளில் நீண்ட தொரு வரலாற்றைக் கொண்டவர் என்பதை இங்கு அழுத்தமாக கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக பிரச்சினைகளை ஒரு தனி நபரால் அல்லது ஒரு குழுவினரால் தீர்த்துக் கொள்வதிலே எழும் அதற்கான, போராட்டங்களில் பல்வேறு நிலைகளில் அந்தச் சார்புடைய ஒரு தனிநபர் ஒரு குழுவினர் தோல்வியைத் தழுவுகின்றனர். அந்தத் தோல்வியை வெற்றியாகக் கருதினாலும் கூட, அது பூரணத்துவமான இலக்கை அடைய முடியவில்லை என்பதுதான் வரைவிலக்கணமாகும். ஆனால் காலிதீன் அவர்கள் அவ்வாறான தோல்விகளை எதிர் நோக்க வில்லை.

ஏனென்றால் ஓர் இயக்கத்தை வழி நடத்தக் கூடிய பரந்த அணுகு முறை கொண்ட அறிவு அவரிடம் காணப்படுகின்றது. ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக கத்தீப்மார் சம்மேளனத்தின் மூலம் அந்த வட்டத்திற்குள் நின்று ஆற்றும் பணிகளே போதுமானதாகும்.

எனவே இந் நூலில் இன்னும் எத்தனையோ கருத்துக்களை பல கோணங்களில் ஆய்வு செய்யக் கூடியதாக உள்ளன. இக்பால் அலியின் முயற்சி பாராட்டப்பட வேண்டியவை. இந்த வரலாற்று ஆய்வியல் துறைக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து நாம் அனைவரும் வரவேற்போம் என்பதுடன் மேலும் நல்ல பல நூல்கள் இக்பால் அலி எழுத வேண்டும் என்பது எனதவா.

கவிஞர் ரா. நித்தியானந்தன்
விரிவுரையாளர்
அரசியல் விஞ்ஞானத்துறை
பேராதனை பல்கலைக்கழகம்.

## இன்னுமொரு படி

1996 ம் ஆண்டில் கலாநிதி துரைமனோகரன் எழுதிய தமிழ் “இலக்கியம்- பார்வையும் பதிவும்” என்ற ஆய்வு நூல் அறிமுக விழா கலாநிதி காலிதீன் பிறந்த மண்ணான கிண்ணியாவில் நடைபெற்றது. அவ்விழாவுக்கு நூலாசிரியர் கலாநிதி துரைமனோகரன் அவர்களுடன் நானும் சென்றேன்.

அவ்வேளைதான் கலாநிதி காலிதீன் அவர்களுடைய முதல் அறிமுகம் கிடைத்தது. இப்பொழுது அவரது வாழக்கை வரலாறு பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நண்பர் கவிஞர் இக்பால் அலி ஓர் அரிய நூலை எழுதியிருப்பதையிட்டு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

உண்மையில் முஸ்லிம்கள் இனவாதிகள் அல்ல, மொழி உணர்வு மிக்கவர்கள், அவர்களது தாய் மொழியான தமிழ் மொழிக்கு கொடுக்கும் மதிப்பைப் போன்றே மற்ற சமூகத்தவர்களையும் மதிப்பவர்கள். அதே வேளை அவர்களுடைய விருந்தோம்பல் பண்பு மற்றும் ஏனைய குண அம்சங்களும் மிகச் சிறந்து விளங்குகின்றது.

இத்தகைய சிறப்புக்களுக்கு கலாநிதி காலிதீன் போன்றவர்கள் முன்னோடியாகத் திகழ்கின்றார்கள் இதை அவரின் இல்லத்தில் நான் நேரடியாகக் கண்டு அனுபவித்தேன்.

இஸ்லாமியக் கோட்பாடுகளில் நின்று எந்தவிதமான ஆரவாரமுமின்றி புத்திக் கூர்மையுடன் தனது சமூக, கலாசார , அரசியல் கலை இலக்கிய பங்களிப்பை நல்கி வருகின்றார் காலிதீன்.

இன்று இலங்கையில் நூலாசிரியர் இக்பால் அலி கலை இலக்கிய செயற்பாடுகளில் அதி தீவிரமான பங்கை வகிக்கின்றவர். அவர் கலாநிதி காலதீன் அவர்களின் உண்மையான உருவத்தை வெளிச்சம் போட்டுக் காட்டும் போது இந்நூலின் மூலம் நூலாசிரியருடைய ஆற்றலும் திறனும் இன்னுமொறு படி உயர்ந்து விளங்கப் போகின்றது என்பது உண்மை. இவ்விருவர்களது பணி தொடர வாழ்த்துகின்றேன்.

இரா. அ. இராமன்
தலைவர்
மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்

18/13 பூரணவத்த
கண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னோடி முத்தொன்று

தென்கிழக்குத் திசையினிலே
தென்கிழக்கின் இதயமாம் --பல்கலைத்
தென்றல் தவழும் நந்தவனம்
தென்கிழக்கு வளாகமதில்!

துணை நிற்கும் தூணாக
தோழ் கொடுத்து நிற்கும்
பண்பாளர் நேயமிக்க எங்கள்
பீடாதிபதி கே.எம்.எச். காலிதீன்

தென்கிழக்கு ஆய்மையத்தின்
தெழிவூட்டும் போஷகர்
தன்னம்பிக்கை தனை யூட்டி
தழைத்தோங்கச் செய்திட்டார்!

திண்ணியா மண்ணின் மைந்தர்
கண் மணியாம் எம் கலைநதி
கண்ணியம் நிறைந்த மா மனிதர்
கனிவான இறை நேசர்!

கல்விக் கருவூலத்தின் கண்கள்
காவிரியின் கலை யூற்று
சொல்லால் செயலால் தரும வீரர்
சொல்லினிமை கொண்ட பேச்சாளர்

யாழ் வளாகம் ஈன்றெடுத்த
யா மறிந்த 'முதுமாணி'
தாழ்மை நிறை தவப்புதல்வன்
தமிழ் மொழி வித்தகன்.

துருக்கிய மொழியால் ஏராளமாக
தூள் பரத்தும் துருக்கிய தாசன்
துருக்கிய பல்கலைக்கழகம்
தாய்மையுடன் தந்த கலாநிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்தோம்பல் பண்பாட்டில்
வீற்றிருக்கும் பீடத்திலும்
விருப்புடனே உபசரிக்கும்
விந்தை மிகு கொடைவள்ளல்!

கலை வளர்க்கும் இளையவர்க்கும்
கருணையுடன் தோழ் கொடுத்து
காலை,மாலையென்று பாராது
கரங்கொடுக்கும் இதயவாசல்!

கதீப்மார் சம்மேளனத்தின்
காவலனாய் செயற்பட்டு
சத்திய மார்க்கத்தை சிறப்பூட்டி
சித்தமுடன் விளங்குகின்றார்.

முஸ்லிம் சமூகத்தை முன்னேற்ற
முயன்றுவரும் முன்னோடி மேதைகளில்
முஸ்லிம் முத்துக்களில் ஒன்றாய்
முடிவிலியாய் விளங்க வேண்டும்!

புதுநகரான் .ஏ. அஷ்ரப்
பெரும் பொருளாளர்
இ.தெ.கி. ஆய்வமையம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி காலித்தீன் கசங்காதிருக்கும்

## ஒரு பூமாலை

1961 ம் ஆண்டு
ஆசிரிய பயிற்சியை முடித்துக் கொண்டு
புத்தம்புது ஆசிரியனாக
கிண்ணியா பயணமாகினேன்
புதிய சூழல்
புதிய நண்பர்கள்
புதிய உத்வேகம்
அடிக்கடி
கடலைத்தாண்டும் அனுபவம்
இத்தனைக்கும் இடையே எனது
வாசிக்கும் உணர்வு
வளர்ந்ததே தவிர
வாடவில்லை
புதிய புதிய நூல்களையும்
சஞ்சிகளையும்
தேடி அலைகின்றேன்.
உள்ளதோ அவ்வூரில்
ஒரேயொரு புத்தகக்கடை
எனக் கேள்வியுற்று
அங்கு செல்கிறேன்
அக்கடைக்குச் சொந்தக்காரன்
றகுமத்துல்லா ஹாஜியார்
நண்பர் ஆகிறார்.
ஒருநாள்
றஹ்மத்துல்லாஹ் ஹாஜியாரோடு ஒருவர்
கடையுள்
கதைத்துக் கொண்டிருக்கிறார்
றஹ்மத்துல்லாஹ் ஹாஜியார்
அவரை எனக்கு
அறிமுகப்படுத்தினார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எனது தம்பி
மௌலவி காலிதீன்
அறிவின் அடக்கமும்
ஆழமான பார்வையும்
அவரிடத்தில்
ஆட் கொண்டிருந்தன.
அடிக்கடி அவரை
சந்தித்துப் பழகினேன்.
1962ம் ஆண்டு
இடம்மாற்றம் பெற்று
ஊருக்கு வந்து விட்டேன்.
1974ம் ஆண்டு நான்
பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற போது
கொழும்பிலே அவரைச் சந்தித்தேன்.
அவர் பல்கலைக்கழகத்தில்
விரிவுரையாளர் என அறிந்து
சந்தோசப்பட்டேன்.
1997 ம் ஆண்டு
அட்டாளைச்சேனையில்
தேசிய மீலாத் விழாவின் போது
தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில்
அறபு, இஸ்லாம் பீடத்தில்
அவரைச் சந்தித்தேன்.
ஆண்டுகளுக்கிடையே
இடைவெளி அதிகம் தான்
ஆனால்
எங்களின் அன்புக்கிடையே
அதிகம் இடைவெளி இருக்கவில்லை
சந்தித்தபோதெல்லாம்
முதல் சந்திப்பின் மனம் குன்றவுமில்லை
குணம் குன்றவுமில்லை.

மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாயச்சிற்பி

காலிதீன் என்றொரு கனிவுள்ளம் அவர்
கங்கு கரையற்ற கருணை வெள்ளம்.
போலிகள் உலாவிடும் பூமியிலோ அவர்
பொறுக்கி யெடுத்த பொற் செல்வர்
சமுதாய சேவையே அவர் மூச்சு
சமத்துவம் என்பதே அவர் பேச்சு
சிரித்த முகமே அவர் வடிவம்
சீரிய சிந்தையே அவர் மார்க்கம்
அயராத உழைப்பே அவர் கொள்கை
அல்லாஹ்வுக்(கு) அஞ்சியே அவர் வாழ்க்கை
எதிரிகள் இல்லாத இனியவராய்
எவரையும் கவர்ந்திடும் புனிதராய்
இலங்கையில் இல்லை தெரியாதார்,
இவரை யாரெனப் புரியாதவர்.
பல்கலை கற்ற பண்டிதராய்
பாரெங்கும் புகழ் பூத்த பண்பாளர்
உலமா சபையை உருவாக்கி
ஊரும் உலகும் புகழ்பெற்றார்.
ஈழ முஸ்லிம் வரலாற்றை
இதயமாய் ஆய்ந்து விருது பெற்றார்.
அறபு மொழியின் அவசியத்தை
அழகாய் நமக்கு விரிவுரைத்தார்.
அந்நிய மொழிகளிற் புலமை பெற்று
அதிலும் படித்து உயர்வுற்றார்.
பல்கலைக்கழகப் போதகராய்
பாரோர் புகழப் பணி செய்தார்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுயரப் புகழ் பெற்றார்.
சமுதாய வீதியிலே அவரொரு சந்தி விளக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்பற்ற கொள்கையே அவர் வழக்கு
புதியதோர் உலகம் செய்திடுவோமெனப்
புறப்பட்ட கடமை வீரமானவர்.
ஏற்றதோர் நற்கருத்தை அவருள்ளம் ஏற்றால்
நில்லார் , அஞ்சார், தொடர்ந்து செல்வார்
சற்குணமிக்கதோர் சாந்தரூபராய்,
சரித்திரம் படைத்திட்ட சமுதாயச் சிற்பி
அன்னாருக்கு
செத்தபின் சிலைவைக்கும் பழமை போக்கி
வாழ்வோரை வாழ்த்திடும் வளிமை கண்டு
திருவாழும் மலர் கொண்டு
தேன்மாலைச் சரம் தொடுத்துத் தோளிற் சாத்தி
வானுயர வாழ , வழமான புகழீட்ட
வாயார வாழ்த்தும் மனமே.!

கலை அமுதன் எம்.ஸி. எம். இக்பால்
மல்லவப்பிட்டி
குருநாகல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் ஒளி விளக்கு

காலம் கடந்து வாழும் வரலாற்றுப் பெரியார்களின் வாழ்க்கை வரலாறு (Biography) மனித வாழ்க்கைக்கு இலக்கணமாகத் திகழ்கின்ற ஒரு வடிவாகும். இது பல்வேறு பரிணாம நெறிமுறையில் அழுந்திப் பதியும் வாழ்வியல் கூறுகளை வகைப்படுத்தி வழி வழி வரும் சந்ததியினருக்கு அப்பெரியோர்கள் மேற்கொண்ட பணிகள் அருஞ்செயல்கள் அச்செயல்களின் கண் அவர்களுக்கு நேர்ந்த தடைகள் கிடைத்த ஆதரவுகள், அவர்கள் பெற்ற வெற்றிகள், அவ்வெற்றிகளின் விளைவுகள் பயன்கள் ஆகியவற்றை அறிய (Biographical Criticism) வாழ்க்கை வரலாற்று வழித்துறை ஆய்வியல் பண்பு தக்க துணை புரிகின்றது.

இத்தகைய வரலாற்றினடிப்படையில் இஸ்லாமிய கலாசாரம், கல்வி வரலாறு ஆகியவற்றிற்கு கலாநிதி கே.எம்.எச்.காலிதீன் என்ற பெயர் மங்காத ஒளிவிளக்காய் மிகப் பிரபலமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. குறிப்பிட்ட காலத்தின் பின்னணியில் காலூன்றி நிற்கின்ற இவரது வரலாற்றியல் அணுகுமுறைகளில் அறிவியல் ஆன்மீகம், சமுதாயம், கல்வி போன்ற துறைகளில் மிகையான அழுத்தங்களையும், விசாலமான பரப்பையும், அதிகமான உத்வேகத்தையும் முக்கிய புள்ளிவிபரங்கள் சித்தரிக்கின்றன. அதிலே அவர் வகுத்துக்கொண்ட கொள்கை முறையிலும், பணிகளிலும் நினைவு கூரத்தக்க, ஆக்கபூர்வமான ஒரு தாக்கத்தை புதிய கோட்பாட்டு ரீதியில் தம்மை அடையாளப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஒரு சில குறிப்பிட்ட உலக மாந்தர்களுடைய வரலாறு மரணத்துக்கு முன்னர் எழுதப்படுகின்றது. பெரும்பகுதியினருடைய வரலாறு மரணத்துக்குப் பின்னர் எழுதப்படுகின்றது. உயிருடன் வாழும் போதே அவர்கள் வாழ்த்தப்பட வேண்டும். நினைவுகூறப்பட வேண்டும் என்ற கருத்து தற்பொழுது தலைதூக்கியுள்ள காலக்கட்டத்தில் தனக்கெனவும், தனது குடும்பத்திற்கெனவும் மட்டும் வாழாது தான் பிறந்து வளர்ந்த சமுதாயத்திற்காகவும் நாட்டுக்காகவும் அவற்றிக்கும் அப்பால் இஸ்லாத்திற்காகவும், இஸ்லாமியக் கல்வி மறுமலர்ச்சிக்காகவும் தனது வாழ்க்கையையும், சுகபோகங்கள் அனைத்தையும் அர்ப்பணித்து அரும்பணியாற்றி வருகின்ற பெருமை கலாநிதி காலிதீன் அவர்களுக்கும் உண்டு என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவ பருவத்தின் சாதனைகள்

கிண்ணியாவிலுள்ள ஈச்சந்தீவு எனும் கிராமத்தில் அல்ஹாஜ் பி.எம்.கே.முகம்மது தம்பதிகளின் செல்வப் புதல்வரான இவர் தலையிலிருந்து தொப்பி கழற்றாவண்ணம் தோன்றும் எளிமையான தோற்றம், பணம், பட்டம், பதவி என்ற மமதையற்ற தன்மை, மென்மையான பேச்சு, துடுக்கான மனோநிலை, பணிவான போக்கு முதலிய உயர்ந்த குணங்கள் நிறைந்த கலாநிதி கே.எம்.எச். காலிதீன் இலங்கைக்கோ முஸ்லிம் உலகுக்கோ மாத்திரமன்றி ஒரு தேசிய ரீதியில் நன்மையளிக்கக் கூடிய ஒரு நல்ல மனிதராகப் பிரகாசிக்கின்றார்.

1944ம் ஆண்டு திருகோணமலையிலுள்ள கிண்ணியாவில் பிறந்த இவர், ஆரம்பக் கல்வியைக் கிண்ணியா மகாவித்தியாலயத்தில் பயின்றார். எதிர்கால வாழ்க்கையைச் சித்தரிக்கக்கூடிய ஆற்றலும், திறமையும் அவருடைய இளம் பிராயத்திலேயே காணக்கூடியதாக இருந்தது. அவர் அக்கல்லூரியில் இயங்கிய "இலக்கிய கழகம்" என்னும் அமைப்பில் முன்னணி மாணவராக நின்று ஆற்றிய பங்களிப்பு போற்றுதற்குரியதாக விளங்குகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான "கலைச்செல்வி" என்னும் சஞ்சிகையில் 'மாணவர் கடமை' என்ற தலைப்பில் எழுதிய தனது முதலாவது கட்டுரை மூலம் எழுத்துலகில் பிரவேசித்தார். அந்த மாணவப் பருவத்தில் மாணவர்கள் பற்றி தத்துவம் பேசி தான் முதன் நிலை மாணவனாக வேர்விட வேண்டும் என்ற நல்லெண்ணம் இவரிடம் இருந்தது. ஆசிரியர்கள், பெற்றோர்கள், மற்றவர்கள் தம்மை குறைகாணாது ஒழுக்கக் கட்டுப்பாட்டை எடுத்து நடக்கும் முறையை தானும் பெற்று மற்ற மாணவர்களும் எடுத்து நடக்க வேண்டும் என்ற நிலையை அந்த முதல் கட்டுரையிலேயே தன்னைப் பற்றி உணர்த்தினார்.

இலங்கைக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளில் மொழிப்பிரச்சினையும் ஒன்று. மொழியினுடைய தற்கால நிலைமையறிந்து அவரது பெற்றோர்கள் தனது மகனின் முன்னேற்றத்திற்காக மொழியினுடைய ஜீவாதார எல்லைகளை நிர்ணயம் செய்யாமல், தாய்மொழியுடன் ஆங்கில அறிவையும் விருத்திசெய்ய காலிதீனைத் தூண்டினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது ஆங்கில அறிவை விருத்திசெய்ய கிண்ணியா மகாவித்தியாலயத்தில் போதிய அடிப்படை வசதிகள் இல்லாமையால், முஸ்லிம்களின் கல்வித்துறையில் பிரபல்யம் வாய்ந்த கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் சேர்ந்தார். காலிதீன் ஸாஹிறாவில் கல்வி கற்றபோது, சிரேஷ்ட தமிழ் மன்றத் தலைவராவும், விவாதக் குழுத் தலைவராகவும் இன்னும் பல மாணவ, சமூக நடவடிக்கைகளிலும் ஏற்படுத்திய சாதனைகள் எண்ணற்றவை.

1963-1966 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கொழும்பு "இஸ்லாமிய இளைஞர் இயக்கத்தின்" தலைவராகவுமிருந்து அதன் வளர்ச்சிக்காகச் சேவையாற்றினார். அதிலே கூட இவரது கடமையுணர்வும், வெள்ளை உள்ளமும், ஆற்றலும், திறமையும், தற்கால மாணவர்களின் வாழ்க்கைக்கு சிறந்ததொரு எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. முஸ்லிம் சமுதாயம் தனித்தன்மை வாய்ந்த சமூக நற்பண்புகளைக் கொண்டுள்ளது. அதேபோல் குறைபாடுகளும், எதிர் நிலையான போக்குகளும் அவரது துடிப்பான இளம் வயதில் கண் முன்னே பரந்து காணப்பட்டன. முன்னையதைப் பாதுகாக்கவும், பின்னயதைத் தவிர்த்துக் கொண்டு நவீன சீர்திருத்தக் கொள்கையுடன் கொழும்பு இஸ்லாமிய இளைஞர் இயக்கத்தின் தலைவராகப் பணியாற்றிய காலத்தில் முஸ்லிம்களுக்கான கலாசாரப் பல்கலைக்கழகம் வேண்டுமெனக் குரல் கொடுத்தார். (தினகரன் 21.03.1966)

1966ம் ஆண்டு கொழும்புப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டார். பொதுவாக இலங்கை பல்கலைக்கழக மாணவ சமுதாயத்தினர்கள் கூடுதலாக சமூகப் பங்களிப்புக்களில் ஈடுபடுகின்றார்கள் என்பதை விட பகிடி வதைகளிலும், காதல் விவகாரங்களிலும், அல்லது கிரிக்கெட் ரசிகர்களாகவுமிருந்து பிரச்சினைகளை உருவாக்குவதிலும், நேரங்களை வீணடிப்பதிலும் இவர்களின் பொழுது போக்குகள் அமைந்து விடுகின்றது.

ஆனால் காலிதீனின் உற்சாகமான செயற்பாடுகள் அங்கும் பிரதிபலிக்கத் தொடங்கியது. இவர் கொழும்புப் பல்கலைக்கழக "முஸ்லிம் மஜ்லிசை" உருவாக்கி அதன் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அக் காலத்தில் மற்றைய மாணவர்களின் பிரச்சினைகளைத் தனது கவலையாகக் கொள்கின்ற தனிப்பண்பு அவரிடம் நிறைந்து காணப்பட்டது. பல்கலைக்கழக வரலாற்றில், இதுபற்றி யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத ஒன்றாக இது இடம்பிடித்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் அரபுத் துறையில் சிறப்புப் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக பேராதனைப் பல்கலைக் கழகம் சென்றார். வெறுமனே மாணவராக மட்டுமல்லாது, சமூகத்தை மேம்படுத்துவதற்கான அறிவையும், சமூக உணர்வையும் விசேடமாக அவர் கொண்டிருந்தார். எனவே அவர் அந்தக் கட்டுப்பாடுகளுடன் மேலான பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களின் மத்தியில் குறிப்பிட்டுப் பாராட்டக்கூடிய ஓர் உயர்ந்த மாணவராக மதிக்கப்பட்டார்.

பாகிஸ்தானிலிருந்து இலங்கை வந்து நீண்ட காலமாகப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் சேவையாற்றிய பேராசிரியர் எஸ்.ஏ. இமாம் விரிவுரையாளர் மௌலவி யூ.எம்.தாஸிம், கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி போன்ற அறிஞர்களின் மாணவர் ஆவார். இவ்வறிஞர்களில் ஒரு சிலர் இவரின் அறிவுத்திறமையும், செயற்பாட்டினையும் மதித்து இவரை இனிய நண்பராக ஏற்றுக் கொண்டனர். அவர்களில் பேராசிரியர் எஸ்.ஏ.இமாம் அன்று விரிவுரையாளராகவும் இன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உபதலைவராகவும் கடமையாற்றுகின்ற பேராசிரியர் கலாநிதி பத்மநாதன் மற்றும் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த, சாராத பல அறிஞர்களின் உண்மையான நட்பின் கருத்தாழத்தைப் பெற்றுக்கொண்ட முக்கியமான மாணவர்களில் ஒருவராக விளங்கினார்.



*1995ம் ஆண்டு பாகிஸ்தானில் இஸ்லாமாபாத் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் அன்வர் காசிம் அவர்கள் இல்லத்தில் கலாநிதி கே.எம்.எச்.காலிதீன் அவர்களுக்கு அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தின் போது பேராசிரியர் இமாம் அவர்களும் கலந்துகொண்டார்கள். அன்றைய தினத்திலிருந்து ஐந்து நாட்களின் பின்னர் பேராசிரியர் இமாம் அவர்கள் காலமானார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு 1968ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக் கழக முஸ்லிம் மஜ்லிஸின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். மாணவர்களின் சமயம், கலாசாரம், பாரம்பரியம் பற்றிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் 1944ம் ஆண்டு ஜூலை மாதம் 28ம் திகதி முதன் முதலாக ஸ்தாபிக்கப்பட்டது. அன்று தொட்டு இன்று ஐம்பது ஆண்டு நிறைவுப் பொன்விழா காணும் காலம் வரையில் பெரும் சாதனைகள் படைத்து வருகின்றது. அப்பெரிய சாதனைகளுள் ஒன்றாக பல்கலைக் கழகப் பள்ளிவாயில் கட்டடம் ஐந்து வருடங்களுக்கு முன்னர் அப்படியே அரைகுறையாக கட்டப்பட்டு இடையில் நிறுத்தப்பட்டிருந்தது. இவரது தலைமைத்துவத்தின் பிற்பாடு முஸ்லிம் மஜ்லிஸ் புத்துயிர் அளிக்கப்பட்டு புதிய உத்வேகத்துடன் செயற்பட தொடங்கியது. எனவே குறிப்பாக இவரது காலத்திலேதான் பள்ளிவாயிலின் இரண்டாம் மாடி வேலை ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தியாகாத நிலையில் முதலாவது ஜும்ஆ 24.01.1969ம் ஆண்டு கலாநிதி எஸ்.ஏ.இமாம் அவர்களால் "அதான்" நிகழ்த்தப்பட்டு மௌலவி. ஏ.எல்.எம்.இப்றாஹிம் அவர்களால் குத்பா பேருரையை நிகழ்த்த இவர் வழியமைத்தார்.

பள்ளிவாயிலின் ஜும்ஆக் குழுத் தலைவராக இவர் கடமை புரிந்து தொடர்ந்து குத்பாக்களை இவரே இமாமாக இருந்து நடாத்தினார். இந்தச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் முஸ்லிம் மஜ்லிஸ் வரலாற்றுப் பதிவேட்டில் இவரது செயற்பாடுகளை யாருமே எட்டிப் பிடிக்க முடியாதளவுக்கு இடம் பெற்றுள்ளன.

பல்கலைக் கழகப் பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட இவர், தான் கல்விகற்ற கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியிலே ஆசிரியராகக் கடமையாற்றினார், இலங்கையில் கல்வி கற்ற பெரும்பாலான சகோதர சமூகத்தினர்கள் கூடிய தொழில் வாய்ப்புக்களையும் அவற்றின் பயனாக உயர்ந்த வாழ்க்கைத் தரங்களில் நிற்பதையும், ஆனால் முஸ்லிம்களோ அந்த முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தகுதியினை பெற்றுக்கொள்ள முடியாதவர்களாக இருப்பதை காலிதீன் அவர்கள் அவதானித்தார். அதன்படி சிந்தனையைக் கூர்மைப் படுத்தி செயல்படத் தொடங்கினர்.

அக்காலகட்டங்களில் இவர் தொடர்ந்து பிரதானமான செயற்பாடுகளிலெல்லாம் அதிசயிக்கத்தக்க அமைப்பாற்றலையும், வியக்கத்தகு செயற்றினையும் ஒருங்கே தன்னகத்துள் கொண்டுள்ள இவர், இஸ்லாமியக் கல்வி மறுமலர்ச்சிக்குத் தனது பலதரப்பட்ட ஆளுமையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் முத்திரையைக் கல்வியுலகிலும், அதறகப்பாலும் ஆழமாகப் பதித்துள்ளார் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன.

1970 -1973ம் ஆண்டு காலப்பகுதியில் "அகில இலங்கை இளம் முஸ்லிம் பட்டதாரிகள் சங்கத்தினை" உருவாக்கி அதன் ஸ்தாபக தலைவராக பதவி வகித்தார். அவர் அதில் வெளிக்காட்டிய கர்மவீரத் தன்மை விசாலித்துக் கொண்டிருக்கின்றது. இப்பட்டதாரிகள் சங்கத்தின் வெற்றிக்கான செயற்பாடுகளைப் பற்றி நமது நாட்டு தேசிய பத்திரிகைகளான தினகரன். தினபதி, வீரகேசரி ஆகியவைகளில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இவர் இச்சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில், "மாறிவரும் திட்டங்களுக்கேற்ப காலச்சூழ்நிலைகளையுணர்ந்து சமுதாயத்தினை வழிநடாத்திச் செல்லும் பொறுப்பும், எதிர்கால சமுதாயத்தை உருவாக்கும் பொறுப்பும் நமக்குண்டு. முஸ்லிம் பட்டதாரிகள் தனிப் பண்புடனும், சிறப்புடனும் விளங்குகின்றார்கள். சமுதாய மறுமலர்ச்சியில் பட்டதாரிகளுக்கும் கூடிய பங்குண்டு. படித்த மக்களால் படிக்கின்ற மாணவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்". என்று முஸ்லிம் பட்டதாரிகள் மாநாட்டில் இவர் நிகழ்த்திய உரை முக்கியத்துவம் பெறுகின்றது. (தினகரன் )

இஸ்லாமிய நாகரிகம் என்னும் பாடம் பல்கலைக் கழக மட்டத்தில் ஒரு பாடமாக அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) த்தில் இஸ்லாமிய நாகரிகத்தை ஒரு பாடமாக எடுத்துச் சித்தியடைந்தவர்களில் பல்கலைக் கழகம் நுழைய பலருக்கு அனுமதி மறுக்கப்படுவதை ஆட்சேபித்து அதற்காக அவசரக் கூட்டம் ஒன்றை கூட்டி அதன் இறுதியில் அது பற்றிய விளக்கமான மகஜர் ஒன்றை பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கும், கல்வியமைச்சர் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அவர்களுக்கும் அனுப்பி வைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டம் அனைத்தும் "அகில இலங்கை முஸ்லிம் இளம் பட்டதாரிகள் சங்கத்தின்" பிரஸ்தாபத் தலைவர் காலிதீன் அவர்களின் தலைமையிலேதான் நடைபெற்றது. (தினபதி 28.03.1972) இது குறித்து இச்சங்கம் எடுத்த நடவடிக்கைகளின் பயனாக க.பொ.த (உயர்தர)ப் பரீட்சையில் சித்தியடைந்த முஸ்லிம் மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி வழங்கப்பட்டது (தினபதி 24.06.1972)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இவர், இச்சங்கத்தின் மூலம் முஸ்லிம்களின் மத்தியில் கல்வித்துறை மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கான ஒரு நிலையான ஐக்கியத்தையும், முஸ்லிம் நாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்களில் உயர் கல்வி பயில விசேட வாய்ப்புக்களை ஏற்படுத்தியமையும் முக்கியமானவையாகும்.

எழுத்துத்துறை என்பது ஒரு முக்கியமான பணி. அவற்றுள் பலதும் பத்தும் எழுதிவிட்டு தமது பெயர் மட்டும்தான் எழுத்துலகில் பிரகாசிக்க வேண்டும். பிற இளம் எழுத்தாளர்கள் இந்தத்துறையினுள் நுழையக்கூடாது என்று எண்ணும் மூத்த எழுத்தாளர் அநேகம்பேர் உள்ளனர்.

ஆனால் காலிதீன் அவர்கள் தமிழும், தமிழ் இலக்கியமும் முழுமையாய், தற்காலத்திற்கு ஏற்றவாறு பரிபூரணமான பரிணாமம் பெற வேண்டுமானால் எந்த எழுத்துத்துறையிலுமே ஆயிரம் பூக்கள் மலரட்டும் என்பதைப்போல, நல்ல புதுப்புது இளம் எழுத்தாளர்கள் உருவாக வேண்டும். ஒருவருடன் ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு ஆக்கபூர்வமான படைப்புக்களை எமது சமுகத்திற்கு தர வேண்டும். மூத்த எழுத்தாளர் இளம் எழுத்தாளர்களை எந்த வகையிலும் மட்டம் தட்டுவது உகந்ததல்ல, என்று காலிதீன் அந்தரங்க சுத்தியுடன் செயற்பட்டார்.

அந்த வகையில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் ஜனாப் எம்.எச்.குத்தூஸ் அவர்களுடன் தொடர்புகொண்டு இலை மறை காய்களாகவுள்ள இளம் எழுத்தாளர்களின் திறமைகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் அவர்களிடமிருந்து தரமான ஆக்கங்களை பெற்று வானொலியில் ஒலிபரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுத்தமையினால் இவர் இளம் எழுத்தாளர்களின் மத்தியில் தனது இமேஜை உருவாக்கிக்கொண்டார்.

அதேவேளை அன்றைய பட்டதாரிகள் சங்கத்தின் தலைவரான காலிதீன் அவர்கள் இப்பொழுது பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை முடித்து விட்டு வெளியேறிய பட்டதாரிகள் இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் பற்றி வேதனைப்படுகின்றார். இந்தப் பிரச்சினை தமது காலத்தில் இல்லை. ஆனாலும் இந்தப் பிரச்சினை தம்முடன் தொடர்பான முக்கிய அம்சம். பட்டதாரிகள் தொழில் வசதியின்றி அவஸ்தைப்படும் நிலையை மாற்றி அமைக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மாற்றத்திற்கான திட்டங்களையும் கொள்கைகளையும் அவசர அவசியமாக தீர்மானம் எடுக்க வேண்டும் என்று அவரது சங்கங்கள் மூலம் அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்றார். இவ்வாறான சூழ் நிலைக்கேற்றவாறு இளைஞர்களின் தேவை பற்றி சிந்திப்பது காலிதீனின் பங்கு அளப்பரியது.

## ஆசிரியரும் கல்வி மறுமலர்ச்சித் தந்தையும்

இவர் உரிய வயதில் தமது பாடசாலைக் கல்வி, கழக வாழ்வு என்று மட்டுமல்லாது இஸ்லாமிய கலா ஞானங்களையும் கற்றுத் தேறிய ஒரு மார்க்க அறிஞராகத் திகழ்கின்றார். இவரது அறிவுத் தீட்சண்யத்தால் அரபு மொழி, இலக்கணம், சட்டம், கலை, தர்க்கவியல், ஹதீஸ் கலை,தப்சீர் கலை போன்ற பல துறைகளிலும் சிறந்து விளங்கிய இவர், தான் கற்ற விடயங்களை நிலை நாட்டுவதிலும் அதன்படி ஒழுகுவதிலும், முஸ்லிம் சமூகத்துக்கெதிராகப் பிறர் மேற்கொள்கின்ற சூழ்ச்சிகளையும், சதிகளையும் முறியடிப்பதிலும் அவர் எடுக்கும் எல்லா நடவடிக்கைகளும் இவரது நிதான போக்கும், அற்புதமான பண்பும், பணிவும் எவ்வளவு தூரம் மேலோங்கியிருக்குமென்று சுட்டிக்காட்ட தேவையில்லை.

இந்தப் பக்குவத் தன்மை மார்க்க கல்வியைக் கற்று மௌலவி என்னும் பட்டம் பெற்றதால் ஏற்பட்டதாகும். தான் பெற்றுக் கொண்ட கல்வி, அறிவு, சிந்தனை போன்ற எல்லாவற்றையும் மாணவர்களின் முன்னேற்றத்திற்காகத் தமது கல்வித் துறை சார்ந்த சகல விடயங்களையும் போதிப்பதில் பலரும் வியக்குமளவிற்குப் புலமை பெற்றிருந்தார்.

1972-1974ம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை அறபு ஆசிரியர் சம்மேளன தலைவராகவும் செயற்பட்டார். இந்த காலப்பிரிவிலேதான் கொழும்பு ஸாஹிறாவிலிருந்து கம்பளை ஸாஹிறாக் கல்லூரிக்கு வந்தார்.

கம்பளை ஸாஹிறாவில் சிரேஷ்ட விடுதிப் பொறுப்பாசிரியராகக் கடமையை ஏற்றார். இத்தொழில் மிகவும் இடர்பாடுகள் மிக்கது. இலங்கையில் பல பாகங்களைச் சேர்ந்த மாணவர்கள் ஒன்று பட்ட சகோதரர்களாய் தங்கிப்படிப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மாணவர்களிடம் பல் தரப்பட்ட மனப்பிறழ்வு அல்லது அவர்களது செயற்பாடுகள் காணப்படும். இதனை இடைபோட்டு நெறிப்படுத்தும் ஒரு முக்கியமான பணிதான் விடுதியாசிரியர் தொழில்.

ஒரு ஆசிரியராக இருந்து கல்வி கற்பிப்பதைப் போன்றல்ல. இது தாயாகவும், தந்தையாகவும், ஆசிரியனாகவும் ஒரே நேரத்தில் ஆற்றும் மிகப் பெரிய சேவையாகும். இதனை நானும் பிரக்ஞைபூர்வமாக வும், அனுபவு ரீதியாகவும், ஜீரணித்துக் கொண்டிருக்கின்றேன். இந்தப் பண்புயர்ந்த வாழ்க்கை அனுபவம் முதன் முதலில் காலிதீனுக்கும் ஏற்பட்டது.

இந்தப் பொறுப்பு வாய்ந்த பதவியை வகித்தவர்கள் பலவித சிறப்புக்களில் உயர்ந்து காணப்படுகின்றார்கள். அவர்களில் முன்னை நாள் பாராளுமன்ற உறுப்பினராகவும். சபாநாயகராகவும், அமைச் சராகவும், தென் மாகாண ஆளுனராகவும் திகழ்ந்த பாக்கீக் மாக்கார் அவர்களும் ஒருவர். இவர் கொழும்பு ஸாஹிறாவில் ரி.பி.ஜயா அவர்கள் அதிபராக இருந்த அக்காலத்தில் பணியாற்றினார். (ஏ.இக்பால் எழுதிய பாக்கீர் மார்க்கார் நூல்)

இவர் வழக்கம் போன்று அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் சேவைகளைவிட கம்பளை வந்த பிற்பாடுதான் ஒரு தீவிரமான சமூக சேவையாளனாக மாறுகின்றார்.

இவர் முஸ்லிம்களின் வாழ்க்கைக்கு மிக அந்நியோன்யமாகத் தேவைப்படுகின்ற கல்வியியல் பரிமாணத்தையே அடிக்கடி சிந்தித்தார். கவலைப்பட்டார். "உற்றுழி உதவியும் உறுப்பொருள் கொடுத்தும் கற்கை நன்றே" என்று புறநானூறு கூறுகின்றது.

ஆனால் இவரது சிந்தனைப் போக்கிற்கு நேர் மாற்றமான, படுமோசமான, அவராலேயே எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு இலங்கை முஸ்லிம்களின் கல்வி நிலை பாதிக்கப்பட்டிருந்தது. பொருளாதார அந்தஸ்த்தோடு வாழும் முஸ்லிம்களுக்கு மார்க்கக் கல்வி புகட்டக்கூடிய அடிப்படை வாய்ப்பு வசதிகள் மறுக்கப்பட்டிருந்தது. சிறுபான்மையினரின் உரிமைகள் பங்கப்படுத்தப்படும் காலமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் இவர் வருங்கால மாணவர் சமுதாயத்திற்காகக் கூடுதலான அக்கறையோடு செயற்பட்டார் என்பதற்கு அவர் உடனுக்குடன் எடுத்த நடவடிக்கைப் பிரயோகங்கள் துலாம்பரமாகக் காணக்கூடியதாக உள்ளன.

இவர் அரபு மொழிக்கு புதிய கல்வித் திட்டத்தில் இடமளிக்க வேண்டுமெனக் கூறி கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி பிரேமதாச உடகமவிடம், அகில இலங்கை மௌலவி ஆசிரியர்கள் பேரவையின் மத்திய கவுன்சிலின் தலைவர் என்ற வகையில், மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தார். இது பின்வருமாறு அமைகின்றது.

1972ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கல்வித் திட்டத்தில் ஆறாம் வகுப்பிலிருந்து அறபு மொழி போதிப்பது நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் முஸ்லிம்கள் பெரிதும் கலை கொண்டுள்ளது. மொழி முஸ்லிம்களது சமயத்தோடு தொடர்புடையது. அதனை கற்பது முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் மிகவும் அவசியமாகவுள்ளது. எனவே, 1973ம் ஆண்டு முதல் அரபு மொழியைத் தொடர்ந்தும் ஆறாம் வகுப்பிலிருந்து போதிக்க உடனே நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றார்.(தினபதி 16.12.72)

மேலும் இவர் அறபு ஆசிரியர்களுக்கு, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் எனக் கல்வியமைச்சிடம் அகில இலங்கை மௌலவி ஆசிரியர்கள் பேரவையின் தலைவர் என்ற வகையில் வேண்டுகோள் விடுத்தார். அதில் சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக அறபு ஆசிரியர்கள் மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கிறார்கள். கடந்த காலங்களில் அவர்கள் எந்த வித முன்னேற்றமும் இன்றி தொடர்ந்தும் சாதாரண ஆசிரியர்களாகவே இருந்து வந்துள்ளனர். இவர்களுக்கு உடனடியாகப் பயிற்சி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்தினார். (தினபதி 18.12.72)

இவர் வெறுமனே விஞ்ஞானக் கல்விகளையும், பௌதீகக் கல்விகளையும் மட்டுமல்லாமல் ஆன்மீகமான பண்பாட்டு அம்சங்களையும், சமுதாய நெறிமுறைகளையும் உள்ளடக்கிய கல்வி முறையே நவீன நாகரிக சமுதாயத்தினர் அவசியம் பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு அவனுக்கு சில பிறமொழி பற்றிய ஆற்றல் வேண்டும். இவை அதிகம் தேர்ச்சி பெற்ற ஒரு மனிதனுக்கு இன்றியமையாத ஒன்றாகும். இந்த வல்லமை இவரிடம் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தேவைக்கு ஏற்றவாறு ஆங்கிலம், சிங்களம், அரபு, தமிழ் ஆகிய மொழிகளில் ஆணித்தரமான கருத்துக்களை ஒன்றன் பின் ஒன்றாய் முன் வைத்தார். மேற்படி முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் கணிசமான அளவு அரசாங்கத்தால் முழு நிறைவாக ஏற்றுக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இது பற்றி தினபதி ஆசிரியர் பீடம் பின்வருமாறு எழுதியுள்ளது.

"மௌலவி ஆசிரியர்கள் கடந்த 30 வருடங்களுக்கு மேலாகப் பயிற்சி வசதியற்று இருக்கின்றார்கள். இவர்களையும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக ஆக்க வேண்டாமா? இனிமேல் மௌலவி ஆசிரியர்களாகப் சேர்க்கப்படும் இளைஞர்களும் பயிற்சி பெற வேண்டாமா? அதற்கு மௌலவி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்று அமைக்கப்படுவது அவசியமல்லவா? மௌலவி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அகில இலங்கை மௌலவி ஆசிரியர்கள் பேரவையின் மத்திய கவுன்சில் தலைவர் ஜனாப் கே.எம்.எச்.காலிதீன் கல்வியமைச்சிடம் அண்மையில் வேண்டிக் கொண்டார். இந்தக் கோரிக்கை நியாயமானது என்று ஏற்றுக் கொண்ட கல்வியமைச்சர் அல்ஹாஜ் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அடுத்த வருடத்திலிருந்து மௌலவி ஆசிரியர்களுக்கென ஒரு பயிற்சிக் கல்லூரியை ஆரம்பிப்பதாகத் தெரிவித்தார். (தினபதி ஆசிரியர் பீடம் (09.06.1973).

**தினபதி**

தந்தி: "தினபதி", கொழும்பு.
தொலைபேசி: 23882, 23884, 23864
ா, குணசேன மாவத்தை,
கொழும்பு.

1973 ஜூன் 9

### மௌலவி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

முஸ்லிம் பாடசாலைகளில் மௌலவி ஆசிரியர்கள் சிறந்த பணியாற்றி வருகிறார்கள். முஸ்லிம் பிள்ளைகளுக்கு இஸ்லாம் மார்க்கத்தைப் போதிப்பது அவர்கள் ஏற்றிருக்கும் கடமையாகும்.

மௌலவி ஆசிரியர்கள் மேலும் சிறப்பாகப் பணியாற்றுவதற்கு அவர்களுக்கு தக்க பயிற்சியை அளிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை அல்லவா?

அவர்கள் மார்க்க தத்துவங்களைப் படித்திருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் ஒரு விஷயத்தைத் தாமே படித்தறிந்து கொள்வது வேறு. படித்ததை மாணவர்களுடைய மனதில் பதியுமாறு போதிக்கும் திறமை வேறு.

போதிக்கும் தொழிலில் ஆற்றல் பெறுவதற்கு "எப்படிப் போதிப்பது?" என்ற நுணுக்கங்களைப் பயின்று தெரிந்து கொள்ள வேண்டும். அதனாலேயே, படித்த பட்டதாரிகள் கூட ஆசிரியர்களாகப் பணிபுரிய வேண்டுமானால், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்றில் சேர்ந்து பயிற்சி பெறுவது அவசியம் என்ற கருத்து இந்நாளில் வலியுறுத்தப்படுகிறது.

மௌலவி ஆசிரியர்கள் கடந்த 30 வருடங்களுக்கும் மேலாகப் பயிற்சி வசதியற்று இருக்கிறார்கள். இவர்களையும் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் ஆக்க வேண்டாமா? இனிமேல் மௌலவி ஆசிரியர்களாகச் சேர்க்கப்படும் இளைஞர்களும் பயிற்சி பெற வேண்டாமா? அதற்கு மௌலவி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்று அமைக்கப்படுவது அவசியம் அல்லவா?

மௌலவி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான வசதியினை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அ இ ல இலங்கை மௌலவி ஆசிரியர்கள் பேரவையின் மத்திய கவுன்ஸில் தலைவர் ஜனாப் கே. எம். எச். காலிதீன் கல்வி அமைச்சரிடம் அண்மையில் வேண்டிக் கொண்டார்.

இந்தக் கோரிக்கை நியாயமானது என்பதை ஏற்றுக் கொண்ட கல்வி அமைச்சர் அல்ஹாஜ் டாக்டர் பதியுத்தீன் மஹ்மூது அடுத்த வருடத்திலிருந்து மௌலவி ஆசிரியர்களுக்கென ஒரு பயிற்சிக் கல்லூரியை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளார் என்று ஒரு செய்தி கூறுகிறது.

மார்க்க வளர்ச்சியில் அக்கறை கொண்டவரான கல்வி அமைச்சரின் இந்த முடிவை நாம் வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம். அடுத்த வருடத்துடன் மௌலவி ஆசிரியர்களின் நீண்டகாலக் குறை ஒன்று நிவர்த்தியாகும் என்று எதிர்பார்க்கிறோம்.

*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போன்று தினபதி ஆசிரியர் பீடம் இஸ்லாமிய நாகரிகப் பாடத்திற்கு ஆசிரியர்கள் தேவை என்பதை மேற்கோள் காட்டி அகில இலங்கை மௌலவி ஆசரியர்கள் பேரவையின் மத்திய கவுன்சில் தலைவர் கே.எம்.எச்.காலிதீன் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் கலாநிதி சுமதிபாலவிடம் சமர்ப்பித்துள்ள வேண்டுகோளைச் சுட்டிக் காட்டி எழுதியுள்ளது.

கல்வி பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சைக்கு இஸ்லாமிய நாகரிகம் ஒரு பாடமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்பாடத்தைப் படிப்பதற்கு இஸ்லாமிய இளைஞர்கள் ஆர்வமுடையவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் எப்படிப் படிப்பது என்பதுதான் அவர்களுக்குத் தெரியவில்லை. காரணம், இப்பாடத்தைப் போதிப்பதற்கு தகுதியும் திறமையும் வாய்ந்த ஆசிரியர்கள் கிடைப்பதாக இல்லை. எப்படியான ஆசிரியர்களை இஸ்லாமிய நாகரிகம் கற்பிக்கும் ஆசிரியர்களாக நியமிக்கலாம் என்பதற்கான ஆலோசனைகளையும் அவர் கூறியிருப்பதாகத் தெரிகின்றது. பாடத்தை மட்டும் பாடவிதானத்தில் சேர்த்து வைத்தல் போதாது. அதனை மாணவர்கள் கற்கக்கூடிய வசதிகளைச் செய்து வைப்பதும் கல்வித் திணைக்களத்தின் கடமையாகும் என்று குறிப்பிட்டுள்ளது. (தினபதி ஆசிரியர் பீடம் - 73.செப்ரமபர்14 )

**தினபதி**

தந்தி: "தினபதி", கொழும்பு.
தொலைபேசி: 23882, 23884, 23856
5, ஜயந்தே மாவத்தை,
கொழும்பு.

*1973 செப்டம்பர் 14*

**இஸ்லாமிய நாகரிகத்துக்கு ஆசிரியர் தேவை**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்கு "இஸ்லாமிய நாகரிகம்" என்பது ஒரு பாடமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இப்படியான ஒரு பாடம் சேர்க்கப்பட்டபோது அதை இஸ்லாமிய மக்கள் பெரிதும் வரவேற்றார்கள்.

இஸ்லாமிய நாகரிகம் என்ற பாடத்தைப் படிப்பதற்கு இஸ்லாமிய இளைஞர்கள் ஆர்வமுடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் எப்படிப் படிப்பது என்றுதான் அவர்களுக்குத் தெரியவில்லை. காரணம், இந்தப் பாடத்தைப் போதிப்பதற்கு தகுதியும் திறமையும் வாய்ந்த ஆசிரியர்கள் கிடைப்பதாக இல்லை.

இது சம்பந்தமாக அகில இலங்கை மௌலவி ஆசிரியர்கள் பேரவையின் மத்திய கவுன்சில் தலைவர் மௌலவி கே. எம். எச். காலிதீன் ஒரு வேண்டுகோளை கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. சுமதிபாலாவிடம் சமர்ப்பித்திருக்கிறார்.

எப்படியான தகுதியுடையவர்களை இஸ்லாமிய நாகரிகம் கற்பிக்கும் ஆசிரியர்களாக நியமிக்கலாம் என்பதற்கான ஆலோசனைகளையும் அவர் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

பாடத்தை மட்டும் விதானத்தில் சேர்த்து வைத்தால் போதாது. அந்தப் பாடத்தை மாணவர்கள் கற்கக்கூடிய வசதிகளைச் செய்து வைப்பதும் கல்வித் திணைக்களத்தின் கடமையாகும்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் வகுப்பு நடத்தப்படும் முஸ்லிம் பாடசாலைகளில் இஸ்லாமிய நாகரிகம் போதிக்கக்கூடிய ஆசிரியர்களைக் கட்டாயமாக நியமிக்க வேண்டும். இந்தக் காரியத்தைக் கல்வி அமைச்சு உடனடியாகக் கவனிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் 1970-1977ம் ஆண்டு வரை கல்வி அமைச்சராகயிருந்து முஸ்லிம் சமுகத்திற்கு ஆற்றிய பணிகள் எண்ணத்தில் வியாபித்து நிற்கின்றது. அந்தப் பணிகள் விசாலமானது. முஸ்லிம் சமூகத்திற்காக மேலும் சேவைகள் செய்யப்பட வேண்டும் என்பதற்காக கல்வி அறிவும், ஆற்றலும் கொண்ட சமூக இயக்கத் தலைவர்கள் மக்களுக்கு இன்ன அடிப்படைப் பிரச்சினை உள்ளது என்று எடுத்துரைப்பார்கள். காலிதீன் அவர்களும் விழிப்புடன் இருந்து சமயத்திற்கேற்ப காரியங்களை சாதித்தார்கள்.

இவரது திட்டவட்டமான செயற்பாடுகள் யாவையும் கல்வியமைச்சர் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அங்கீகரித்தார். அதுமட்டுமல்லாது திடமான செயலூக்கமுள்ள இவரின் அறிவின் செயற்பாடுகளைக் கண்டு அவருடன் நெருங்கிப் பழகும் அறிஞர்களுக்குள்ளே ஒருவராகிக் கொண்டார். இது பற்றி கம்பளை ஸாஹிறாக் கல்லூரியில் 1974ல் நடைபெற்ற அகில இலங்கை மௌலவிமார்கள் மகாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட சமயம் கல்வியமைச்சர் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அவர்கள் நிகழ்த்திய சிறப்புச் சொற்பொழிவில் குறிப்பிட்டார் என்பது முக்கிய அம்சமாகும்.

## கதிப்மார் சம்மேளனம்

முஸ்லிம் பிரச்சினைகளை இனங்காட்டவும் அவற்றுக்கான தீர்வு காணவும் சிறந்த மார்க்கமாக இயங்கும் முறையினையை இவர் இலட்சியமாகக் கொண்டிருந்தார். இதுபற்றி இவரது செயற்திறன்கள், ஆழ்ந்த அனுபவங்கள், பலாபலன்கள் ஆகியவை தெட்டத் தெளிவாக உணர்த்துகின்றன. எனினும் இவ்வமைப்பு முறை இவரது தலைமைத்துவத்தின் மூலம் படிப்படியாக வளர்ச்சி பெற்றது என்ற உண்மையை ஏற்றுக் கொண்டாலும் ஒரு நிரந்தரமான இயக்கமொன்றை இவரால் கட்டியெழுப்ப முடியவில்லை.

இஸ்லாமிய உலகு எல்லைகளற்று விரிகின்றது. கோடுகளிட்டு குறுகிய எல்லைக்குள் நின்று இஸ்லாமிய எழுச்சியினை ஏற்படுத்த முடியாது. குறிப்பாக மேற்கத்தியவாதிகள் முஸ்லிம்களுக்கு எதிராக திட்டமிட்டு மேற்கொள்ளும் சூழ்ச்சிகளை ஒழிப்பதற்கு அல்லது குரல் கொடுப்பதற்கு தனியானதொரு அமைப்பு தேவைப்பட்டது. அதேவேளை தமது நாட்டு அரசியலில் பொருளாதார சமூகவியற்துறைகளில் ஏற்படுத்தும் புறநிலைத் தாக்கங்களுக்கு ஈடுகொடுக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களுடைய கலை கலாச்சார பண்புகளையும் அதன் பரிமாணங்களையும் பாதுகாக்கவும் ஒரு அமைப்பு தேவையென உணர்ந்து, தன் இலக்குகளை அடைவதற்கு ஒரு ஸ்தீரமான அமைப்பை உருவாக்கினார்.

1974ம் ஆண்டு ஆரம்ப காலத்தில், "அகில இலங்கை கதீப்மார் சம்மேளனம்" எனும் பெயரில் பள்ளிவாயில் நம்பிக்கையாளர்களையும், கதீப்மார்களையும், ஜமாஅத்தார்களையும் (ஊர்வாசிகள்) ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டது. இதன் அங்குரார்ப்பண வைபவம் 10.06.1974ம் ஆண்டு கம்பளை கஹட்டபிட்டிய ஜும்ஆ பள்ளிவாயிலில் நடைபெற்றது. இதில் ஆயுள் காலத் தலைவராக காலிதீன் தெரிவு செய்யப்பட்டார்.

இவர் தனக்கென ஒரு தனி வழியை அமைத்துக் கொண்டு முஸ்லிம்களின் மேம்பாட்டை இரவு பகல் பாராது இவ்வமைப்பின் மூலம் எண்ணற்ற சாதனைகளைக் கண்டு கொண்டிருக்கிறார். இன்னும் அவர் காணவுள்ளார். அவைகளில் முக்கியமான சில.

01. செல்வந்தர்களின் கைகளிலும், அரசியல் வாதிகளின் அதிகாரத்திலும் கட்டுப்பட்டிருந்த கதீப்மார்களுக்கு விடுதலை கிடைத்தது.

02. கதீப்மார்கள், முஅத்தீன்கள் ஆகியோருக்கான ஓய்வூதியத் திட்டங்களையமைப்பதற்கு வழிவகைகள் மேற்கொண்டார்கள்.

03. மாகாண ரீதியாகவும், மாவட்ட அடிப்படையிலும், பிரதேச வாரியாகவும்,இஸ்லாமிய விடயம் பற்றிய ஆய்வுக் கருத்துக்களை நடாத்தினார்கள்.

04. நூல் வெளியீட்டுப் பணியகம் ஒன்றை ஆரம்பித்து ஆராய்ச்சித் துறைகளில் ஆர்வமுள்ள எழுத்தாளர்களின் ஆய்வுக் கட்டுரைகளை நூலாக வெளியிட்டுள்ளார்கள்.

05. இலங்கை முஸ்லிங்களின் கலாசார அபிவிருத்திற்கும், அறபு மொழி வளர்ச்சிக்கும் அரசாங்கம் தனியான அமைச்சு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று இவர்கள் முன்வைத்த பிரேரணையை அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் தலைவர் மர்ஹூம், அல்ஹாஜ் கலாநிதி எம்.ஸி.எம்.கலில் ஆமோதித்தார். அதனை ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. (தினபதி 04.05.1979ல் இது உருவாக்கப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம் கலாசாரம் பேணத் தனி அமைச்சு

### அரபு ஆசிரியர் சங்கப் பிரேரணை

கொழும்பு, மே 4

இலங்கை முஸ்லிம்களின் கலாசார அபிவிருத்திக்கும், அரபு மொழியின் வளர்ச்சிக்கும் அரசாங்கம் தனியான அமைச்சு ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

இலங்கை அரபு ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த மாநாட்டில் பிரேரணை சமர்ப்பித்து உரையாற்றிய அகில இலங்கை கதீப்மார் சங்கத்தின் தலைவர் மௌலவி கே. எம். எச். காலிதீன் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொழும்பு - ஸாஹிராக் கல்லூரி [illegible] தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் தலைவர் அல்ஹாஜ் டாக்டர் எம். சி. எம். கலீல் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

டாக்டர் கலீல் தனது உரையில் கூறியதாவது:—

முஸ்லிம்கள் தமது சட்டங்களையும், கலாசார அமைப்பு முறைகளையும் பின்பற்றுவதற்கு தனி அமைச்சு ஏற்படுத்தப்படுவது அவசியமாகும்.

இந்த அமைச்சை ஏற்படுத்துவதன் மூலம் முஸ்லிம்களின் பிரச்சினைகளை நூற்றுக்கு நூறு வீதம் ஆராய்வதற்கு வழி ஏற்படும்; என் [illegible]

06. 1986 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21, 22ம் திகதிகளில் கண்டி கட்டுக்கல ஜும்ஆப் பள்ளிவாயிலில் இடம் பெற்ற அகில இலங்கை கதீப்மார்கள் சம்மேளனக் கருத்தரங்கில் முஸ்லிம்களுக்கான இஸ்லாமிய அமைப்பிலான தனியான அரசியல் கட்சி நிறுவப்பட வேண்டும் என்பதை இலங்கையில் முதன் முதலாக தீர்மானம் நிறைவேற்றிய ஓர் அமைப்பின் தலைவராகிறார்.

முஸ்லிம்களின் அரசியல் பிரமுகர்கள் இருந்த போதும் முஸ்லிம்கள் அரசியலில் அனாதையாக்கப்பட்டவர்களாக இருந்தார்கள். முஸ்லிம்களுக்கு தனியான முஸ்லிம் கட்சி என்ற நிலை உருவாக்கம் பெறுவதில் தாமதமடைந்து வந்த காலத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் வரவும், காலிதீனின் சிந்தனை சமூகப் போக்கும் அதி முக்கியத்துவம் பெறுகின்றது. முஸ்லிம்களின் வரலாற்றில் இது ஒரு புதிய தடம்.

இந்தக் கட்சியின் பகைப்பலத்தை விளங்கிக் கொண்டவராக காலிதீன் இருந்தபடியால் முஸ்லிம் சமூகத்தினுடைய எதிர்காலச் செயற்பாட்டை தெளிவுற வகுப்பதற்கு ஏதுவாக முஸ்லிம் காங்கிரஸில் காலிதீன் இணைந்து கொள்கிறார். இந்த உண்மையை அமைச்சர் அஸ்றப் அவர்கள் பறை சாற்றுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபற்றி இஸ்லாம், சமூகம், முஸ்லிம் உலகம் என்னும் நூல் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இன்றைய இலங்கை கப்பல் துறை, துறைமுகங்கள் அமைச்சர் அல்ஹாஜ் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்கள் பேசுகையில்

"ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தன்னை அரசியல் கட்சியாகப் பிரகடனம் செய்வதற்கு முன்னர் இந்த நாட்டிலே கதீப்மார் சம்மேளனத்தின் தலைவர்தான் முஸ்லிம்களுக்கென ஓர் அரசியல் கட்சியும் மாகாண சபையும் வேண்டும் என்று முதலிலே முன்னின்று உழைத்த சிந்தனையாளர் ஆவார் என்று குறிப்பிடுகின்றார்".

(ஒலி நாடா)

07. தெல்தோட்டையில் கதீப்மார், இமாம்களுக்கான ஒரு வார கால வதிவிடப் பயிற்சிக் கருத்தரங்கை நடத்தினார்கள். இது கதீப்மார்களின் வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறது.

---




*1996 ஆம் ஆண்டு கத்தீப்மார் சம்மேளனம் கம்பளையில் நடாத்திய மாநாட்டில் நீண்ட காலமாக மார்க்கப்பணிபுரிந்து வரும் உலமாக்களில் ஒருவருக்கு கத்தீப்மார் சம்மேளனத் தலைவர் கலாநிதி கே.எம்.எச்.காலிதீன் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும், சம்மேளனச் செயலாளர் மௌலவி நஜிமுத்தீன், ஈரான் இஸ்லாமிய குடியரசு சேர்ந்த பிரமுகர் குஜ்ஜத்துல் இஸ்லாம் சாக்கரீன் அகியோரை படத்தில் காணலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கை நெறியும் இலங்கை கதீப்மார் சம்மேளனமும் இணைந்து அட்டாளைச்சேனையில் நடாத்திய இருநாள் (1997.மே. 31, ஜுன்1) கருத்தரங்கும் அதி முக்கியத்துவம் பெறுகின்றது.

09. கதீப்மார்கள், இமாம்களுக்கான இரண்டாவது தேசிய வதி விடப் பயிற்சிக்களம் 1998 ஆகஸ்ட்.8, 9, 10, 11 நான்கு நாள் அல்முபாறக் மத்திய கல்லூரியில் இடம் பெற்றது . இதில் மிக முக்கியமான அறிஞர்கள் பங்கு பற்றி இந்நிகழ்வை சிறப்பித்தார்கள் என்பது பெருமைக்குரிய விடயம்.

வடகிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள், தமிழர்கள், இலங்கையின் தலைநகர் சென்று தேவையான சோலிகளை பூர்த்தி செய்வதில் பல சிரமங்களை அனுபவிக்கின்றார்கள். குறிப்பாக கல்முனைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் கொழும்பு சென்று வர நேரிட்டால் அவருக்கு பாரிய விளைவுகள் ஏற்படுகின்றது. அவர் ஒரு ஏழையாக இருந்தால் உயர்ந்த பஸ் கட்டணம், தங்குமிட வசதியின்மை, மொழிப் பிரச்சினை, உணவுக் கஷ்டம், பாதுகாப்பு அதிகாரிகளின் கெடுபிடி போன்ற இன்னோரன்ன சொல்லொண்ணா துன்பங்களை அனுபவிக்கின்றார்கள்.

ஆயினும், காலிதீன் அவர்கள் கொழும்பு செல்வதாக இருந்தால் அவரது வாகனத்தில் தனியே செல்லும் பழக்கம் கிடையாது. எவ்வாறாவது கொழும்பு செல்லும் அவரது வாகனத்தில் ஒரு நபரைச் சேர்த்துக் கொள்வார். இவர் தனிப்பட்ட ரீதியாகவோ இயக்க ரீதியாகவோ மற்றவர்களுக்கு உதவும் பாங்கு தனித்தன்மை வாய்ந்தது அதேவேளை கத்தீப்மார் சம்மேளனத்தின் மூலம் இவர் ஆற்றிய சீர்திருத்த பணிகள் பல. இவர் பிறரை பகைமை பாராட்டாமல், விமர்சனம் செய்யமால் மிக அமைதியாகவும், நம்பிக்கையுடனும் மேற்கொண்டுள்ள பணிகள் உண்மையில் முஸ்லிம் சமூகத்தவர்களின் ஒரு காலக்கண்ணாடிதான். இவரது இப்பணிகளைப்பற்றி அவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் அஷ்ரப் அவர்கள் மேலும் பேசுகையில்,

"நான் கலாநிதி காலிதீனைப்பற்றி ஏறத்தாழ கால் நூற்றாண்டுகாலமாக அறிந்து வைத்திருக்கின்றேன். அவர்களுக்கு அவர்களுடைய சொந்த வேலைகளுக்கு நேரம் இருக்குமென்று நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கவில்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவரைப் பற்றிய மனோ நிலைகள், மனப்பதிவுகள் இருக்கின்றன. கலாநிதி காலிதீன் ஓர் உற்சாகமான மனிதர். கையிலே ஒரு கறுத்தப் பை. அந்தப் பைக்குள்ளே எண்ணற்ற பத்திரங்கள். அதில் அவர் பற்றிய பத்திரங்கள் எதுவும் இருக்காது. எல்லாமே மற்றவர்கள் சம்மந்தமான பிரச்சினைகள்தான். தெருவிலே உள்ள பிரச்சினைகளை தலையிலே போட்டுக் கொண்டு அவர் அங்குமிங்கும் அலைந்து திரிவார். அப்படிப்பட்ட மனப்பாங்குடைய ஒரு நல்ல மனிதருடைய முயற்சியை, விளைச்சலை நாம் பாராட்டுகின்றோம்." என்று குறிப்பிடுகின்றார்.

இந்தக்கூற்று இவர் கடைப்பிடித்து வந்த மரபுகளைத் தெளிவுபடுத்துகின்றது. அதிலிருந்து இவரது உண்மைச் சொரூபம் அழகிய சூழலில் வாழ்வதற்கு இவரது பொது மானிடப் பண்புகள் இவரை விஞ்சி வெளிவருகின்றன.

## மக்கள் மனதில் நிறைந்த மனிதர் ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளராகின்றார்.

1972--1976 காலப்பகுதிகளில் கம்பளை ஸாஹிறாக் கல்லூரியில் சிரேஷ்ட விடுதிப்பொறுப்பாசிரியராகவும், ஆசிரியராகவும் கடமை புரிந்து விட்டு இந்த நாட்டின் முஸ்லிம்களின் கல்வி நிலையில் தலை நிமிரும் நாள் எப்போது வருமெனவும், வியாபாரம் செய்ய முதலீடு இல்லாமல் வீட்டை அடகுவைத்தவர்களும், வியாபாரத்தில் நஷ்டம் போனவர்கள் பிச்சைக்கார வாழ்க்கை வாழ்வதிலும் காலத்தை எவ்வாறு ஓட்டப் போகின்றார்கள். நெல் அறுவடைசெய்து சூடு அடிக்கும் போது வேலைக்காரன் கம்பெடுத்து முழுநாளும் நெற்கதிர்களை வாட்டுவதற்காகவும் ஒவ்வொரு நாட்களும் கஷ்டப்பட்டு போடியாருடன் சண்டை போட்டுக் கிடைக்கும் கூலிநெல்லைக் கொண்டு போதுமானதே என்று திருப்தி அடையப் போகின்றார்களா?

வயலுக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வாப்பாவும், மகனும் அந்த நிலத்திற்கே அவர்களது எதிர்காலத்தை உரமாக்கப் போகின்றார்களா? அல்லது சர்வதேச வியாபாரத்தில் விரும்பிய நாடுகளுடன் தொடர்பு கொள்ளவும், விரும்பிய தொழில் சாதனைகளை நிலைநாட்டவும், கல்வியைத் தேடிக் கற்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மைச் சுற்றி இருட்டி இருக்கும் இருளை அகற்ற வேண்டுமாயின் முதற்படி முஸ்லிம் சமுதாயத்தின் விதியை நன்குணர்த்தக் கூடிய வாய்ப்பும் வசதியும் காலிதீன் அவர்களுக்கு அப்பொழுது தேவைப்பட்டது.

1976ம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அறபு, இஸ்லாமிய நாகரிகத்துறையில் விரிவுரையாளராகக் கடமையாற்றத் தெரிவு செய்யப்பட்டார். இதையிட்டு கல்லூரியில் பாராட்டு விழா ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்கள். அதிலே கல்லூரி ஆசிரியர் ஜனாப் ஏ.எச்.எம். மர்சூக் தலைமை வகித்து உரையாற்றுகையில்.

"எதிர்கால மாணவ சமுதாயத்துக்கு முன்மாதிரியான பாரம்பரியம் ஒன்றை உருவாக்கிவிட்டு செல்கின்ற மௌலவி காலிதீன் அவர்களுக்கு ஆசிரிய சமுகத்தவர்களும், மாணவர்களும் அளிக்கும் கண்ணியத்தைக் கண்டு நாம் பூரிப்படைகின்றோம் கடந்த நான்கு ஆண்டுகளாக உயர் வகுப்புகளில் நூறு வீத சித்தியை ஏற்படுத்தியதன் மூலம் அவர் தமது கடமையை சிறப்பாகச் செய்துள்ளார் என்பதை நிரூபித்துள்ளார்" எனக் கூறினார்.

அதனை தொடர்ந்து மௌலவி எம்.எஸ்.எம்.மன்சூர் உரை நிகழ்த்துகையில்
" காலிதீன் அவர்களுக்கு கிடைத்திருக்கும் பதவி அவருக்கு மிகப்பொருத்தமானது அயராத உழைப்பும், கல்வித்துறையில் தணியாத ஆசையோடு ஈடுபட்டு உழைக்கும் அவர் எவருக்கும் இனியவரான இலச்சியவாதியாக விளங்குகின்றார்" என்று கூறிப்பிட்டார். மற்றும் மாணவர்களின் பிரியாவிடை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (தினகரன் 29.06.1976)

இவர் கம்பளையில் நீண்ட காலம் வாழ்ந்ததால் அந்த ஊர் மக்களின் உள்ளத்தில் நீங்காத இடத்தைப் பிடித்துக் கொண்டார். இவர் கம்பளையில் வாழ்ந்த காலமெல்லாம் முஸ்லிம் சமூகத்தின் உயர்வுக்காகப் பாடுபட்டார். இவர் இவ்வூரைவிட்டு யாழ்பல்கலைக் கழகம் செல்லும் போதுதான் அந்த மக்கள் மிகவும் கவலைப்பட்டனர். எனினும் ஒரு நல்ல பணிக்காகச் செல்லும் இவருக்கு பிரியாவிடை நிகழ்ச்சியொன்றை கம்பளை கஹட்டபிட்டிய ஜும்ஆப் பள்ளிவாயில் நிர்வாகிகள் ஏற்பாடு செய்தனர். அதில் அதன் தலைவர் ஜனாப் எம்.மசூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரை நிகழ்த்துகையில்
" எங்களுக்காகப் பணியாற்றிய காலிதீன் அவர்களை கம்பளை மக்கள் மறக்கமாட்டார்கள்" என்று குறிப்பிட்டார். ( தினகரன் 26.06.1976)

காலிதீன் அவர்கள் கம்பளை வாழ் மக்களையும், மாணவர்களையும் அன்புகொண்டு எவ்வாறு ஓர் உந்து சக்தியாக இருந்தாரோ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளராகச் சென்ற பின்னர் அதைப்போலவே இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றுக்கு முதுகெலும்பாக விளங்குவார் என்பது அவரின் உறுதியான நிலைப்பாடுகள் உணர்த்துகின்றன.

இவர் எங்கு வாழ்ந்தாலும் அங்கெல்லாம் ஒரு தனியான இடத்தையும், உயர்ந்த மதிப்பையும் பெறுகின்றார். இவைகள் அனைத்துக்கும் இவரது பின்னணியில் ஒரு அழகுணர்ச்சி சூட்சகமாக இழையோடுகின்றது. எனவே,

"தோன்றிற் புகழோடு தோன்றுக - அஃ்திலார்
தோன்றலில் தோன்றாமை நன்று."

என்ற குறட்பாவிற்கு ஏற்ப இவரது மேதாவித்தனங்கள் சமூக அந்தஸ்தினை அடையாளப்படுத்தியுள்ளன என்பதில் சந்தேகமில்லை.

## யாழ்ப்பல்கலைக்கழகத்தில் புதிய திருப்பம்

1976ம் ஆண்டில் யாழ்ப் பாணப்பல்கலைக்கழகத்திற்கு இவர் வந்த பின் எல்லா வற்றுக்கும் மேலாக வாழ்க்கையில் பல உயர் தரமான திருப்பு முனைகள் நிகழ்ந்தன. பல்கலைக்கழக மாணவர்களும் அங்குள்ள மக்களும் கௌரவமும், மதிப்பும் இவருக்கு அளித்தார்கள். அங்கு அவருக்கு அறிமுகம் ஒன்று அவசியம் இருக்க வில்லை. எல்லோருமே இவரைப் பற்றி நன்கு அறிந்து வைத்திருந்தனர்.

இவர் கற்பித்தலைத் தொழிலாகக் கொண்டாலும் தனது பொதுச் செயற்பாடுகளில் இருந்து ஓய்வு பெறவில்லை. முஸ்லிம் மாணவர்களின் நலன்களில் அதிக அக்கறையோடு செயற்பட்டார். பல்கலைக்கழக மாணவர்களிடத்தில் முஸ்லிம் கலாசாரப் பாரம்பரியம், ஆக்க இலக்கியம், சமூக நோக்கு என்பன பிரதிபலிக்கப்பட வேண்டுமெனச் சிந்தித்தார். அவரிடம் அதற்கான அறிவு வளமும், நடைமுறைப் பயிற்சியும், அனுபவமும், மனப்பாங்கு ஆகியனவும் தாராளமாக இருந்தன.

தேவையான விடயங்களை தேவையானவர்களிடம் அணுகி அதை நடைமுறைப்படுத்துவதில் இவர் சகலகலா வல்லவர்.இவர் மேற்கொண்ட திட்டவட்டமான நடவடிக்கையின் பயனாகத்தான் யாழ் வளாக "முஸ்லிம் மஜ்லிஸ்" அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1976-1977 ம் ஆண்டுக்கான போஷகராக விரிவுரையாளர் காலிதீன் அவர்களும் பெரும் பொருளாளராக இன்று விமர்சனத்துறையில் சிறந்து விளங்குகின்ற கலாநிதி எம்.ஏ. நு..மான் அவர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள். (தினகரன் 04.08.1976)

காலிதீன் சமகாலத்தேவையின் அடிப்படையில் ஒவ்வொரு அம்சங்களையும் பரிசீலனைக்கு உள்ளாக்கியே வெற்றி கண்டார். இந்த வெற்றிக்கு முக்கிய காரணம் தன் நம்பிக்கையாகும். அவர் எதை எடுத்தாலும் மிக இலகுவாகச் செய்யலாம் அல்லது முடியுமெனச் சொல்லிவிடுவார். அத்தகைய நம்பிக்கை எனும் கயிற்றின் மூலம் முஸ்லிம்மாணவர்களின் கல்வி அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதில் முழு முயற்சியுடன் செயற்பட்ட இவரே யாழ் வளாகத்தில் அறபு மொழிப் போதனையையும் ஆரம்பித்து வைத்தார். (தினகரன் 25.2.1977)

அதே சமயம் மௌலவி எம்.ஐ. அப்துல் ரஸாக் அவர்களை உதவி விரிவுரையாளராக நியமனம்பெற வழியமைத்தார். அறபு இஸ்லாமிய நாகரிகத்துறை தற்காலிக உதவி விரிவுரையாளராகச் சென்ற அவர் 1977ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1ம் திகதி தனது சேவையில் நிரந்தரமானார்.



*1979 ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மீலாத் விழாவில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் உரையாற்றிக் கொண்டிருப்பதையும், யாழ் பல்கலைக்கழக அறபு, இஸ்லாமிய நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி காலிதீன் விழாவுக்கு தலைமை தாங்குவதையும், பேராசிரியர் கைலாசபதி அவர்கள் அருகில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்ட நடவடிக்கைகளில் எந்தப் பலாபலனையும் எதிர்பாராது வாழும் பழக்கம் முஸ்லிம் சமூகத்தில் வேரூன்றிக் காணப்படுகின்றமை மற்றுமொரு அம்சமாகும். அரசாங்க நிர்வாகமும், அதன் கீழ் உள்ள அந்தந்த அரச திணைக்களங்களும் தமது சகல தேவைகளையும் பூர்த்தி செய்யக் கடமைப்பட்டுள்ளது என்று கருதுகின்றனர். எமது ஊர்ப்பகுதி இருளில் மூழ்கிக் கிடக்கிறது.

அதற்கு மின்சாரம் தேவையென முஸ்லிம்கள் கேட்கமாட்டார்கள். அவர்களால் வழங்கப்படும் சேவைகளை மட்டும் போதுமானதாகக் கொண்டு வாழ்கின்ற முறைமையை காலிதீன் எல்லா முஸ்லிம்களைப் போல் யாழ்ப்பாண முஸ்லிம் மக்களிடத்திலும் கண்டார். இவ்வாறான சமூக கட்டமைப்பிலிருந்து முஸ்லிம்கள் விடுபட வேண்டுமென்ற எண்ணத்தில் கிடைத்த வாய்ப்பை அங்கு பல சமூக இயக்கங்களை ஆரம்பிக்கவும், ஆலோசனை கூறவும், அதனுடன் தானும் சேர்ந்து பங்காற்றினார்.இவ்வாறு பல்வேறு முன்னேற்றப்பாதையில் முழு முதன்மையானவராகக் கருதப்படுகின்ற இவர் யாழ்ப் பல்கலைக்கழக மாணவர்களின் நலன்களை மட்டுமல்ல, பொது மக்களின் அபிலாஷைகளையும், அபிவிருத்திக்கான தேவைகளையும், முன்னேடுத்துச் செல்லும் வேட்கையினையுமே இவர் அடிநாதமாகக் கொண்டிருந்தார்.

யாழ்ப்பாண நகர எல்லைக்குள் முஸ்லிம் மக்களின் பல்வேறு குறைகள் குறித்து “யாழ் நகர முஹியுத்தீன் முற்போக்கு இயக்க சமூக நிலைய” நிருவாகிகளுடன் ஒன்றிணைந்து ஆற்றிய பணிகள் பல. அப்போது அவர் பங்கெடுத்த வேலைகளில் யாழ் விஷேட ஆணையாளர் திரு எல்.ஏ. ஜோசப் அவர்களுடன் தொடர்பு கொண்டு நகரில் உள்ள அசுத்தங்களை அகற்றுதல், பாலர் பாடசாலை அமைத்தல், மின்சாரவசதிகள் எற்படுத்தல் ஆகிய இன்னும் பல அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டார். (தினகரன் 18.4.1977)

இவை தவிர ஹிஜ்ரி விழாக்குழுத் தலைவராகவும், யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பொது மன்றங்களிலும், மீலாத் விழா வைபவங்களிலும், பாடசாலை பரிசளிப்பு விழாக்களிலும் அவர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஆற்றிய சொற்பொழிவுகள் வாழ்ந்த, வாழ்கின்ற ஆத்மாக்களின் உள்ளங்களிலே ஓர் உயிராற்றலிலுள்ள ஊற்றுக் கண்ணாக மிளிர்கின்றன. யாழ் முஸ்லிம்களின் ஐக்கியத்தைக கட்டியெழுப்பவதிலும் அயராது உழைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறானது அது ஓடும் வேகத்திற்கேற்பவும், அது பாயும் இடத்தின் தன்மைக்கேற்பவும், அதன் வீச்சுக்கேற்பவும், நீர் எவ்வாறு கலங்கலாகவும், தெளிவாகவும், ஆழ அமைதியுடனும், பேரிரைச்சலுடனும் பாய்ந்து செல்லுகின்றதோ அவ்வாறே காலத்திற்கு ஏற்ப இவரின் சிந்தனைகளும் போக்குகளும் அமைகின்றன.

முஸ்லிம்களாகிய நம்மிடத்தில் எத்துணை வேறுபாடுகள் இருப்பினும் நாட்டின் பொதுவாக வாழ்க்கை மரபுடன் கட்டாயம் ஐக்கியப்படவேண்டுமெனக் கொண்டு 1976ம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றில் முஸ்லிம் மாணவர்களின் வரலாற்றில் இஸ்லாமிய நாகரிகப் பாடத் திட்டத்தில் இலங்கை முஸ்லிம்களின் வரலாறு எனும் ஒரு பகுதி சேர்க்கப்படவேண்டுமென வேண்டிக் கொண்டார்.

அதனைப் போதிப்பதற்குரிய பாடநூல்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் கூட அதற்குரிய பாடத்திட்டத்தினை வழங்கி இம் முயற்சியை மேற்கொண்டார். இவரின் இந்த ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கு யாழ் பல்கலைக்கழகப் கலைப் பீடாதிபதி பேராசிரியர் இந்திரபாலா அதனை வர வேற்று பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொண்டார். அத்துடன் இலங்கை முஸ்லிம்களின் வரலாறு பற்றிய ஆய்வினை பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு ஒன்று திரட்டினார். மாகாண, மாவட்ட, பிரதேசம் என்ற அடிப்படையில் விரிவாகவும் வரலாற்றியல் அணுகுமுறையுடன் எல்லோரும் பயன்பெறுக் கூடியதாக இது மேற்கொள்ளப்பட்டது. இலங்கை முஸ்லிம்களின் வரலாறு தனித்துவமான அம்சங்களை கொண்டுள்ளது என்பதை உணர்ந்து இவர் அடுத்து வரும் பரம்பரையினர்கள் எல்லாவற்றையும் பெற்றுக் கொள்வதற்கான திட்டத்தை வகுத்துச் செயற்படும் திறன் மிகவும் குறிப்பிடத்தக்கது.




*1980ஆம் ஆண்டு யாழ் உஸ்மானியா கல்லூரியில் நடை பெற்ற ஹிஜ்ரி விழாவில் ஹிஜ்ரி விழா குழுத்தலைவராக கடமையாற்றிய சந்தர்ப்பத்தில் காலிதீன் அவர்கள் உரையாற்றுவதை படத்தில் காணலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கிய ஆர்வலர்

உயர்ந்த மனிதன் என்பது அவரது பொதுப்பணி. கல்வி மூலம்தான் பெற்றார் என்றில்லை. அவர் ஒரு மறைமுகமான உயர் குறிக்கோளை தன்னகத்தே நிறுத்தி, உணர்ச்சிகரமான அழகை வெளிப்படுத்தும் ஆற்றல் படைத்த அவர் ஆக்க இலக்கிய அறிவுப் பரம்பரையைச் சேர்ந்த குடும்பத்தில் இயல்பாகவே கவிதை புனைவதிலும் திறன் பெற்றிருந்தார்.

உள்ளத்துள்ளது கவிதை - இன்பம்
உருவெடுப்பது கவிதை.
தெள்ளித் தெளிந்த தமிழில் - உண்மை
தெளிந்துரைப்பது கவிதை.

என்னும் கவிமணியவர்களின் இவ்வரிகளை அழுத்ததும் கொடுத்து பிரித்துக் காட்டி கவிதை பற்றிய கணிப்பினையும், படைப்பாளியின் படைப்புத் திறனையும், கவிதை நெறிமுறைகளையும், அவர் படைத்த கவிதைகளயும் ஒப்பீட்டு ரீதியில் மதிப்பீடு செய்து கவிதைக்குரிய கூறுகளான கற்பனை, உணர்ச்சி, கருத்து, பொருள், நடை, ஓலிநயம் இவையெல்லாம் பற்றி நன்கறிந்து வைத்திருந்தார். வாய்ப்பு நேரிடும் கால் மணி, நாள் என்று பாராது குறிப்பிட்ட நபருடன் பேசிக் கொண்டே இருப்பார். தனியே இருக்கின்றபோதெல்லாம் கவிஞர்களின் தெள்ளு தமிழ்ப் பாடல்கள்தான் அவரது உள்ளத்தை நிரப்பிக் கொண்டு இருக்கும்.

பலாலி ஆசிரியர் கலாசாலையில் பகுதி நேர விரிவுரையாளராகக் கடமையாற்றும் போது அம்மாணவர்களின் முஸ்லிம் மஜ்லிஸினால் வெளியிடப்படும் " யாழ் பிறை" சஞ்சிகையின் வளர்ச்சிக்கும், ஆசிரிய சமுதாய மேம்பாட்டுக்கும் வழிகாட்டியாகவும் பக்கபலமாகவும் இருந்துள்ளார்.

அவற்றுற்கும் மேலாக "இளம் எழுத்தாளர்கள்" என்றால், அருவருப்போடு பார்க்கும் மூத்த எழுத்தாளர்கள் அதிகம்பேர் உள்ளனர். ஆனால் அவர் இலக்கியப் பிரக்ஞையோடு எழுதும் இளம் சிருஷ்டி கார்த்தாக்களை அரவணைத்து ஆக்கமும், ஊக்கமும் அளிப்பது சிறந்த, ஆரோக்கியமான செயலெனக்கருதி அவர்களை வளர்ப்பதற்காய் மிகுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றுறுதியுடன் நல்ல கருமங்கள் கொண்டு செயற்பட்டு வருகின்றார். இது பற்றி ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எம், எச்.எம். அஷ்ரப் அவர்கள் வைபவமொன்றில் குறிப்பிடுகையில்,

"கலாநிதி காலிதீனிடம் இன்னும் ஒருவர் மறைந்து கொண்டு இருக்கிறார். அவர் சுவாரசியமான கதைகளைச் சொல்லி எங்களை மகிழ்விப்பார். தமிழ் இலக்கியத்திலே அவருக்கு இருக்கின்ற பாண்டித்தியம் தமிழ் இலக்கிய வரலாற்றிலே அவருக்கு இருக்கின்ற தெளிவு, சங்க காலத்தில் தோன்றிய அகத்திணையைச் சித்தரிக்கக் கூடிய குறுந்தொகை பாடலிலுள்ள காட்சியை என்னிடம் தெட்டத்தெளிவாக சொல்லிக் காட்டுவார்" என்று கூறி அதன் சம்பவத்தை சுவைபடச் சுட்டிக் காட்டினார்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு பன்மொழி அறிவு சார்புடையவர்கள் கட்டாயம் தேவை அந்த அறிவுப் பரம்பலுக்கான தளத்தையும், கனத்தையும் காலிதீன் கொண்டிருந்தார். இவர் அரபு, பாரசீகம் உஸ்மான்லுஜா, துருக்கி ஆகிய மொழிகளில் மாத்திரமல்ல சொந்தத் தாய் மொழியிலும், கவிதை, எழுத்து, ஆய்வு என்று பல முக்கியத் துறைகளிலும் புலமை பெறுகின்றார்.

ஆய்வுத்துறை என்னும் போது இவர் (Descriptive Criticism) என்று வழங்கப்படும் விளக்கமுறைத் திறனாய்வுப் பண்பினை அடிப்படையாகக் கொண்டுதான் இவர் அவரது நூல்களிலும், வெளிநாட்டு பல்கலைக் கழகங்களிலும், வெளிநாட்டு உள்நாட்டு பத்திரிகை சஞ்சிகைகளிலும் அறிவுபூர்வமான ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.



*1996 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் இஸ்லாமாபாத் ஹொலிடேயின் ஹோட்டலில் நடைப்பெற்ற சர்வதேச பாரசீக கலை கலாசார மகாநாட்டில் கலாநிதி கே.எம்.எச்.காலிதீன் ஆய்வுரை நிகழ்த்துவதை படத்தில் காணலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1922-01-15 - 1996-03-24 வரை வாழ்ந்துவிட்டுச் சென்ற பேராசிரியர் ம.மு.உவைஸ் அவர்கள் இஸ்லாமிய தமிழ் இலக்கியத்திற்கு ஆற்றிய பணிகள் அளப்பரியது. அந்தக் கலாநிலையம் காலிதீன் எழுதிய “இஸ்லாம் முஸ்லிம் சமூகம், முஸ்லிம் உலகம்” என்ற நூலுக்கு அணிந்துரை எழுதியுள்ளார். அதில் அவர் குறிப்பிடும்போது,

கலை யினில் கல்வியில் கட்டுரை வரைவதில்
கலாநிதி காலிதீன் காட்டும் பாங்கினை
அறிந்திட அவாவுறின் ஆய்வின் அவர்தம்
இறைவழி நின்றுமே இயற்றிய இந்நூல்
முஸ்லிம் உலகச் சமூக முறைமையை
இஸ்லாம் இயம்பும் இயல்பினில் உரைக்கவே
மதிப்பிட முனைந்தர் மாநிலம் மதிக்கவே
புதுமையாம் கருத்தினைப் புகுத்தினர் நூலினில்
உலகோர் வைகலும் சுவைக்கவே
இலகுவாய் ஈந்தனர் அவனியோர் இன்புறவே.

இக்கவி வரிகள் இவரது வாழ்க்கை அனுபவங்களையும், வாழ்க்கை உண்மைகளையும், எழுத்தின் தன்மைகளையும்,விளக்குவனவாகவும், விரிந்துறைப்பனவாகவும் உள்ளன.

மேலும் இவர் இஸ்லாமிய கோட்பாட்டு ரீதியில் பல அறிஞர்கள் பற்றிய பல்வேறு அம்சங்களை எடுத்துக் காட்டுகின்றார். இமாம் ஜமாலுத்தீன் றூமி, ஜமாலுத்தீன் ஆப்கானி, முகம்மது அப்துஹு, மவ்லான மௌதூதி, அல்லாமா இக்பால், இமாம் கொமெய்னி, யூசுப் அல்-கர்லாவி, செய்யித் குதுப் அகமத் தீதார், அபுல் ஹஸன்அலி நத்வி போன்ற மாந்தர்களின் அகவாழ்வு புறவாழ்வு பற்றியும், பிறப்பு வாழ்வு பற்றியும் அவர்களின் நியதிகளென அமையும் அனுபவங்கள்,அறம், பொருள், இன்பம் பற்றியும் அவர்களின் இறவாத்தன்மை பெற்ற படைப்புக்கள் பற்றியும் தற்கால சிந்தனைகளுடன் பிற மத அறிஞர்களை மேற்கோள் காட்டி பொருள் விளக்கம் அளித்துள்ளார். இவர் பாக்கிஸ்தான், தாய்லாந்து, ஈரான்,ரஷ்யா, ஆப்கானிஸ்தான், துருக்கி போன்ற பல்கலைக்கழகங்களிலேதான் இவ்வுலக மாந்தர்களுடைய பெருமையை எடுத்துரைத்தார். எனவே, இவரது கல்விச் சேவை பிற நாடுகளிலும் பிரதிபலிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*1996 ஆம் ஆண்டு ஆஸர்பைஜான் நாட்டுக்கு கலாநிதி காலிதீன் அவர்கள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டபோது பெடிகோஜு பல்கலைக்கழக எம்.ஏ.பட்டதாரி மாணவர்களுக்கு விரிவுரையாற்றுவதை படத்தில் காணலாம்.*

படம் (6)

எடுத்துக்காட்டாக இவர் எழுதிய நூல்கள் இவற்றிற்குச் சாட்சி பகர்கின்றன. அவையாவன:

01. இலங்கை முஸ்லிம்களின் வரலாறு. (பகுதி-1)- 1983
02. இலங்கை முஸ்லிம்களின் கல்வி, அரசியல் வரலாற்றில் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் அவர்களின் பங்களிப்பு - 1984
03. சீரதுந் நபியும் முஸ்லிம் உலக ஐக்கியமும். -1987
04. SRI LANKA THE MUSLIM COMMUNITY.- (1981)
05. இஸ்லாம், முஸ்லிம் சமூகம், முஸ்லிம் உலகம் ஒரு நோக்கு (1993)

அச்சிலுள்ள நூல்களாவன:

06. இஸ்லாமிய நாகரிகம். க.பொ.த (உயர் தரம்) பகுதி 01
07. வரலாறும் நாகரிகமும் ஓர் இஸ்லாமிய நோக்கு.
08. உலக நாகரிகங்கள் ஓர் அறிமுகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அவன் வானங்களையும் பூமியையும் படைத்திருப்பதிலும், இரவும் பகலும் மாறி மாறி வருவதிலும் மனிதர்களுக்கு பிரயோசனமான வற்றை (ஏற்றிக்) கொண்டு சமுத்திரத்தில் செல்லும் கப்பலிலும், வானத்தில் இருந்து மழையை இறக்கி, அதைக் கொண்டு (வறண்டு) இறந்த பூமியை அல்லாஹ் உயிர்ப்பித்துச் செழிப்பாக்கி வைப்பதிலும், கால்நடைகள் யாவற்றையும் பூமியில் பரவவிட்டிருப்பதிலும் காற்றைப் (பல கோணங்களில் திருப்பி)த் திருப்பி விடுவதிலும், வானத்திற்கும் பூமிக்குமிடையே அமர்த்தப் பெற்றிருக்கும் மேகத்திலும் மனிதர்களுக்குள்ள (பிரயோசனங்களை ஆராய்ந்து) சிந்திக்கும் மக்களுக்கு (அவனது அருளையும், அன்பையும் அறிவிக்கக் கூடிய) அநேக அத்தாட்சிகள் (நிச்சயமாக) இருக்கின்றன.” என்று திருமறைக் குர்ஆன் கூறுகின்றது. அல் குர்ஆன் (21:164)

காலிதீன் இந்தச் சிந்தனையின் பால் நின்று எமக்கு பல நூல்களைத் தந்துள்ளார். இது போல் பல ஆய்வு நூல்கள் எமக்கு இன்னும் தர வேண்டும். அதேவேளை இஸ்லாமிய மார்க்க அறிவுரைகளை பள்ளிவாசல்களிலும் பல்கலைக்கழகங்களிலும் நிகழ்த்தி வருகின்றார்.

## அறிவாலயம் உலகப் புகழ்பெறுகின்றன.

இவர் யாழ்ப் பல்கலைக்கழகத்திற்கு விரிவுரையாளராக வந்த பின்னர், இவர் வாழ்க்கையில் பல உயர்தரமான திருப்புமுனைகள் நிகழ்ந்தன. பல்கலைக்கழக மாணவர்களுக்கும், அங்குள்ள மக்களுக்கும் பொதுவாக இலங்கை நாட்டுக்குப் பல வழிகளிலும் பெருமைகளைத் தேடித்தந்துள்ளார்.



*1988 ஆம் ஆண்டு துருக்கி அங்காரா சர்வதேச இஸ்லாமிய ஆராய்ச்சி நிறுவன இயக்குனருடன் கலாநிதி காலிதீன் உரையாடிக்கொண்டிருப்பதைக் காணலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1984ம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறையில் எம்.ஏ. பட்டத்தைப் பெற்ற இவர், 1987ல் புலமைப் பரிசில் பெற்று "துருக்கி அங்காராப் பல்கலைக்கழகம்" சென்றார். அங்கே துருக்கி டிப்ளோமாப் பட்டத்தைப்பெற்ற அவர் தொடர்ந்து "இஸ்தான்பூல் பல்கலைக்கழகத்தில்" 1990 ம் ஆண்டு கலாநிதிப் பட்டப் பரீட்சையில் சித்தி பெற்றார்.

இவர் அங்கேயும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கல்விச் சாதனையொன்றை நிலை நாட்டினார். அவர் எழுதிய பரீட்சையில் அந்நாட்டு கல்வி வரலாற்றில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்றதனால், அந்நாட்டு அரசாங்கம் இவரை கௌரவித்து பல பெறுமதிமிக்க பரிசில்களை வழங்கியது. இவை பற்றி அந்நாட்டு தொலைக்காட்சியிலும் "சாமான்" என்னும் தினசரிப் பத்திரிகை போன்றவைகளில் இவரின் கல்வித் திறமைகள் பாராட்டப்பட்டன.

அறிவுத் துறையில் பெரியதோர் இடத்தில் வைத்துக் கணிக்கப்படுகின்ற இவர், துருக்கியில் பிரபல்யம்பெற்ற "சூர்" சஞ்சிகை இஸ்லாமிய பொதுச் சந்தை பற்றிய அபிப்பிராயங்களை வெளியிட்டது. அதிலே துருக்கியில் முக்கியத்துவம் வாய்ந்த மூன்று அறிஞர்களுடன் கலாநிதி காலிதீன் அவர்களின் பேட்டியும் இடம்பெற்றிருந்தது. அதில் துருக்கி அரசாங்கத்தின் தொழில் நிருவனங்களின் தலைவர் பேராசிரியர் அலிசொஸ்கின், பைசல் பினான்ஸ் நிருவனத்தலைவர் பேராசிரியர் சாலிஹ் ஒஸ்ஜான், இஸ்தான்பூல் பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானப் பிரிவுத் தலைவர் பேராசிரியர் இல்தர்தூரான் அகியோருடன் இஸ்தான் பூல் பல்கலைக்கழக சமூக விஞ்ஞானத் துறையில் ஆராய்ச்சி மேற்கொள்ளச் சென்ற சமயம் இவரும் இப்பேட்டி அளித்திருந்தார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் முக்கியமான பணி உயர் நிலை அறிவை மாணவர்களுக்கு புகட்டுவதும் தமது சிறப்புத் துறையில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதும், நாளாந்தம் வளர்ந்து வரும் அறிவுப் பெருக்கத்துடன் தம்மைப் பரிச்சியப்படுத்திக் கொள்வதும், அவற்றைத் தெரிவு செய்து மாணவர்களுக்கும், சமூகத்தில் வாழும் அறிவு ஆர்வலர்களுக்கும் வழங்குவதுமே பல்கலைக்கழக பேரறிஞர்கள் தமது முழுமையான கடமையென ஏற்றுக் கொண்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், காலிதீன் அவர்கள் அதற்கப்பால் தனது சமூகத்தில் பற்றுறுதி கொண்ட முஸ்லிம் உலகம் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள், வழிவகைகள் பற்றியும், இன்றைய முஸ்லிம் உலகின் இன்றியமையாத, தேவை குறித்தும், அதிகம் கவனம் செலுத்தி வந்தார். அதனாலேயே அவர்,சர்வதேச விவகாரங்களிலும் கூட நன்கு பிரபல்யம்பெற்றவராகத் திகழ்கின்றார்.



*குவைத் நாட்டுக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்ட போது இலங்கையர்கள் ஏற்பாடுசெய்திருந்த ஒரு பரிசளிப்பு விழாவில் கலாநிதி காலிதீன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பிப்பதைக் காணலாம்.*

ஒரே நேரத்தில் பல சிறப்புக்கள் பெற்ற இவர், குவைட் நாட்டுப் பல்கலைக்கழகம் சென்று ஆறு மாதங்கள் அறபு மொழித்துறையில் அறபு மொழியைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்களுக்கு அறபு மொழி போதிப்பதில் சிறப்புப் பயிற்சியையும் பெற்று தேர்ச்சியடைந்தவர்களில் ஒருவர்

அவர் அங்கிருக்கும் காலத்தில் அவரது மாட்சிமையும் புலமையும் அந்த மண்ணிலும் மின்னின. தான் ஒரு தனி மனிதன் அல்லது எனக்கு பிறர் தேவையில்லை. அல்லது நான் அல்லது சுயநலத்துக்குரியவன் என்ற மாற்றீட்டு மார்க்கங்களை விட அன்பு பாராட்டுவதன் மூலம்தான் சிறந்து விளங்க முடியும் என்ற இலக்கு அவரிடம் நன்கு காணப்பட்டன. அங்கு அவரை விடப் பிரபலமானவர்கள் இருந்தும் கூட அவரை மட்டும் இனங் கண்டு அங்கே நடைபெறும் வைபவங்களில் ஒரு முக்கிய அதிதியாக கலந்து சிறப்பிக்க அழைப்பு விடுப்பார்கள். எவ்வளவுதான் கடின வேலைகள் இருந்தாலும் அவ்வழைப்பை ஏற்று அந்தந்த வைபவத்திற்கு செல்லும் பழக்கம் அன்று தொட்டு இன்று வரை உயர்ந்து காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*உக்ரையின் ஆர்மேனியர்களால் வெளியேற்றப்பட்ட அகதிகளை கலாநிதி காலிதீன் அவர்கள் சந்தித்து அம்மக்களின் பிரச்சினைகளை கேட்டறிவதைப் படத்தில் காணலாம்.*

## நட்பு ஐக்கியத்திற்கோர் இலக்கணம்

இவர் ஆய்வாளனாகவும். சமூகத்தொண்டனாகவும, அறிஞராகவும், மேலும் அதற்கப்பால் அவர் எல்லை கடந்து மொழி, இனம், பிரதேசம், நிறம் என்று பாராது எல்லோராலும் மதிக்கப்படும் ஒரு சம பண்புள்ள மனிதராக வாழ்ந்து கொண்டு இருக்கின்றார். இவரது நூல்வெளியீட்டு விழாவின் போது பேராதனைப் பல்கலைக்கழக அரசியல், விஞ்ஞானத்துறைப் பேராசிரியர் அம்பலவாணர் சிவராசா பேசுகையில் "நானும் இவரும் அடே! வாடா போடா" என்றுதான் அழைத்துக் கொள்வோம். அவ்வளவுக்கு தனக்கு உரிமை உண்டு "என்று குறிப்பிட்டார்.

இவர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலமெல்லாம் நட்புக் குரிய நெறிமுறையில் கூடுதலாகத் தமிழ்ச் சகோதரர்களுடன் உறவுகளை மிக நெருக்கமாகக் கொண்டிருந்தார். குறிப்பாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்ற கலாநிதி துரைமனோகரன், அதே பீடத்தின் தலைவர் பேராசிரியர் க. அருணாசலம், அக்காலங்களில் கடமையாற்றிய உபவேந்தர், பீடாதிபதி என்று பலரைக் குறிப்பிடலாம்.

அதே போன்று இவர் ஐஸ்வரியம் கொண்டு பழகும் முஸ்லிம் நண்பர்கள் பலர். அதிலும் மிக முக்கியமாக சப்ரகமுவ பல்கலைக்கழக முகாமைத்துவப் பீடாதிபதி எம். வை. எம். சித்தீக், பேராதனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக மெய்யியல் துறை முதுநிலை விரிவுரையாளர் எம்.எஸ்.எம் அனஸ், இன்று விமர்சனத்துறையில் சிறந்து விளங்குகின்ற கலாநிதி எம். ஏ. நு்.மான் அறபு, இஸ்லாமிய நாகரிகத்துறைத் தலைவர் எம்.ஐ.எம். அமீன், கொழும்பு பல்கலைக்கழக இஸ்லாமிய நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் அப்துல் ரஸாக் போன்றவர்களாவர்.

## நல்ல பண்பு

இவரிடம் காணப்படும் மற்றுமொரு விசேட அம்சம் விருந்தோம்பல் பண்பாகும். ஒரு மனிதர் இவரை நாடிச் சென்றால் அந்த மனிதரிடம் முதன் முதலில் சாப்பிட்டீர்களா? என்றுதான் வினவுவார். எனவே, இவர் "உண்டி விருந்தூட்டுவதில் பன்னீர் கொண்டு குளிப்பாட்டுவார்" இக் கூற்றுக்கு தக்க விளக்கம் தேவையில்லை. அதை நாம் நேரடியாகவே காணலாம். யாவற்றிற்கும் மேலாக எவரும் இவரிடம் நெருங்க முடிகிறது. எண்ணங்களை எடுத்துச் சொல்லமுடிகிறது.

## சர்வதேச ரீதியில் கலாநிதி காலிதீன்

இவர் முஸ்லிம் நாடுகளுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ளார். இவர் அப்கானிஸ்தான் அங்குள்ள அகதி மக்களின் பிரச்சினைகளை அறிவதற்கும் ரஷ்யாவிலுள்ள முஸ்லிம் முக்கிய நாடுகளுக்கும் மேலும், குறிப்பாக ஆசியா, ஐரோப்பா, ஈரான் ஆபிரிக்கா, நாடுகளுக்குச் சென்று சர்வதேச இஸ்லாமிய மாநாடுகளில் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தும் தலைமை தாங்கியும் இலங்கைக்குப் புகழீட்டித் தந்துள்ளார். எனவே இவர் சமூகத்தின் நல்வாழ்வுக்காக சுதேச ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் சிறந்து விளங்குகின்றார்.



*ஈரான் நாட்டு தலைநகர் தெஹ்ரானில் வைத்து கலாநிதி காலிதீன் பத்திரிகையாளர் ஒருவருக்கு பேட்டி அளிப்பதை படத்தில் காணலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*1983 ஆம் ஆண்டு கலாநிதி காலிதீன் அவர்கள் கராச்சி பல்கலைக்கழகம் சென்ற போது கராச்சி பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் எஸ். நாஸிர் அஹமட் அவர்களுடன் உரையாடிக்கொண்டிருப்பதை படத்தில் காணலாம்.*



*1988ம் ஆண்டு காலிதீன் அவர்கள் கலாநிதிப் பட்டப்படிப்புக்குச் சென்ற சமயம் இலங்கை மாணவர்களின் நிலை குறித்து துருக்கி நாட்டின் வெளிவிவகார அமைச்சின் இயக்குனருடன் உரையாடிக் கொண்டிருப்பதை படத்தில் காணலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரிவுரையாளர் மௌலவி

## எம்.எஸ்.எம். ஜலால்தீன்

இவர் தமது கல்வித்துறையிலே எழுந்திரு, விழித்திரு,கருதிய கருமம் கைகூடும் வரை உழைத்திடு என்ற கருத்திற்கிணங்க இவர் மேலதிகமாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப் பின் படிப்பு மாணவர்களுக்கும், ஏனைய மாணவர்களுக்கும் பகுதி நேர விரிவுரையாளராகக் கடமையாற்றினார். இவரிடம் கல்வி பயின்ற மாணவர் அனைவரும் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குகின்றார்கள். அவற்றில் குறிப்பாக மாணவப் பருவம் தொட்டு இன்று வரை ஆசானோடு கடமையாற்றுவதற்குரிய மதிப்பினைப் பெற்று விளங்கும் தென்கிழக்குப் பல்கலைக்கழக இணைப்பாளரும் விரிவுரையாளருமான எம்.எஸ்.எம்.ஜலால்தீன் உட்பட இன்னும் ஏராளமானோர் உயர்துறைகளில் சிறந்து விளங்குகின்றார்கள்.

## அகதிகளின் தோழனும்

## புதிய பல்கலைக்கழகமும்

யாழ்ப்பாணத்திற்கு கல்விப் பணிக்காக சென்ற அவர் அந்த மண்ணையும், அந்த மக்களையும் பற்றி மிகவும் பெருமைப்பட பேசிக் கொள்வார். சுவாமி விபுலானந்தர், புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை போன்ற சான்றோர்கள் தங்கள் சொந்த நாடாகிய மட்டக்களப்பில் பிறந்திருந்தாலும் அவர்கள் யாழ்ப்பாணத்தை எவ்வளவு தூரம் நேசித்தினரோ அதே போன்று காலித்தீன் அவர்களும் நேசித்தார். அத்தோடு யாழ்ப்பாண தமிழ், முஸ்லிம் மக்களின் பேரன்பும், பேரபிமானமும் உடையவரானார். இந்த நிலை தொடர்ந்து அங்கு நிலைத்திருக்க இடம்கொடுக்க வில்லை. சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக பிறந்து வளர்ந்து விளையாடி, குதூகலித்துத் திரிந்த அந்த யாழ் முஸ்லிம் மக்களுடனும் அங்கு கல்வி பயின்ற முஸ்லிம் வளாக மாணவர்களுடனும், கல்வித்துறை சார்ந்த ஊழியர்களுடனும், ஏனை சக விரிவுரையாளர்களுடனும் இவரும் வெளியேறினார்.

இந்த நிலைக்குப் பின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் இணைப்பதிகாரியாக பொறுப்பினை ஏற்றார். அவர் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவும் தன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியப்பில் ஆழ்த்துகிறது. அதுவும் ஒரு வித்தியாசமான மனிதர் அகதி மாணவர்களின் விடயத்தில் இத்தனை ஒட்டுறவா? மூக்கில் விரல் வைத்து ஆச்சரியப்படத் தோன்றுகிறது. "வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்றெல்லாம் குறியெதிர்ப்பை நீரது உடைத்து" என்ற திருக்குறளின் அழகிய லடசணம் அவரின் உயர்ந்த இலட்சியமாகும்.

யாழ்ப்பாணம், வந்தாரமுல்லை ஆகிய இரு பல்கலைக்கழகங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்து முஸ்லிம் தமிழ் மாணவர்களின் நிலை குறித்து அவர் ஆற்றிய பணிகளைப் பற்றி வெறும் காகிதத்தில் எழுவதில் அர்த்தமில்லை. அது கல் மேல் எழுதினாக் கூட மிகையாகாது.

இந்தக் கால கட்டத்திலேதான் முஸ்லிம்களுக்கும் தனிப் பல்கலைக்கழகம் அம்பாறையை மையமாகக் கொண்டு ஏன் ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்கமுடியாது என்றும், எமது நாட்டைப் பொறுத்தவரையில் .இனப்பிரச்சினை நீறுபூத்த நெருப்பாக இருக்கின்றது. தற்போதைக்கு முஸ்லிம்களுக்கான ஒரு பல்கலைக்கழகத்தை அமைப்பதே இன்றைய சூழ் நிலையில் சாத்தியமானது. அதற்கான முயற்சிகளையும், திட்டங்களையும் வகுக்க வேண்டும். அதனையே முஸ்லிம் சமுதாயம் எதிர்பார்த்திருக்கிறது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் அதியுயர் பீட உறுப்பினர்களில் ஒருவராக இருந்து அக்கூட்டங்களிலும், பத்திரிகைகளிலும் தனது கோரிக்கையை நன்கு தெளிவு படுத்தி வந்திருக்கின்றார்.



*1993 ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நிலைய மண்டபத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழாவின் போது மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் அலுவிகார, யாழ்பல்கலைக்கழக உபவேந்தர் பொன் சுந்தரம் பிள்ளை,இணைப்பதிகாரி காலிதீன் அவர்களும் காணப்படுகின்றார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையில் ஐ.தே.க. அரசாங்கம் புதிய கல்வித் திட்டத்தில் கீழ் இணைந்த பல்கலைக்கழகங்களை உருவாக்கியது. 1992 ல் இணைந்த பல்கலைக்கழகம் சம்மாந்துறையில் உருவாக வேண்டும் என்ற அடிப்படையில் அன்று உயர் கல்வி அமைச்சராக இருந்த ஏ.சி.எஸ் ஹமீத் அவர்களுடன் எடுத்துக் கூறி முன்னாள் வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஏ.ஆர். மன்சூரின் ஆதரவுடன் அதை நிறைவேற்றினார்.

அதன் முதல் பணிப்பாளராக எம்.வை.எம். சித்தீக் நியமனம் செய்யப்பட்டார். இப் பல்கலைக்கழகத் திறப்பு விழாவில் காலிதீன் "இது ஒரு தேசிய பல்கலைக்கழகமாக மாறும்" என்ற தீர்க்கதரிசனமான கருத்தைக் கூறினார். அது இப்பொழுது தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடமாக மாறி இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

காலிதீனின் பங்களிப்பு என்பது வரலாற்றில் இதுவும் ஒரு பிரதிபலிப்பு. அவரது காலச் சூழலிலே அசுர சாதனை ஒன்றை எவ்வித சிலுசிலுப்பும் இல்லாமல் அடக்கமாக செய்து விட்டு அமைதியாக இருக்கின்றார். இவரது சிந்தனை யாதார்த்தமானது. அதுவே அரசியல் பிரமுகர்களின் ஆழமான அன்பினைப் பெறமுடிந்தது. அதனூடாகவே ஒட்டு மொத்தமான சமூக சேவைகளிலிருந்து முழு இலங்கையருமே பயன்பெறக் கூடியதாக உள்ளது.

ஒரு சாதனையை நிலை நாட்ட அவர் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் ஏராளம். அதனை தனது அறிவைப் பயன்படுத்தி சாதூரியமான முறையில் வெற்றிகொள்வது மற்றுமொரு சாதனையே! இலங்கையில் அரபுக் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான ஓர் ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டினார். மேலும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவில் கடமையாற்றும் காலத்தில் பேராதனைப் பலகலைக்கழக உபவேந்தர்களுடன் நெருங்கிய தொடர்பினை வைத்துக் கொண்டு பெருந்தொகையான நூல்களை நூலகத்திற்கு வழங்கினார் என்பது அவரது தனிப்பட்ட சேவையாகும்.

இந்தச் சந்தர்ப்பத்திலேதான் வடகிழக்கு மாகாண முஸ்லிம் அகதி மாணவர்களின் பிரச்சினை தலைதூக்கியது. இம்மாணவர்களின் பூர்வீகப் பிரச்சினைகளுக்கு பல்கலைக்கழக உயர் அதிகாரிகளுடன் தொடர்கொண்டு மிகவும் தூரதிருஷ்டியுடனும், பொறுப்புடனும் தமது சொந்தப் பிள்ளைகளின் பிரச்சினைகளாகக் கருதி செயற்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலே அவரது சொந்தப் பணத்தைச் செலவு செய்து முழுநேர ஊழியனாகச் செயல்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இவர் கொழும்பில் இருந்த வண்ணம் இப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்களின் இணைப்பாளராகவும் கடமையேற்று நிலமைகளை அவதானித்து வந்தார்.



*இலங்கையில் அறபுப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான ஓர் ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் ஐ.தே.க. உயர் கல்வி அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீட் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி கலாநிதி காலிதீன் முன்னாள் சம்மாந்துறை இணைந்த பல்கலைக்கழக பணிப்பாளர் எம்.வை.எம். சித்தீக் முன்னாள் முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் ஐ.எம். குத்தூஸ் ஆகியோர் காணப்படுகின்றனர்.*

அப்பொழுது 596 மாணவர்கள் இடம்பெயர்ந்தவர்களாக கணிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் தொன்நூறு வீதத்திற்கு மேற்பட்டவர்கள் முஸ்லிம் மாணவர்களாவர். இம்மாணவர்களின் நிலையிட்டு மிகவும் மனக் கவலை கொண்டவராக விளங்கினார்.

தமது பல்கலைக்கழகத்தில் வழங்கப்பட்ட பல உரிமைகள் புதிதாதகச் சேர்ந்த பல்கலைக்கழகங்களில் கிடைக்க வில்லை. எனினும் சூழ் நிலையைக் கவனத்தில் கொண்டு இவர்களுடைய விடயத்தில் கண்ணும் கருத்துமாக செயல்பட்டார். இது பற்றி முன்னாள் அமைச்சர் ஏ.சீ.எஸ். ஹமீத் அவர்களுடன் பல தடவைகள் உரையாடி முக்கிய பங்களிப்புக்களை இவர் செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இடத்தில் அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் முஸ்லிம்களின் கல்வி மறுமலர்ச்சிக்கு வரலாறு கூறும் புதிய சகாப்தமொன்றைத் தோற்றுவித்தார்கள். முஸ்லிம் மாணவ சமூகம் இனி மேலும் கஷ்டப்படக் கூடாதென்ற உண்மையை உணர்ந்து பிரசவவேதனையுடன் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தைப் பெற்றுக் கொடுத்தார்கள் என்பது மட்டுமல்ல அதைக் கட்டியெழுப்புவதற்காக தமது அமைச்சிலிருந்தும் கூடுதலான பங்களிப்பை நல்கியுள்ளார் எனும் போது பிரமிட்டுக்களில் பதியப்பட வேண்டிய ஓர் அரிய சாதனையாகும்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் எப்பொழுதும் சமூகத்திற்கு என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி தீர்க்கமான ஆர்வத்துடன் இருப்பார்கள். நல்ல திட்டங்கள் மூலம் பெரிய பெரிய சாதனைகளை நிலை நாட்ட வேண்டுமென்று கனவு காண்பார்கள். பல விதங்களில் அவர்களது உள்ளம் வேறுபட்டு இருந்தாலும் தனது சமூகத்தின் தேவையையும், அவசியத்தையும் உணர்ந்து செயற்படுவார்கள். அதேவேளை முஸ்லிம் அறிஞர்களையும் சிந்தனையாளர்களையும், நுண்ணறிவு படைத்தவர்களையும், படைப்பாளிகளையும் பக்கத்தில் வைத்துக் கொண்டு முஸ்லிம் சமூகத்தின் அடிப்படைப் பிரசசினை பற்றி அலசி ஆராய்ந்து காரியங்களைச் சாதிக்கும் திறன் ஒரு தனித்துவமிக்கது. அந்த அறிஞர்களின் வரிசையில் காலிதீன் அதிமுக்கிய இடத்தினைப் பெறுகின்றார்கள்.

இதனிடையே கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான முஸ்லிம் மாணவர்கள் கிழக்கில் எழுந்த பயங்கரவாத நிலையைக் கவனத்தில் கொண்டு அங்கு செல்ல விரும்ப வில்லை. இம்மனிதாபிமான பிரச்சினையினை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் த லை வ ரு ம் அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் கவனத்தில் கொண்டு 1995 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23ம் திகதி புதிய தென்கிழக்கு பலகலைக்கழகம் அம்மாணவர்களுக்காக உருவாக்கப்பட்டது.

கலாநிதி காலிதீன் அவர்கள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் பீடயுயர் குழு உறுப்பினர்களில் ஒருவர். அமைச்சர் அவர்களுக்கு தேவையான நேரத்தில் சிறந்த ஆலோசனைகளையும், உயர்ந்த கருத்துக்களையும் வழங்கி இப்பல்கலைக்கழகம் உருவாவதற்கு முன்னின்று உழைத்துள்ளார் என்பது யாரும் மறுப்பதற்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*1997ம் ஆண்டு தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடத்திய அரும்பெரும் நுண்பொருள் காட்சிச்சாலையில் வைக்கப்பட்ட நூல்கள் பற்றிய விளக்கங்களை துறைமுக அபிவித்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களுக்கு தென்கிழக்குப் பல்கலைக்கழகப் பீடாதிபதி காலிதீன் அவர்கள் விளக்குவதையும் மூத்த துணைத் தலைவர் மருதூர்க் கனி அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.*

அத்தோடு, இப் பல்கலைக்கழகத்திலேதான் இப்பொழுது கலை. கலாசாரப் பீடாதிபதியாகவும் வர்த்தக, முகாமைத்துவத்துறை பதில் பீடாதிபதியாகவும் பெரிய பொறுப்புக்களை ஏற்று பல்கலைக்கழக உபவேந்தர் எம்.எல்.ஏ.காதர் அவர்களுடன் பல்கலைக்கழக வளர்ச்சிக்காகவும் மாணவர்களின் முன்னேற்றத்திற்காகவும் அயராது பாடுபட்டு உழைக்கின்றார்.

உபவேந்தர் அவர்கள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு வெளியே செல்லும் சில சமயங்களில் தன்னந்தனியாக நின்று மாணவர்களின் பிரச்சினைகளை கருசனையோடு அணுகி மனிதபிமான அடிப்படையில் தீர்த்து வைப்பார். இவர் பொது வாழ்விலும் சரி, தனிப்பட்ட வாழ்விலும் சரி ஒரு நேர்மையான மனிதராக சேவையாற்றுகின்றார். அத்துடன் இன்றைய பல்கலைக்கழக மாணவர்கள் நாளைய சமூகத்திற்கு உதாரண புருஷர்களாக- எடுத்தக்காட்டாக- அப்பழுக்கற்றவர்களாக இருக்கவேண்டும் என்பதற்காக பல்கலைக்கழகத்தில் கலை, கலாசாரப் பண்பாட்டியல் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நிகழ்ச்சிகளில் ஒன்றாக பல்கலைக்கழக கலாசாரத்துறையினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற பேராசிரியர் இமாம் ஞாபகார்த்த நினைவுதினப் பேருரையில் அவர் ஆற்றிய உரை சிறப்பிடம் பெறுகின்றது. இந்நினைவுப் பேருரை அறபு மொழிப் பிரிவு இணைப்பாளர் எம்.எம்.எம். றபிக் தலைமையில் நடைபெற்றது. தமிழ் மொழிப் பிரிவின் இணைப்பாளர் றமீஸ் அப்துல்லாஹ் நன்றியுரை நிகழ்த்தினார்.

இலங்கைக்கும் அறபு நாடுகளுக்கும் இடையில் கி.பி.2ம் நூற்றாண்டில் இருந்தே உறவுகள் வலுவுடன் இருந்தமையை கீழைத்தேய ஆராய்ச்சியாளரான பேராசிரியர் மார்க்கோலியத் சிறந்த ஆதாரங்களுடன் விளக்கியுள்ளார். பேராசிரியர் இமாம் அவர்களும் அறபு நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையே இருந்த உறவுகளை ஆராய்ந்த பேரறிஞர் ஆவார். அவரது ஆழ்ந்த வரலாற்று ஞானம் தர்க்க ரீதியானது.

1942 ம் ஆண்டில் இலங்கையில் பல்கலைக் கல்லூரியில் அறபு மொழி ஆரம்பிக்கப்பட்டபோது அறபு மொழிவளர்ச்சிக்கு பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் இமாம் அவர்கள் 1944ம் ஆண்டிலிருந்து பங்களிப்பை மேற் கொண்டார். அறபு நாடுகளுக்கும் இலங்கைக்குமிடையே இந்த உறவுகள் கி. பி. 8ம் நூற்றாண்டில் இருந்து ஒரு புதிய பரிணாமத்தைப் பெற ஆரம்பித்தது. அவ்வுறவுகள் இஸ்லாமிய மறுமலர்ச்சியுடன் இலங்கை மன்னர்களுக்கும், அறபு வணிகர்களுக்கும் இதை சமய ரீதியாகவும் வர்த்தக, அரசியல் ரீதியாகவும் வலுபெற ஆரம்பித்தது. கடந்த 12 நூற்றாண்டுகளாக இவ்வுறவுகள் மிக நெருக்கமானதாகவும் சிநேகபூர்வமானதாகவும் இடம்பெற்றுவந்திருப்பதை வரலாறு தெளிவுபடுத்துகிறது. ஐரோப்பியரின் வருகைக்கு முன்னர் இலங்கையில் வெளிநாட்டுத்தொடர்புகளை முன்னெடுத்துச் சென்றவர்கள் அறபு முஸ்லிம்களாவர்.

அறபு முஸ்லிம்கள் இலங்கையை ஆக்கிரமிக்கவோ அல்ல அறேபிய தீபகற்பத்தில் உமையாக்கள், அப்பாஸியர்கள் உதுமானியர்கள் ஆகிய பேரரசுகள் ஆட்சியில் இருந்த போதும் கூட இலங்கையோடு அறபு முஸ்லிம்கள் வைத்திருந்த நல்லுறவுகள் இலங்கையின் வளர்ச்சியைப் பிரதான நோக்காக கொண்டே அமைந்திருந்தன. இந்தியாவில் கிளுஜிகள், லோஜிகள், முகலாயர்கள் ஆகிய பேரரசுகள் ஆட்சிகள் செய்த காலங்களிலும் கூட இலங்கையோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் கொண்டிருந்த தொடர்புகள் நல்லிணக்கமாகவே இருந்துள்ளது. பலம் பெற்றிருந்த முஸ்லிம் சாம்ராஜியங்கள் எந்த சந்தர்ப்பத்திலும் இலங்கையைத் தங்களது ஆட்சியின் கீழ் கொண்டு வர முனையவில்லை. அதற்கு அடிப்படைக் காரணம் முஸ்லிம்களுக்கும் இலங்கை மன்னர்களுக்கும் இடையே இருந்த நல்லுறவுகளாகும்.

இலங்கையில் அறபு மொழி இப்பொழுது நிச்சயமற்ற ஒரு பிரிவாக ஆக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்களில் இம் மொழி போதிக்கப்பட்டாலும் பாடசாலைகளில் இதற்குரிய இடம் அளிக்கப்படுவதில்லை. இலங்கையின் வெளிநாட்டுச் செலவாணியின் பெரும் பகுதியை மத்திய கிழக்கில் நாட்டில் தொழில் புரியும் இலங்கையர்கள் சம்பாதிக்கின்றார்கள். அவர்களுக்கு அம்மொழியின் தேவை அவசியமாகின்றது.

இலங்கை அரசாங்கம் அறபு மொழிக்குரிய அந்தஸ்தை பாடசாலை மட்டத்திலும் உயர் கல்வி நிறுவனங்களிலும் மேம்படுத்த முன்னின்று பணியாற்ற வேண்டும். கடந்த பதிநான்கு நூற்றாண்டுகளாக தொடர்ந்து வரும் இலங்கைக்கும் அறபு நாடுகளுக்குமிடையே உள்ள நல்லுறவுகள் மேலும் இதன் மூலம் வலுப் பெற வாய்ப்புகள் உருவாகும். பேராசிரியர் இமாம் இவ்வுறவுகளின் அவசியத்தை வலியுறுத்திய ஒரு அறிஞராவார்.



*1994ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்திற்கு பெருந்தொகையான நூல்களை கையளிக்கும் வைபவத்தில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் குணதாச அவர்களிடம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி காலிதீன் கையளிப்பதையும் நூலகர், நிதியாளர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமன்றி பாரசீக மொழியில் பாண்டியத்தியம் பெற்றிருந்த பேராசிரியர் இமாம் பாரசிகத்திற்கும் இலங்கைக்குமிடையே இருந்த நல்லுறவுகளை அவர் தெளிவு படுத்தியுள்ளார் எனவும் தமது உரையில் குறிப்பிட்டார். இன்றைய கல்விப் பணியின் உன்னத இஸ்தானத்தை உணர்ந்து தனது ஆசானுடைய எண்ணக்கருக்களை முன்வைத்தார்.



*பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்திற்கு பெருந்தொகையான நூல்களை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி கலாநிதி காலிதீன் பல்கலைக்கழக உபவேந்தர் லக்ஷ்மன் ஜயதிலக்க அவர்களிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.*

## தென் கிழக்கு ஆய்வமையம்

குறிப்பிட்ட காலத்திற்குள் பிரபலமாகி தீவிரமான உத்வேகத்துடன் தென் கிழக்குப் பிராந்தியத்தில் கலை, இலக்கிம், அரசியல். பொருளாதாரம் பற்றிய துறைகளிலும், சமூக நடவடிக்கைகளிலும் இலங்கை தென் கிழக்கு ஆய்வமையம் மிக முக்கிய பங்காற்றி வருகின்றது. இது இப் பிரதேச பாரம்பரியம் பற்றிய சமூதாயப் பிரதிபலிப்பினை எடுத்துக் காட்டும் முகமாக ஆய்வுக் கருத்தரங்கு, இலக்கிய கௌரவிப்பு, நூல் வெளியீடு, என்று ஆக்கஇலக்கியம் . கல்வி போன்ற வற்றை ஊக்கிவிக்கும் நோக்கத்தை மையமாகக் கொண்டு செயற்படுகின்ற ஓர் அமைப்பாகும்.

இவ் வமையம் உயிர் ஆரோக்கியமான சமூக நடவடிக்கைகள் மூலம் இப் பிராந்தியத்தில் புதியதோர் திருப்பமுனையை தோற்றுவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இதன் காப்பாளராக வழிநடத்துகின்றவர்களில் தெனகிழக்கு பல்கலைக்கழக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபவேந்தர் எம்.எல்.ஏ. காதர் அவர்களுடன் காலிதீன் அவர்களும் முக்கிய ஒருவராக இடம் பெறுகின்றார்.

இந்த அமையம் இலங்கை பூராவும் அதன் சேவையை முன்னெடுத்துச் செல்கின்றது. அது தற்சமயம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உள்ள முதுநிலை விரிவுரையாளர்களின் மத்தியில் உலாவருகின்றன. "அல்லாமா இக்பால் தேசிய ஆராய்ச்சி மாநாட்டை" நடத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை மேற் கொண்டு ஆரம்ப நிகழ்ச்சிகளாக "அல்லாமா இக்பால் தேசிய மாநாட்டு அறிமுக விழாவும் விசேட கவியரங்கும்" கண்டி ஒறாபி பாஷா நிலைய மண்டபத்தில் அல்லாமா இக்பால் தேசிய மாநாட்டு மதியுரைக் குழுத் தலைவர் பேராதனைப் பல்கலைக்கழக மெய்யியல் துறை முதுநிலை விரிவுரையாளர் எம்.எஸ்.எம்.அனஸ் தலைமையில் நடத்தப்பட்டன.

அத்தோடு கலாநிதி காலிதீன் அவர்கள் அமையத்தின் போஷகர் என்ற ரீதியிலும் இம் மாநாட்டு மதியுரைக்குழு உறுப்பினர் என்ற ரீதியிலும் மகாகவி அல்லாமா இக்பால் பற்றிய நிகழ்ச்சி ஒன்றை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஏற்பாடு செய்து நோக்கத்தை பிரதிபலிக்கச் செய்தார். இந்தச் செயல் மூலம் நல்ல முயற்சிக்கு அவர் அளிக்கும் ஆதரவு தெளிந்த நீரோடையைப் போல் செல்கின்றது.

## கொழும்பு பல்கலைக்கழகத்தில் அறபு, இஸ்லாமிய நாகரிகப் பாடத்துறை

இவரது பணிகளில் குறிப்பிட்டுக் கூறக் கூடியதொன்றாக கொழும்பு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்படும் கலைப்பீட மாணவர்கள் அனைவரும் அவர்கள் விருப்பத்திற்குரிய பாடங்களை தெரிவு செய்யக் கூடிய வாய்ப்பு வசதிகள் பெற்றிருக்க வில்லை. அதிலும் குறிப்பாக அறபு இஸ்லாமிய நாகரிகத்துறை ஒன்று இருக்க வில்லை. ஒரு நாட்டின் முன்னேற்றம் அதன் மக்கள்பெறும் கல்வி அறிவு அபிவிருத்தியைப் பொறுத்தது என்று நன்கு தெட்டத்தெளிவாக அறிந்திருந்த பெரியார்கள் கூட இம்மாணவர்களின் பிரச்சினையை கண் கொண்டு எவருமே பார்க்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம் கலாநிதி காலிதீன் க.பொ.த (உ.த) பாடத்தில் அறபு , இஸ்லாமிய நாகரிகம் போன்ற பாடத்தில் சித்தியடைந்து கொழும்பு பல்கலைக்கழகம் தெரிவாகும் மாணவர்களின் அவல நிலைமையை அவதானித்து தமது சமதாய வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக இது அமையுமென அவர் உணர்ந்தார் . அதன்படி இன்றைய அமைச்சராகக் கடமையாற்றுகின்ற ஜீ.எல். பீரிஸ் அவர்கள் கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தராகக் கடமையாற்றுகின்ற காலகட்டத்தில் மேற்படி இவர் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு அறபு இஸ்லாமிய நாகரிகத்துறை பாடம் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டதற்கிணங்க 1992 மே மாதம் 10ம் திகதி பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் அவர்களிடம் கையொப்பம் இடப்பட்ட கடிதம் இவரது வேண்டுகோளை அங்கீகரித்து எழுதப்பட்டிருந்தது. எனவே, இது 1995ம் அண்டு ஆரம்பிக்கப்பட்டு அறபு இஸ்லாமிய நாகரிக சிரேஷ்ட விரிவுரையாளராக அப்துல் றஸாக் எம்.ஏ கடமையாற்றுகின்றார். இதற்கு மேல் இவரின் உழைப்பை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றாக அறிமுகப்படுத்தத் தேவையில்லை.

கொழும்பு பல்கலைக்கழகம்
UNIVERSITY OF COLOMBO

Our Ref. No. AF/2
Your Ref. No.:

Colombo 3.

[illegible] May, 1992.

Mr. K.M.H. Khalideen,
Co-ordinator, [illegible] Secretariat,
No. 20, Ward Place,
Colombo 07.

Dear Dr. Khalideen,

<u>Introduction of Arabic and Islamic Civilization in the University of Colombo.</u>

This has reference to your letter dated 27th April, 92.

I would like to inform you that having considered your letter of 9th March, 1992 on the above subject at the 53rd meeting held on 6th April, 1992, the Faculty Board agreed to commence Arabic and Islamic Civilization next academic year if an increase in the cadre provision is made.

Yours sincerely,

(Prof. G.L. Peiris)
Vice-Chancellor.

SR/a

| | GENERAL: | Vice Chancellor: | Registrar: | Bursar: |
| --- | --- | --- | --- | --- |
| Phone Nos. | 581835 | 585010 | 581618 | 586652 |
| | 586485 | | | |
| | 585509 | TELEX: 21814 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம்களின் விடுதலைத் தலைவர்

இவரது வரலாற்றுப் பின்னணியில் பல்வேறு அம்சங்களில் தோன்றிய ஆத்மார்த்தமான ஆக்கப்பணிகள் கருவும், உருவும் கொண்டு மொத்த முழுமையான உண்மைகளுடன் பயனும், சுவையும் அளிப்பனவாய் பல வண்ண நயங்களுடன் ஊற்றெடுக்கப்படுகின்றன.

யாதார்த்தபூர்வமாகவே இது மின்னலிடப் போகின்றது. உய்த்துணரும் யாவரும் நிச்சயமாக கலாநிதி காலிதீன் வாழ்க்கை முறையை (Evaluative Criticism) மதிப்பீட்டு ரீதியில் ஆய்வு செய்யத்தான் போகின்றார்கள் என்பது உண்மையாகும். ஆகவே மெய்ப் பொருள் கூறும் இவர் திறனை கண்டறிந்து தென்கிழக்குப் பல்கலைக்கழக இணைப்பதிகாரியும், விரிவுரையாளருமான மௌலவி எம்.எஸ்.எம். ஜலால்தீன் இவர் எழுதிய " இஸ்லாமும் முஸ்லிம் சமூகம் முஸ்லிம் உலகம்" என்னும் நூல் வெளியீட்டு விழாவில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"ஈழத்து முஸ்லிம்களின் 19ம் நூற்றாண்டின் கடைசியும், 20 ம் நூற்றாண்டின் ஆரம்பத்தினுடைய முடிசூடா மன்னர்களாக விளங்கியவர்களுக்கு உறுதுணையாக இருந்தவர்கள் ஐ.சி.எம். அப்துல் அஸீஸ், வாப்பிச்சி மரைக்கார், மாக்கான் மாக்கார் போன்ற பெரும் தனவந்தர்களுடன் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் முதலாவது மாகானாக அறிஞர் சித்திலெப்பை விளங்குகின்றார். அவர் தமது காலத்தில் பெரும் பகுதியை கல்வி, சமயம் , சமூக சேவைகளிற் செலவிட்டார். அதைத் தொடர்ந்து கலாநிதி ரி.பி. ஜாயா, ஏ.எம்.ஏ. அஸீஸ், சேர் பொன்னம்பலம் இராமநாதன் இவர் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர் என்றாலும் முஸ்லிம்களுக்காக பணியாற்றியுள்ளர். கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் என்று அடுத்தடுத்து வந்த இப்பெரியார்கள் முஸ்லிம்களுக்காக மிக முக்கிய பங்களிப்பை செய்துள்ளார்கள். குறிப்பாக ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்கள் வாழ்ந்த காலம் முஸ்லிம் அரசியல் ,கல்வி வரலாற்றில் மிக உன்னதமாக காலகட்டமாக இருக்கின்றது.

அதே காலத்தைக் கொண்டு சென்றவராக காலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் அவர்களைக் கணிக்கின்றேன். பதியுத்தீன் மஹ்மூத் இந்தியாவில் கல்வித் துறையில் எம்.ஏ பட்டம் பெற்றாலும் அதே துறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சராகப் பணியாற்றி வந்திருக்கின்றார். நாம் இந்த 21ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். இப் பெரியார்கள் இலங்கை முஸ்லிம்களுக்கு விடுதலையையும் இந்தக் கல்விப் பரம்பரையையும் தோற்றுவித்தனர்.

இந்தப் பரம்பரையில் ஒருவராக நான் கலாநிதி காலிதீனைக் காணுகின்றேன். கலாநிதி காலிதீன் அவர்கள் பங்கேற்ற மாநாடுகள், அவர் பங்குகொண்ட சங்கங்கள், அவர் கடமையாற்றிய பல்கலைக்கழகங்கள் காரியாலயங்கள், கலாநிதி காலிதீன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை நாங்கள் படித்துப் பார்க்கின்றபோது இந்த 20ம் நூற்றாண்டின் கல்விப் பரம்பரையில் தோன்றியவர்களுள் ஒருவராக கல்விப் பரம்பரைக்கு உணர்வு ஊட்டிக் கொண்டு இருக்கின்றார் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

இவர் உலக அரங்கில் சாதித்த சாதனைகள் பற்றியும், வாழ்க்கை அறநெறிகள் பற்றியும், தான் இவரின் வாரிசு என்பதை ஏற்று மிகவும் தெட்டத்தெளிவாக அவர் எடுத்துரைத்தார். எனவே மேற்குறிப்பிட்ட கருத்து பெறுதற்கரிய பேறாக மிக ஆழமாகவும், நிதானமாகவும் இவரைப் பற்றி நன்கு உணர்த்துகின்றன.

இறுதியாக காலிதீன் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் வந்த பின்னர் அங்கேயே வதியிடத்தைப் பெற்று ஒரு நிரந்தரமான பிரஜையாகி விட்டார். இதில் முக்கியமானது. "இஸ்லாமிய நிலையம்" என்னும் ஒன்றை ஸ்தாபித்ததாகும். இது அவரது இல்லத்தின் ஒரு பகுதியிலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை மக்களின் தேவையைக் கருத்திற் கொண்டு இஸ்லாமிய கலை, கலாசாரம், பண்பாட்டியல் அம்சங்களைச் சித்தரிக்கக் கூடிய நோக்குடன் இந்நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. தற்பொழுது இதில் சிறு கூட்டங்கள், சிறு விழாக்கள் நடைபெறுகின்றன. காலிதீன் அவர்கள் இதனைப் பெருந்திட்டத்தின்படி ஆரம்பித்திருப்பார்கள். இதனுடைய கனதியான சேவையை பின்வரும் காலங்களில் எதிர்பார்க்கலாம்.

இந்த "இஸ்லாமிய நிலையம்" பற்றி அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரியின் விரிவுரையாளர் மௌலவி ஏ.எல்.எம். றஹீம் எம்.ஏ. மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நவீன காலச் சவால்களுக்கும், பிரச்சினைகளுக்கும் தீர்வினை வழங்கும் ஒரு நிலையமாக புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இஸ்லாமிய நிலையம் மிளிர வேண்டும். உலமாக்களின் சின்னமாக இது விளங்க வேண்டும். இதனை அமைத்திட்ட பீடாதிபதியை வாழ்த்த வேண்டும்.

இவ்வாறான நிலையம் பற்றி நாம் பல காலம் சிந்தித்த போதும் அதனைச் செயலுருப்படுத்தியமைக்காக தென்கிழக்குப் பீடாதிபதியை நாம் பாராட்ட வேண்டும்.” என்று கூறினார். தினகரன் (11.21998)

1995ல் பாக்கிஸ்தானில் இடம் பெற்ற சர்வதேச மாநாடொன்றில் பேராசிரியர் இமாமுடன் கலாநிதி காலிதீனும் கலந்து கொண்டார். அப்போது இவை எல்லாவற்றையும் விட மிகப் பேறாகவும், பெரிய காரியமொன்றை நிறைவேற்றிய பெருமையாகவும், இதயபூர்வமாக மனமுவந்து ஏற்று சந்தோஷப்பட்டு கொள்வதும் இவருக்குப் போதித்த பேராசிரியர் எஸ்.ஏ. இமாம் அவர்களுடன் அவரது சொந்த இடமாகிய “பாக்கிஸ்தான் ஹொலிடேயின்” ஹோட்டலில் ஒரு வாரம் இருவரும் தங்கியிருந்ததைப்பற்றியும், அவருடன் பரிமாறிக் கொண்ட கருத்துக்களைப் பற்றியும் பின்னர் இரண்டு வாரங்களுக்குப் பின் அவர் மரணமான செய்தி பற்றியும் நமக்கு போதித்த ஆசானுடன் கழித்த நிகழ்வுகளைக் கூறி இறுதி வரைக்கும் ஆசானுக்குச் செய்யக் கூடிய கடமைகள் தமக்குக் கிடைத்ததையிட்டு பெரும் பாக்கியமெனக் கொண்டு மனத்திருப்தி அடைகின்றார்.

இவர் சேவை என்ற இலட்சியத்தை மேற்கொண்டதால் மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வாய்மொழிக் கேற்ப ஏனைய அருங்குணங்கள் அனைத்தும் தானாகவே இவர் வாழ்க்கையில் பொருந்திக் கொண்டன. இருப்பினும் இவர் பழைய நிகழ்வுகளைக் குறிப்பிடும் போது இடம், நாள் ,சூழ்நிலை முதலியவற்றை அவ்வாறே தெளிவாக மனதில் பதிய வைத்திருந்து நிழற்படம் போல் எல்லாவற்றையும் அப்படியே அவ்வாறு எடுத்துரைக்கும் நினைவாற்றல் பெற்றவர்.

தேவை எனக்கருதி தங்களைப் பற்றி எழுதப்போகின்றேன் என்று அவரிடம் கேட்டேன். அவர் தனக்கு யாதுமே நினைவில்லை என்று விரும்பாத எண்ணத்துடன் மறுத்து விட்டார். எவ்வாறாயினும், இவரை வலுக்கட்டாயப்படுத்தி பெற்ற சில தகவல்களை மட்டும் கிள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ந்து எழுதிய நுண்ணிய சான்றாதாரங்கள்தான் இவை. கல்வியிலும், ஆன்மீக ஒருமைப் பாட்டிலும், அன்பிலும், பண்பிலும் ஈகையிலும், அறத்திலும், அரசியலிலும் தலைசிறந்த சீலராகத் திகழ்கின்றார் என்றால் அது மிகையாகாது.

எனவே காலாநிதி காலிதீன் இந்த நூற்றாண்டின் இணையற்ற புருஷர். இவர் ஆற்றிய சேவைகள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படுதல் வேண்டும். உலக மாந்தரின் வாழ்வோடு இவரது வாழ்வும் பணியும் காலத்தை வென்று நிற்பதால் காலம் இவர் ஆயுளைக் கட்டிக் காக்கும் என்பது நிச்சயம். கலாநிதி காலிதீன் அவர்களின் நற்பணியை நெஞ்சாரப் பாராட்டி மேலும் பல தொண்டுகள் புரிந்து வாழ வாழ்த்துகின்றேன்.

இவர்கள் என்றும் என்னுடன்

| | |
|---|---|
| ஏ.எச் சித்தீக் காரியப்பர் | (தினகரன்) |
| வி.தேவராஜ் | (வீரகேசரி) |
| லீலா ராமையா | (தினகரன்) |
| எம்.எஸ் மீராசாயிபு | |
| ஆர்.சதீஸ் குமார் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாழ்க்கையின் முகவரி தொலைந்தவர்களாகவும்......, அகதிகளாகவும்,.. என் உள்மனக் கவியாத்திரை மகோன்னதமிக்க பாரதி அடிச்சுவட்டினைக்கொண்டு சத்திய எழுத்துக்களை நிரந்தரமாக்க முனைந்துள்ளன..." என்ற மனிதநேயப் பிரகடனத்துடன் தனது "முற்றத்திற்கு வாருங்கள்" எனும் கவிதைத் தொகுதியினை தமிழுலகிற்குத் தந்து ஒரு இளம் கவிஞர்தான் இந்த இக்பால் அலி.

நறுக்கென்று துணிந்து சொல்ல-எழுத முனையும் இந்த இக்பால் அலி, தான் சார்ந்த சமூகத்தின் பல்துறைசார் நிகழ்வுகளையும் கண்டும், கேட்டும், அறிந்தும் வைத்திருப்பதோடு மட்டுமல்லாமல் முழு உலகிற்கும் அவற்றைப் பிரகடனப்படுத்த வேண்டுமென்ற ஒரு வித்தியாசமான துணிச்சல்காரர்.

வரையறைகளை, எல்லைகளைத் தாண்டிய இவரது அவதானிப்புக்களின் வீச்சு, ஒரு தேசிய மட்ட எழுத்தாளனென்ற பண்பையும், உணர்வையும் எமக்கு நிரந்தரமாக்கித் தருகிறது. 1996ம் ஆண்டு அரச கரும மொழிகள் திணைக்களம் நடாத்திய தேசிய படைப்பிலக்கியத்திற்கான தெரிவில் "முற்றத்திற்கு வாருங்கள்" எனும் நூல் அரசவிருதினைப்பெற்றது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் 29வது மாநாட்டினையொட்டி நடத்தப்பட்ட கவிதைப்போட்டி என்று பலதரப்பட்ட விருதுகளையும் பெற்ற இக்பால் அலி, இதுவரை சுமார் 35க்கும் மேற்பட்ட நூல் வெளியீடு, அறிமுக விழா என்று நடாத்திவரும் கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் செயலாளராகவும், கண்டி இலக்கிய செய்தி மடலின் இணை ஆசிரயராகவுமிருந்து மலையக மண்ணில் தன்னிகரற்ற தமிழ்த் தொண்டு செய்துவருவதுடன், பேராசிரியர் கைலாசபதி ஆய்வமையத்தின் செயற்குழு உறுப்பினராகவும், இலங்கை தென்கிழக்கு ஆய்வமையத்தின் தலைவராகவும் அல்லாமா இக்பால் ஞாபகார்த்த மாநாட்டு மதியுரைக் குழுவின் இணைச்செயலாளராகவும் பல வரலாற்று நிகழ்வுகளில் தடம் பதித்து வருகிறார். இவற்றுடன் தென்கிழக்கு ஆய்வமைய இலக்கிய மடலின் பிரதம ஆசிரியராகவும், ஒரு பத்திரிகையாளராகவும், சமூக சேவையாளராகவும் தனது திறமைகளையும், ஆளுமையையும் வெளிப்படுத்தி வருகின்றார்.

ஒரு எழுத்தாளனுக்கு, கவிஞனுக்கு, சமூக சேவகனுக்கு என்ற எல்லாவித தகைமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ள இக்பால் அலியின் மனத்தை முகத்தில் காட்டும் களங்கமற்ற புன் சிரிப்புத்தான் அவரின் வெற்றிகளின் இரகசியங்களாகும்.

ஒரு பிரகாசமான, மானுட நேயத்தின் மறுபதிப்பாக இக்பால் அலியின் ஒவ்வொரு முயற்சிகளும் முன்னெடுக்கப்பட வேண்டியதுடன், நீதிக்கும், சமத்துவத்துக்குமாக இவரது எழுத்துக்கள் இலக்காக்கப்படவும் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

சவால்கள் நிறைந்த புதியதோர் யுகத்திற்காகப் பிறந்துள்ள ஒரு மானுடவாதியை இனங்காட்டுவதில் எனக்கு ஏராள மகிழ்ச்சிகள்.

அ.அஸ்உறர் (Dip. in Mass Media & Law)
"மாளிகா" பிரதம ஆசிரியர்

ISBN: 955-8194-01-8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org